கல்கி

KALKI 14.5.2000 ரூ. 5.00





'பொத்துக்கிட்டு வருது!' — ஷர்மிளா



'வல்லரசு' வாசு!



இவர் வேறு ஜேப்பியார்!

# வாள் பிடித்த அனுராதா!

# நாற்காலிக் கனவுகள்!

'என் உடம்புக்கு ஒன்றுமில்லை. நான் சௌக்கியமாக இருக்கிறேன்' என்று கடந்த வார செய்தித்தாள்கள் எல்லாவற்றிலும் பிரதமர் வாஜ்பேயி லவுட் ஸ்பீக்கரில் கத்தாத குறையாக அறிக்கை விட்டாரல்லவா? இன்னும் கொஞ்ச நாளைக்கு இந்த "ஐ'ம் ஃபைன்" அறிக்கை அவ்வப்போது வெளிவரும்!

காரணம், 'ஏதாவது நேர்ந்து' விட்டால் நாற்காலியைப் பிடிப்பதற்குத் தலைவர்கள் இப்போதே செயலில் இறங்க ஆரம்பித்து விட்டதுதான்!


வாஜ்பேயிக்கு ஒரு சிறுநீரகம்தான் இயங்குகிறது, புற்றுநோய் உள்ளது, பேசவே முடியாத அளவுக்குத் தொண்டையில் பிரச்னை - இன்னபிற மருத்துவ ரீதியிலான வதந்திகள் பலமாக வரத் தொடங்கவும், ஏதாவது ஆகி விட்டால் அத்வானி பிரதமராவார் என்று பி.ஜே.பி வட்டாரத்தில் ஆளாளுக்குப் பேசி வருகிறார்கள்.

இதற்குத் தோதாக, அத்வானியும் ஆர்.எஸ்.எஸ்.ஸை நெருங்கி வருவது போலத் தெரிகிறது. பாராளுமன்றத்தில், 'இந்திய முஸ்லிம்கள் தம் தேச பக்தியை நிரூபிக்க வேண்டும்' என்ற ரீதியில் பேசி, சர்ச்சை உண்டாக்கியதே இதற்காகத்தான் என்கிறார்கள் அரசியல் வல்லுநர்கள்.

மறுபுறம், ஜார்ஜ் ஃபெர்ணாண்டஸ் பிரதமர் பதவிக்கான முயற்சிகளில் இறங்கி விட்டார் என்கிறார்கள். முதலில் 'தமது கட்சிக்கு (சமதா) தனி இருக்கை ஒதுக்க வேண்டும்' என்கிற விண்ணப்பத்தைச் சபாநாயகரிடம் அளித்து விட்டார். இது, 'சமதா - ஐக்கிய ஜனதா தளம் - லோக் சக்தி இணைப்பு' என்ற பேச்சுக்கு சமாதி கட்டிவிட்டது!


ஜார்ஜுக்கு ஒருபடி மேலே போய், 'அவர் பிரதமராகிற பட்சத்தில் ஆர்எஸ்எஸ் நிச்சயம் ஆசீர்வாதம் அளிக்கும்' என்று செய்தி பரப்பத் தொடங்கிவிட்டனர், அவரது தொண்டரடிப்பொடிகள்.











தலித் இனத்தின் 'ஒரே' பாதுகாவலரான ராம்விலாஸ் பாஸ்வான் சும்மா இருப்பாரா? தில்லியில் தலித் சேனா மாநாடு ஒன்றை நடத்தி, தலித் சேனையை ஒரு அரசியல் கட்சியாகவே மாற்றிவிடலாம் என்றொரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த ஏற்பாட்டின் மூலம் பிற கட்சிகள் ஆதரவு தெரிவிப்பதில் சிக்கல் வராது என்று கணக்குப் போடுகிறார் பாஸ்வான். அதாவது தலித் வோட்டு வங்கியைக் குறி வைக்கும் எந்தக் கட்சியும் இவர் பிரதமராவதை ஏற்றுக் கொள்ள மறுக்காது என்கிற நம்பிக்கை!

இவர்களெல்லாம் இப்படிக் கபடி ஆடும்போது, சும்மாயிருப்பாரா நாயுடுகாரு?

"தேசத்தை இப்போதே 22ம் நூற்றாண்டுக்கு அழைத்துப் போய் விடுவார் எங்கள் தலைவர்" என்று தில்லியில் கூடாரம் போட்டுப் பிரசாரம் செய்து வருகிறார்கள் தெலுங்கு தேச எம்.பிக்கள்.

ஆகவே -

முதல் பேராவின் கடைசி வரியை மறுபடியும் படியுங்கள்!

தில்லியிலிருந்து: **வெங்கட்**

# வெள்ளை நிலம் – கறுப்புத்

நிலவிஷயத்தில் பங்காளிச் சண்டை வருவது நம் ஊரில் சகஜம். இப்போது ஜிம்பாப்வே நாட்டில் வந்திருக்கிறது. வெள்ளையருக்குச் சொந்தமான நிலங்களில் கறுப்பர்கள் போய் முற்றுகையிடுகிறார்கள். 'மரியாதையாக நடையைக் கட்டு. நிலம் எங்களுக்குச் சொந்தமாக்கும்' என்று மிரட்டுகிறார்கள். மீறி ஏதாவது பேசினால், தமிழ்ப்பட வில்லனின் ஆட்கள் செய்வது மாதிரி அந்த நிலங்களுக்குத் தீ வைத்து விடுகிறார்கள். வெள்ளைக்காரப் பண்ணை முதலாளிகளைச் 'செமை'யாகச் சாத்துகிறார்கள். அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது?

'செய், நயினா' என்று ஜாலியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது!

ஏன் இப்படி?

பொருளாதார ரீதியில் ஏற்கெனவே பாதாளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் ஜிம்பாப்வே நாட்டில் அரசுக்குத் தலைவலி மேல் தலைவலி. முக்கியமாக மூன்று.

ஐ.எம்.எஃப். தருவதாகச் சொல்லியிருந்த கடனைத் தராமல் கைவிரித்ததால் ஜிம்பாப்வே டாலரின் மதிப்பு ரொம்பவும் குறைந்து போனது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து ஜிம்பாப்வே விடுதலை பெற்றது. அந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பெருந்தொகையைப் பென்ஷனாகத் தருவோம் என்று அரசு அறிவித்தது. (கஜானா காலி. எங்கிருந்து தர முடியும்?) இது போதாது என்று அண்டை நாடான காங்கோவுக்கு ராணுவ உதவி தருவதாக வாக்குறுதி வேறு. (தனக்கே மிஞ்சவில்லை. தருமம் எப்படி?)

இந்த நிலையில் அதிபர் ராபர்ட் முகபேயின் பதவிக் காலம் முடிந்து (அவரது பதவிக்காலம் என்பதை விட பாராளுமன்றத்தின் காலம் என்பதுதான் சரி) விரைவில் தேர்தல் வரப் போகிறது.

அதில் தான் எப்படியும் வென்றாக வேண்டும் என்ற வெறி முகபேவுக்கு அதிகமாகவே இருக்கிறது. ஜிம்பாப்வே நாட்டின் விடுதலைப் போரில் கலந்து கொண்ட வீரர்கள்தான் இப்போது 'வெள்ளையர் நில ஆக்ரமிப்பு'ப் போரில் கதாநாயகர்கள்!

"இந்த நிலங்களெல்லாம் எங்கள் மக்களுக்கே சொந்தம். உன் ஆட்சிக் காலத்தில் ஏதோ நாங்கள் ஏமாந்திருந்தபோது எங்கள் மண்ணைக் கொள்ளை அடித்துக் கொண்டாய். அப்படியே பணம் கொடுத்து வாங்கியிருந்தாலும் நீ கொடுத்த விலை மிக மிகக் குறைவு. இடத்தைக் காலி பண்ணு" என்பது அவர்களின் வாதம்.

பேச்சே கிடையாது. அதிரடி நடவடிக்கை தான். நாடு முழுவதும் கிட்டத்தட்ட அறுநூறு விவசாயப் பண்ணைகளில் இப்போது கறுப்பர்கள் முற்றுகையிட்டு அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள். கையில்



• முகபே

உருட்டுக் கட்டை, கடப்பாறை, கோடாரி இல்லாத முன்னாள் விடுதலைப் போராட்ட வீரர்களே இப்போது காணப்படவில்லை!

"என் வீட்டுக் கண்ணாடி ஜன்னலை இப்போது உடைத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே எப்படி?" என்று வெள்ளை பண்ணையார்கள் வாக்கிடாக்கியில் ஒருவருக்கொருவர் கண்களில் பீதியுடன் விசாரித்துக் கொள்வது இப்போது ஜிம்பாப்வேயில் சர்வசாதாரணக் காட்சி.

நிலங்களை மொத்தமாக வாங்கி நிலமில்லாத மக்களுக்கு மீண்டும் சரியாகப் பிரித்துக் கொடுக்க நஷ்டஈடு கொடு என்று இங்கிலாந்து அரசை வற்புறுத்துகிறார் முகபே.

'எங்கள் ஆட்களை வெட்டிச் சாய்ப்பாய்.



• ஜிம்பாப்வேவில் இப்ப இது சகஜம்!

ஓர் ஒப்பந்தத்தின்படி இங்கிலாந்து பணம் கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறது.

'முதலில் சமாதானமாக இரு. பிறகு பார்ப்போம்' என்கிறது இங்கிலாந்து.

இந்த நிலையில் தனது சக ஆப்ரிக்க நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தை முகபே கூட்டினார்.

தென் ஆப்பிரிக்காவின் அதிபர் எம்பெகி, நமிபியாவின் நுஜோமா, மொஸாம்பிக்கின் சிஸானோ, ராபர்ட் முகபே ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

'நீ இப்படி நிலங்களை ஆக்ரமிப்பு செய்வது தப்பு' என்று முகபேயை மற்றவர்கள் எச்சரிப்பார்கள் என்றுதான் உலகம் எதிர்பார்த்தது. ஆனால் 'சபாஷ்' என்று சொல்லாத குறையாக அவர் முதுகில் அந்தக் கூட்டம் தட்டிக் கொடுத்தது உலக சமாதானப் பிரியர்களுக்கு ஒரு அதிர்ச்சிதான்!

உலக நாடுகள் ஒன்று திரண்டு ஜிம்பாப்வேக்கு எதிராக ஏதாவது கோஷமிடலாம்; தீர்மானம் இயற்றலாம்; பயமுறுத்தலாம். அல்லது இவை எதுவுமே நடக்காமலும் போகலாம்.

இன்றைய நிலையில்

# தாக்குதல் – சிவப்பு ரத்தம்!

நாங்கள் அதற்குப் பணம் கொடுக்க வேண்டுமாக்கும்' என்கிறார் டோனி பிளேர்.

ஆனால் உண்மையில் ஜிம்பாப்வே விடுதலையின் போது நில நஷ்டஈடு சம்பந்தமான ஒன்று மட்டும் நிச்சயம். வரும் தேர்தலில் ஜிம்பாப்வே விடுதலைப் போர் வீரர்கள் அத்தனை பேரும் முகபேவுக்கு நிச்சயமாக வோட்டு போட்டு விடுவார்கள்!

— ராணிமைந்தன்

"வந்த புதிதில்
என்னால் இந்தத்
தனிமை, பயிற்சியின்
கடுமை
இரண்டையும் தாங்க
முடியவில்லை. நான்
ரொம்பவும் ஹோம்
சிக் ஆனேன்."



ஏப்ரல் 28ம் தேதி மாலை.

அசோக் நகரில் காவல்துறை பயிற்சிக் கல்லூரி திருவிழாக் கோலம் பூண்டிருந்தது.

கடந்த ஒரு வருடகாலமாக ஆளைச் சக்கையாகப் பிழிந்தெடுக்கும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து, அந்த 142 இளம் பெண் சப்-இன்ஸ்பெக்டர்களும் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பும் குஷியில் இருந்தார்கள். உள்ளே தோழிகளிடம் கண்ணீர் மல்க விடைபெற்றுக் கொண்டு, வெளியே காத்திருந்த உறவினர்களை ஆனந்தக் கண்ணீரோடு அணைத்துக் கொண்டார்கள்.

'அனுராதா எங்கே?'- என்று கேட்டதுதான் தாமதம், 'இதோ வரச் சொல்றோம்' என்று உடனே மாடிக்குச் செய்தி பறந்தது.

இந்தப் பயிற்சிக் குழுவில் அனுராதாதான் ஹீரோயின்! அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்து விளங்கி வீரவாள் பரிசு பெற்றவர். எல்லோருக்கும் செல்லப்பெண்.

கோவை கவுண்டம் பாளையம் சொந்த ஊர். ரசாயனத்தில் எம்.எஸ்ஸி. பட்டம் பெற்ற பின்பு, சப்-இன்ஸ்பெக்டராக ஆகியிருக்கிறார்.

''எம்.எஸ்ஸி பட்டதாரிக்கு எப்படி சப்-இன்ஸ்பெக்டர் ஆகும் ஆசை வந்தது?''

''என் தந்தை லட்சுமி நாராயணன் போலீஸில் இன்ஸ்பெக்டராக இருந்தவர். அந்த மிடுக்கும், அவர் பணியாற்றிய விதமும் என்னுள் நாமும் போலீசில் சேர வேண்டும் என்ற ஆசையை விதைத்தன.''

''சரி, அதற்கு ஏன் எம்.எஸ்ஸி படித்தீர்கள்?''

''ஆசை இருந்ததே தவிர முடிவு செய்யவில்லை. எனக்கு எப்போதுமே விஞ்ஞானத்தில் ஆர்வம். எனவே முதலில் அதைப் படித்தேன். பிறகு சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்குத் தேர்வு பெற்றேன்.''

''ஒரு வருடம் கடினமான பயிற்சி என்கிறார்களே, உண்மைதானா?''

''மிகக் கடினமான பயிற்சி. காலை நாலே முக்காலுக்கு எழுந்து ஐந்தரைக்கெல்லாம் உடற்பயிற்சி மைதானத்துக்கு வந்துவிட வேண்டும். உடற்பயிற்சி முடிந்ததும் சில நிமிட நேரத்தில் ரூமுக்கு ஓடி 'யூனிபார்ம்' போட்டுக் கொண்டு ஓடி வர வேண்டும். ஒன்பதரை மணிவரை பரேட். டிபன் முடிந்தவுடன் சட்ட வகுப்புகள். பன்னிரண்டே முக்கால் வரை அது போகும். பிறகு சாப்பாடு. இரண்டரை முதல் நான்கு மணி வரை மீண்டும் லா கிளாஸ். நாலரையிலிருந்து ஆறுவரை மறுபடியும் பரேட். அப்புறம் விளையாட்டுகள். இரவு எட்டரை மணிக்கு மேல் ரெஸ்ட் என்று பெயர்தான். ஆனால் மறுநாளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். ஷூ பாலீஷ், பெல்ட் பாலீஷ் இப்படி. எல்லாம் படு நேர்த்தியாக இருக்க வேண்டும். நாங்கள் பெண்கள் என்பதற்காக எந்தச் சலுகையும் இல்லை. ஆண்களுக்குத் தரப்படும் அவ்வளவு பயிற்சிகளும் எங்களுக்கும் உண்டு.''



• பெற்றோருடன்...

# வாள் பிடித்த அனுராதா!

"உங்களால் தாங்க முடிந்ததா? வீட்டு ஞாபகம் வரவில்லையா?"

"வந்த புதிதில் என்னால் இந்தத் தனிமை, பயிற்சியின் கடுமை இரண்டையும் தாங்க முடியவில்லை. நான் ரொம்பவும் ஹோம் சிக் ஆனேன். ஆனால் போலீஸ் வேலைதான் வாழ்க்கை என்று தேர்ந்தெடுத்தாயிற்று. பிறகு குடும்பத்தை நினைத்தால் எப்படி?' என்று தினமும் எனக்கு நானே சொல்லிச் சொல்லி வெற்றி கொண்டேன்!"

"எதற்காக உங்களுக்கு வீரவாள் பரிசளித்தார்கள்?"

"குற்றவியல் மருத்துவம்- ஃபாரன்ஸிக் மெடிசின்-பயிற்சியில் முதலாவதாக வந்தேன். ஐந்நூறு ரூபாய் ரொக்கப் பரிசு கொடுத்தார்கள். குற்றவியல் அறிவியலில் இரண்டாவது.



**"என் சம்சாரம் பயங்கரமா நச்சரிக்கிறா!"**

**"என்ன விஷயம்?"**

**"என் அம்மாவைக் கொண்டு போய் ராஜஸ்தானிலேயோ, குஜராத்லயோ விட்டுட்டு வரணுமாம்!"**

**– ஜூனியர் சக்தி**

அதே போல் போலீஸ் நிர்வாகம், போலீஸ் கடமைகள் பிரிவில் சிறப்பிடம் பெற்றேன். சைக்காலஜி கிரிமினாலஜி எனப்படும் மனோதத்துவ இயல் குற்றவியலிலும், ஆயுதப் பயிற்சியிலும் (வெப்பன் டிரெயினிங்) சிறப்பாகத் தேறினேன். இப்படி அனைத்திலும் நான் காட்டிய திறமைக்காக என்னை பெஸ்ட் ஆல்ரவுண்டராகத் தேர்வு செய்து வீரவாள் கொடுத்தார்கள். என் பெருமைக்குரிய தருணம் அது."

வீரவாளை உறையிலிருந்து உருவி எடுத்து வாஞ்சையுடன் அதைப் பார்த்தார் அனுராதா.

"ஒரு வருடத்துக்கு முன்பு பயிற்சியில் சேரும்போது இருந்த அனுராதாவுக்கும், ஒரு சப்-இன்ஸ்பெக்டராக வெளியேறும் அனுராதாவுக்கும் வித்தியாசம் இருக்கிறதா?"

"ஒரு குழந்தை போல் இங்கு வந்தேன். இந்தப் பயிற்சி என் மனதையும், உடலையும் மிகச் சிறப்பாகப் பண்படுத்தியிருப்பதை முழுக்க முழுக்க என்னால் உணர முடிகிறது. துணிச்சல், தன்னம்பிக்கை, உடல் உறுதி கொண்ட அனுராதாவாக நான் இப்போது மாறியிருக்கிறேன்."

"கல்யாணம் பற்றி? வருகிறவர் 'போதும் நீ சப்-இன்ஸ்பெக்டராக இருந்தது' என்று சொல்லிவிட்டால்?"

"அப்படிப்பட்டவரை என் அப்பா எனக்காகத் தேர்ந்தெடுக்க மாட்டார் என்ற நம்பிக்கை இருக்கிறது. நானும் அப்படிப்பட்ட ஆளுக்கு ஓ.கே. சொல்ல மாட்டேன்."

"உங்களுக்கு யார் ரோல் மாடல்?"

"யாருமில்லை. ஆனால் மற்றவர்களுக்கு நான் ரோல்மாடலாக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது."

"எம்.எஸ்ஸி ரசாயன அறிவு இனி துருப் பிடிக்க வேண்டியதுதானா?"

"யாராவது மாணவிகள் சந்தேகம் கேட்டு வந்தால் தீர்க்கலாமே! அப்படி யாராவது வந்தால் நிச்சயம் உதவுவேன்."

"புத்துணர்ச்சியுடன், இளம் ரத்த வேகத்தில், சாதிக்கும் வெறியில், பொறுப்பேற்க வெளியே போகிறீர்கள். ஆனால் காவல் துறையின் ஊழல் முதலை வாயைத் திறந்திருக்கும் போது அதில் காலை விட்டு மாட்டிக் கொள்ள மாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்?"

"நிச்சயம் ஊழல் செய்ய மாட்டேன். லஞ்சம் வாங்க மாட்டேன். அவ்வளவுதான் சொல்ல முடியும். காலம்தான் இதை நிரூபிக்கும்."

"கோபித்துக் கொள்ளாதீர்கள். சதை போடுவதும், தொப்பை வளர்வதும் ஆண் போலீஸாருக்கு சர்வசாதாரணமாகிப் போய் விட்டது. பெண் போலீஸில் கூட சீனியர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கும் சதை போட்டு உடல் பருத்திருப்பதைக் காண முடிகிறது. நாளடைவில் அனுராதாவுக்கும் அதே நிலைதானோ?"

"இங்கு தரப்பட்ட பயிற்சி என் உடலைப் பக்குவப்படுத்தியிருக்கிறது. நான் ஒரு போலீஸ் அதிகாரி என்ற நினைவுடன் என்றும் ட்ரிம்மாக என் உடலைப் பாதுகாப்பேன்."

"ஒரு ஐந்து வருடங்கள் கழித்து உங்களை எங்கேயாவது பார்க்காமலா போய் விடுவேன்? அப்போது கேட்கிறேன்!"

"சாலஞ்ச்! நீங்கள் நிச்சயம் தோற்றுப் போவீர்கள்."

சந்திப்பு: **ராணிமைந்தன்**

அட்டை வண்ணப்படம்,

படங்கள்: **ஸ்ரீஹரி**

# வேதாந்த வகுப்பு





சின்மயா இயக்கமானது உலகளாவிய ஆன்மீக நிறுவனமாகும். இது பூஜ்ய ஸ்வாமி சின்மயானந்தா அவர்களால் 1951-ல் தொடங்கப்பட்டது. பூஜ்ய ஸ்வாமிஜி அவர்கள் 1963-ல் சாந்தீபனி என்ற அறிவாலயத்தைத் தொடங்கினார். இங்கு இறையுணர்வை உண்மையாக நாடுபவர்களுக்கு வேதாந்த ஞானம் அளிக்கப்படுகிறது. இந்த சாந்தீபனிகளில் 500-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

சின்மயா இயக்கத்தின் தலைவர் பூஜ்ய குருஜி ஸ்வாமி தேஜோமயானந்தாஜி அவர்களால் ஆகஸ்ட் 31, 2000 அன்று துவக்கி வைக்கப்படும் கோவை சின்மயா கார்டன் சாந்தீபனி வித்யாமந்திர் வேதாந்த வகுப்புகளில் சேர 20 வயதுக்கு மேல் 30 வயதுக்குட்பட்ட, திருமணமாகாத ஆண், பெண் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வேதாந்தம் படிக்க உண்மையான ஆர்வமுள்ள, குடும்பப் பொறுப்புகள் இல்லாத நம் ரிஷிகளின் உபதேசங்களைப் பரப்பும் நோக்கம் கொண்டவர்களே இதற்கு விண்ணப்பிக்கலாம். இவை ஆசிரமத்தில் தங்கிப் பயிலும் இரண்டாண்டுப் பயிற்சி வகுப்புகள். இப்படிப் பயிலும் காலத்தில் விடுப்போ விடுமுறையோ கிடையாது. பயிற்சி மொழிகளாக ஆங்கிலமும், தமிழும் இருக்கும். பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு உணவு, உறைவிடம், புத்தகங்கள், துணிமணிகள், மருத்துவச் செலவுகள் ஆகியன இலவசமாக நிறுவனமே அளிக்கும்.

பயிற்சி முடித்த மாணவர்கள் சின்மயா இயக்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு மையங்களில் உறைந்து சேவை புரிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுவார்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் ஜூன் 15, 2000 தேதிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

அஞ்சல் மூலம் செய்தி கிடைத்தபின் மாணவர்கள் தங்களிடத்திற்கு அருகிலுள்ள சின்மயா இயக்க மையத்திற்கு நேர்காணலுக்கு வரவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படும். குறிப்பிட்ட தேதியில் அவர்கள் வகுப்பில் சேர வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்:

**செயலர், சாந்தீபனி வித்யாமந்திர், சின்மயா கார்டன், நல்லூர் வயல் போஸ்ட், சிறுவாணி சாலை, கோயமுத்தூர் - 641 114**
போன்: 0422 - 815637 ஃபேக்ஸ்: 0422 - 815725 e-mail:cgardens@md3.vsnl.net.in

# 'வல்லரசு' வாசு!

"என்ன சார், திடீர்னு நடிக்க ஆரம்பிச்சிட்டீங்க? நீண்டநாள் கனவா?'' என்றோம் இயக்குநர் பி. வாசுவிடம். 'வல்லரசு'வில் வில்லனாக வந்தாலும் நடிப்பில் ஹீரோவாகவே அவர் ஜொலித்ததன் விளைவாக, தியேட்டரிலிருந்து நேரே வாசு வீட்டுக்குப் போய் விட்டோம்!

"பத்து வயதாக இருக்கும்போது நடிப்பு எனக்குள் தீப்பற்றிக் கொண்டது. அதற்குக் காரணம் எனது தந்தை பீதாம்பரம்தான். அவர் ஒரு புகழ்பெற்ற ஒப்பனைக் கலைஞர். எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர் போன்றவர்களுக்கு ஆஸ்தான மேக்கப் மேனாக விளங்கியவர். புகழ்பெற்ற நடிகர்கள் எல்லாம் அன்று எங்கள் வீட்டிலே கூடி, வரிசையில் காத்திருந்து, என் தந்தையிடம் மேக்கப் போட்டுச் செல்வார்கள். இரவு பகல் எப்போதும் எங்கள் வீடு நடிகர்களால் நிரம்பி வழியும். அவர்களைப் பார்த்துப் பார்த்து எனக்குள் இருந்த நடிகன் விழித்துக் கொண்டான். நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்த பிறகு பல கோணங்களில் என்னைப் புகைப்படம் எடுத்துக் கொண்டு, பல இயக்குனர்களிடம் வாய்ப்புத்தேடி அலைந்தேன். யாரும் கொடுக்கவில்லை. என் ஆர்வத்தைக் கண்ட என் தந்தை, இயக்குநர் ஸ்ரீதரிடம் உதவி இயக்குனராகச் சேர்த்து விட்டார். அவரோ, இப்போதைக்கு எனக்கு உதவியாக இரு; பிறகு நானே உன்னை நடிகனாக்குகிறேன் என்றார்."

**"ஸ்ரீதர் இயக்கத்தில் நடித்தீர்களா?"**

"இல்லை. ஆனால் எனக்குத் திருப்பு முனை கொடுத்தது, ஸ்ரீதர்சாரின் ஆளுமைதான். படப்பிடிப்பில் நடிகர்களுக்கு முன்னால், அவர் நடித்துக் காட்டுகிறபோது, ஒரு இயக்குனர் ஒவ்வொரு ஹீரோவுக்கும் முன்னால், ஒரு ஹீரோவாக இருப்பதை உணர்ந்து கொண்டேன். சினிமாவில் ஒரு நடிகனாக நமது நடிப்பைக் காட்ட முடியாவிட்டால் என்ன, நமது கதையில் காட்டலாம். நமது கேரக்டர்களில் காட்டலாம், நடிகர்கள் முன்னால் காட்டலாம். நடிப்பைக் கற்றுக் கொடுக்கலாம் என்று இயக்குனரின் உயர்ந்த இடத்தை உணர்ந்து கொண்டேன்."

**''ஆனால் முன்னணி நடிகர்கள், தங்களது தனிப் பாணி நடிப்பில் இயக்குனரின் பாதிப்பை ஏற்றுக் கொள்வதில்லையே?''**

''அப்படிச் சொல்ல முடியாது. எனது இயக்கத்தில் நடித்த யாருமே நீங்கள் நடிக்காதீர்கள், நாங்களே நடித்துக் கொள்கிறோம் என்று சொன்னதில்லை. ரஜினிகாந்த்கூட நான் நடிப்பதை கவனமாகப் பார்ப்பார், அவரது பாணிக்கு அதை மாற்றிக் கொள்வார். முன்னணிக் கலைஞர்கள் அத்தனை பேரும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஒரு இயக்குனரால் ஒரு தாயாக,






மனைவியாக, காதலியாக, போஸ்ட்மேனாக, ஒரு பிச்சைக்காரியாக நடிக்க முடியும். சின்னத்தம்பி படத்தில், நான் என்ன செய்து காட்டினேனோ அதை அப்படியே குஷ்பு நடித்தார். நடிப்பின் தொடக்கத்தில் இருப்பவர்கள் இயக்குனரை அப்படியே பிரதிபலிப்பார்கள். சில புதுமுகங்கள் தொடக்கத்திலேயே விதிவிலக்காக ஜொலிப்பார்கள்."

**"சின்னத் தம்பியாக இருந்தாலும் சரி, செந்தமிழ்ப்பாட்டாக இருந்தாலும் சரி, விதவைத் தாய்மார்கள் மீது உங்களுக்கு அப்படி என்ன கோபம்? வெள்ளைப் புடைவையில் மஞ்சள் சாயம் ஊற்றுவது, தலைமுடியை அறுப்பது என ஆபாசத்தை விடவும் கொடூரமான விஷயங்களை எப்படி உங்களால் படம் எடுக்க முடிகிறது?"**

"உங்களைப் போன்ற நான்கு பேருக்கு பயந்தே அதுபோன்ற பாத்திரங்களை அடியோடு தலை முழுகிவிட்டேன்! ஆனால் ரசிகர்கள் அதுபோன்ற படங்களைத்தான் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள் என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது! இனி ரசிகர்களின் ரசனையை மாற்றுவதற்கான முயற்சியில் ஒரு இயக்கமாக சேர்ந்து செயல்பட வேண்டும். ஒருவரால் மட்டும் அது முடியாது. வியாபார சினிமாவில், தயாரிப்பாளர்களும், சமூகத்தை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். விரைவில் ரசனையில் மாற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம்."

**"வல்லரசு படத்திற்கு முன்பு, உங்களை யாரும் நடிக்கக் கூப்பிடவில்லையா?"**

"ஒருமுறை பாரதிராஜாவிடம் கதை சொல்வதற்காகச் சென்றிருந்தேன். என்னிடம் கொஞ்ச நேரமே கதைகேட்ட அவர், எழுந்துபோய் முகம் கழுவிட்டு வந்து என்னைப் பார்த்தார். நீ இயக்க வந்தவன் அல்ல. நீ தயவு செய்து நடி. நேரத்தை ஏன் வீணாக்குகிறாய்? என்று உணர்ச்சி வசப்பட்டு என்னைக் கட்டிக் கொண்டார்.



## கோடீஸ்வரர் யார்?

அமிதாப் பச்சன் - மில்லெனியத்தின் சூப்பர் ஸ்டாராக பி.பி.சி. நேயர்கள் தேர்ந்தெடுத்த நட்சத்திரம்! சின்னத் திரைக்கு மாறவிருக்கிறார். ஸ்டார் பிளஸ் நிகழ்ச்சியான 'கோன் பனேகா குரோர்பதி' (கோடீஸ்வரனாகப்போவது யார்?) ஜூலை மாதம் முதல் ஒளிபரப்பாகவிருக்கிறது. இதில் தொகுப்பாளராகத் தோன்றப் போகிறார் அமிதாப். ஒரு 'எபிசோட்' பட்ஜெட் 5-6 லட்சங்கள்! குவிஸ் நிகழ்ச்சியில் பரிசுகள் பத்தாயிரம் ரூபாயில் ஆரம்பித்து உயர்கின்றன. அமிதாப் பெறப்போகும் சன்மானம் என்ன...? கேட்டால் சீறுகிறார் சூப்பர் ஸ்டார்: ''நீங்கள் என்ன என் ஆடிட்டரா? அல்லது இன்கம் டாக்ஸ் அதிகாரியா?''

அவ்வளவு பெரிய டைரக்டரிடம் நாம் என்ன நடிக்கப் போகிறோம் என்று நினைத்துக் கொண்டேன். பார்த்திபனும் பார்க்கும் போதெல்லாம் என்னைக் கேட்டுக் கொண்டிருப்பார். என்னை மிகவும் வற்புறுத்தியவர் என்றால் அது சத்யராஜ். 'ஒரு மிகப்பெரிய இயக்குனர் நடிகராக உள்ளே சுத்திக் கொண்டிருக்கிறார். அவர் மணிவண்ணன். ஒரு மிகப்பெரிய நடிகர் இயக்குனராக வெளியே சுத்திக் கொண்டிருக்கிறார், அவர் வாசு' என்று அடிக்கடி சொல்லுவார். இவர்களுக்கிடையில் என்னை அமைதியாகக் கவனித்து வந்தவர், நண்பர் விஜயகாந்த்."

**"இத்தனை பேரிடம் தப்பி வந்த நீங்கள் வல்லரசு படத்திற்கு எப்படி ஒப்புக் கொண்டீர்கள்?"**

"இந்த கேரக்டருக்கு நான் பொருத்தமாக இருப்பேன் என்று முடிவு செய்து, 'எனக்கு வாசுதான் வேண்டும்' என்று கேட்ட புதிய இயக்குனர் மகாராஜன்தான் காரணம். ஒரு ஐந்து மாதங்களுக்கு முன் என்னிடம் கதை சொல்ல வந்த அவர், எனது முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை கவனித்திருக்கிறார். அதன்பிறகு விஜயகாந்துக்காக அவர் உருவாக்கிய கதையில் அந்த 'சாமி' கேரக்டரை என்னை மனத்தில் வைத்தே உருவாக்கி இருக்கிறார். முக்கியமாக, முதல் படத்தை வெற்றிகரமாக உருவாக்க வேண்டும் என்ற வெறி புது இயக்குனருக்கு இருக்கும். இரண்டாவது முக்கியக் காரணம், விஜய்காந்த். பி.சி. வரை ரசிகர்களைச் சென்றடைகிற நடிகர்களில் விஜய்காந்திற்கு முக்கிய இடமுண்டு. அந்த வகையில் நானும் கடைசி ரசிகன் வரையில் இடம்பிடிக்க முடியும் என்று நம்பினேன். அது நடந்து கொண்டிருக்கிறது."

**''வல்லரசு படத்திற்குப் பிறகு அழைப்புகள் எப்படியுள்ளது?''**

"நிறைய நண்பர்கள் கூப்பிடுகிறார்கள். வல்லரசு படத்திற்கு விஜய்காந்தும் மகாராஜனும் கூப்பிட்டபோதே 'பெண்களைத் துரத்துவது, கத்தியை எடுத்துக் குத்துவது' போன்ற கொடூர வில்லனாக என்னால் நடிக்க முடியாது என்று உரிமையோடு சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள். இப்போது வில்லன் மட்டும்தான் என்றில்லை, ஒரு நல்ல அப்பா, அண்ணன் போன்ற மென்மையான கேரக்டர் ரோல்களில் நடிக்கவும் தயாராக இருக்கிறேன். அதுவும் எனக்கு வசதியாகப் படுகிற நண்பர்களின் கம்பெனிப் படங்களில் மட்டுமே நடிககலாம் என்று நினைக்கிறேன். பணம் வருகிறதே என்று எல்லாவற்றிலும் தலைகாட்ட விரும்பவில்லை. முக்கியமாக எனது 'இயக்கம்' எந்த வகையிலும் இதனால் பாதித்து விடக் கூடாது என்பதில் தெளிவாகவே இருக்கிறேன்."

**"முற்றிலும் புதியதான கதைப் படங்களின் வரவு தமிழ் சினிமாவில், அதிகரித்து விட்டது. புதிய இளைஞர்களின் ஆதிக்கம் அதிகமாகி விட்டது. இது போன்ற சூழலில் வாசுவால் தாக்குபிடிக்க முடியவில்லை என்பதால் நடிக்க வந்து விட்டார் என்ற பேச்சு குறித்து?"**

"இல்லை. இது தவறான கண்ணோட்டம். இப்போது நான் இயக்கிக் கொண்டிருக்கும் 'வண்ணத் தமிழ்ப்பாட்டு' படம் உட்பட ஐந்துக்கும் மேற்பட்ட படவேலைகளில் ஈடுபட்டுள்ளேன். வருடத்திற்கு இத்தனை படம் என திட்டமிட்டு இயக்கி வருகிறேன். என் இடம் எனக்கு எப்போதும் உள்ளதுதான்!"

— விஷ்வல்தாசன்

படங்கள்: வெங்கடேஷ்



அருள்மிகு செல்வ விநாயகர் துணை

27-A, 2–ஆவது மெயின் ரோடு, கலைமகள் நகர்,
ஈக்காடுதாங்கல், சென்னை – 600 097.

## அருள்மிகு செல்வ விநாயகர் நூதன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

விநாயகர் துதி

பிடியதனுரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலமுறை யிறையே - சம்பந்தர்

எந்நாட்டிலுமுயர் தென்னாடாம் செந்தமிழ் நாட்டின் தலைநகரமான தர்மமிகு சென்னையில், கலைமகள் நகர், 2ஆம் பிரதான சாலையில், அருள்மிகு செல்வ விநாயகப் பெருமானுக்கு மிகப் பெரிய செலவில் கர்பக்கிருஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் இவற்றுடன் கூடிய ஆலயம் அமைத்து, அதோடு அருள்மிகு சிவபெருமான் பார்வதி, முருகப் பெருமான், ஆஞ்சநேயர், துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, லக்ஷ்மிநரசிம்மர், சக்கரத்தாழ்வார், தட்சணாமூர்த்தி, நவக்கிரஹங்கள் ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனியாகவும், புதிய ஆலயங்கள் அமைத்து அழகுற வர்ணகலாபங்கள் செய்து ஐங்கரன் துணைகொண்டு நிகழும் ஸ்ரீ விக்ரமவருஷம் வைகாசி மாதம் 23 ஆம் தேதி (05–06–2000) திங்கட் கிழமை புனர்பூசம் நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை மணி 5:30க்கு மேல் 6:30க்குள் ரிஷப லக்னத்தில் நூதன ஆலய அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்ற படியால் பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்து அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் அனைத்துத் தெய்வங்களின் அருள் பெற்று உய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம். அன்பர்கள் அனைவரும் தம்மால் முடிந்த அளவு நிதியுதவி மற்றும் பொருளுதவி செய்து திருக்கோயில் பணி களைச் செவ்வனே செய்ய உதவுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்
கலைமகள் நகர் செல்வ விநாயகர்
திருக்கோயில் நிர்மாணக் குழு.




# மெல்லத் தமிழ்

கி. ராஜேந்திரன்

"தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கு இடையில் தமிழ்ப் பாடல்களை அதிகமாகப் பாட வேண்டும் என்பதற்கு ஒரு இயக்கமே நடத்த வேண்டியிருக்கிறதே!" என்று வேதனைப்பட்டு எழுதினார் அமரர் கல்கி.

தமிழ்நாட்டில் தமிழராகப் பிறந்த குழந்தைகளுக்குத் தமிழிலேயே பாடங்களைச் சொல்லித் தர வேண்டும் என்பதற்கு இயக்கம் மட்டுமல்ல, கோர்ட்டுப் படியும் ஏற வேண்டியிருக்கிறது என்னும் போது அதே மாதிரி வேதனை கலந்த வியப்புதான் உண்டாகிறது.

தமிழக அரசு பிறப்பித்த சட்டம் தனிமனித உரிமையை பாதிக்கிறதா, அரசியல் சாசனத்துக்கு முரணானதா என்பதையெல்லாம் உச்சநீதிமன்றம் தீர்மானம் செய்யட்டும். தாய்மொழி வழிக் கல்வி சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்தால் நீதிமன்றங்களும் ஏற்கக்கூடிய ஒன்றாகி விடலாம். அது ஒருபுறமிருக்க, சட்டத்தின் அடிப்படையில் உள்ள நோக்கங்கள் என்ன? அது தமிழர் நலனுக்கு உகந்ததா, விரோதமானதா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். தாய்மொழியில் போதனை என்பது தாய்ப்பால் போன்று சிறந்த ஒன்று, இன்றியமையாதது என்பது உலகெங்கும் உள்ள கல்வியாளர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. உலகில் எந்த நாட்டிலும் குழந்தைகளுக்குத் தாய்மொழி தவிர வேற்று மொழியில் பாடங்கள் சொல்லித் தரப்படுவதில்லை. உயர்கல்வி என்ற நிலையில்தான் சில நாடுகள் ஆங்கிலத்தில் போதிப்பதை அனுமதிக்கின்றன.

தமிழ்நாடு ஒன்றில்தான் குழந்தைகளுக்கு இரண்டு வயதிலிருந்தே ஆங்கிலத்திலே பாட போதனை என்ற கொடுமைக்கு இடம்கொடுத்து வருகிறோம். இதனால் ஏற்படக் கூடிய விபரீதம் என்னவென்றால் தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம், தமிழ் கலைகள் இவற்றில் குழந்தைகளுக்கு நாட்டம் குறைந்து, ஆங்கில மோகம், பாடத்தில் மட்டுமின்றி மேல்நாட்டு கலாசாரத்திலும் இயல்பாக உண்டாகும். ஏற்கெனவே அயல்நாட்டு மோகம் எந்த அளவுக்கு நமது திரைப் படங்கள், டீவி நிகழ்ச்சிகள் முதலியவற்றில் ஊடுருவியுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. மேலும் எச்.பி.ஓ., ஸ்டார் மூவீஸ், வி. சானல் போன்ற அயல்நாட்டு டீவி நிலையங்கள் நேரடியாக நம்மை அந்நிய கலாசாரத்துக்கு அடிமைப்பட வைத்து மூளைச் சலவை செய்து வருகின்றன. இன்டர்நெட் வந்து உலகையே கம்ப்யூட்டரில் இணைத்து விட, தேவையற்ற தவகல்களை நமது குழந்தைகள் பார்த்து, பெற்று அவர்கள் மனம் மாசுபடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை இன்று பல பெற்றோர்களை ஆட்கொண்டு வருகிறது. டீவி, இன்டர்நெட் போன்றவற்றின்

ஆதிக்கங்களை ஜனநாயக இந்தியா தடைசெய்ய முடியாது. உலக வியாபாரத்துக்கு நமது கதவுகளைத் திறந்து விட்டது போலவே இவற்றுக்கும் கதவுகளைத் திறந்துதான் வைக்க வேண்டும்.

ஆனால் இவற்றால் நமது பாரத நாட்டின் - குறிப்பாகத் தமிழகத்தின் பண்பாடுகள் நாளாவட்டத்தில் அடியோடு சிதைந்து போய் விடாமலிருக்க வேண்டுமானால் இந்த மூளைச் சலவையை எதிர்க்கின்ற மனவலிமையை நமது குழந்தைகள் பெற்றாக வேண்டும். இதற்கு ஒரே வழி, பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குத் தாய்மொழியைப் போதனா மொழியாக்கி நமது உயர்தரமான கலாசாரத்தையும் கதைகள், கலைநிகழ்ச்சிகள் மூலம் ஊட்டி வளர்ப்பதுதான். இது தேச பக்திக்கும் அடிப்படை.

இந்த பலமான அஸ்திவாரத்தை




# இனிச் சாகும்?



அமைத்து விட்டால் பிறகு அயல்நாட்டு பாதிப்பு இருந்தாலும் நமது குழந்தைகள் தாய்மொழியின் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வையும் என்றும் மறக்கவோ விட்டுக் கொடுக்கவோ மாட்டார்கள். தாய்மொழியில் பாட போதனை என்பது இதற்குப் போடப்படுகிற பிள்ளையார் சுழி.

தமிழக அரசோ அல்லது தமிழ் மக்களோ ஆங்கிலத்தின் எதிரிகள் அல்ல. ஆங்கிலம் உலக மொழி. அதன் மூலம்தான் நாடும் சரி, மக்களும் சரி துரிதமான முன்னேற்றம்



## போட்டிக்கு ரெடியா?

இலக்கியச் சிந்தனை வெளியிட்டுள்ள '99ன் சிறந்த பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பில் உள்ள எட்டுக் கதைகள் கல்கியில் வெளியானவை.

மிகச் சிறந்த கதைகளை அதிக அளவில் வெளியிடும் கல்கி, மிகச் சிறந்த எழுத்தாளர்களையும் உருவாக்குவதன் பொருட்டு நடத்தப்படுவதுதான் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி.

இவ்வாண்டு போட்டிக்கான கதைகள் அனுப்பக் கடைசித் தேதி ஜூன் 15 என்பது நினைவிருக்கிறதல்லவா? முழு விவரங்கள் சென்ற அல்லது அடுத்த இதழில்.

– ஆர்.

காண முடியும் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். எனவேதான் தமிழக அரசும், 'ஐந்தாம் வகுப்பு வரை தமிழில் படி, அதே சமயம் ஆங்கிலமும் படி' என்கிறது. 'ஐந்தாம் வகுப்புக்குப் பிறகு, நீ விரும்பினால் ஆங்கிலத்திலேயே படி, ஆனால் கூடவே தமிழும் படி' என்கிறது.

ஆக, போதனாமொழி எது, எதுவரை என்பனதாம் பிரச்னையே தவிர, ஆங்கிலத்தை யாருமே எதிர்க்கவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழியே – தமிழே போதனா மொழியாக அமைய வேண்டும் என்பதுதான் நோக்கம். கூடவே ஆங்கிலமும் ஒரு பாடமாகக் கற்றுத் தரப்பட வேண்டும்; இது மேல் படிப்புக்கு உதவும் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை.

தமிழ்நாட்டுக் குழந்தைகளின் எதிர்காலத்தில் பெற்றோர்களுக்குத்தான் அக்கறை என்பதை ஒப்புக் கொள்ளலாம். ஆனால் தமிழக அரசுக்கு அக்கறை இல்லை என்று கூறிவிட முடியாது. தமிழகத்தின் எதிர்காலம் இன்றைய குழந்தைகளிடம்தான் உள்ளது என்பது தமிழக அரசுக்கு நன்றாகவே தெரியும். அந்த எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால் அடிப்படையில் கல்வியின் தரமும் அதன் பயனும் அதிகரிக்க வேண்டும். இதை இரவோடு இரவாக ஒரு மந்திரஜாலம் போல நிறைவேற்றிவிட முடியாதென்றாலும் ஒரு தொடக்கம் தேவை; அது தொடரவும் வேண்டும்.

தமிழ் போதனா மொழியை எதிர்ப்பவர்கள், ஐந்தாம் வகுப்பு வரை கூட அதை வரவேற்கத் தயாராக இல்லாதவர்கள், ஒரு காரணம் சொல்கிறார்கள். 'அமைச்சர்களின் வீட்டுப் பிள்ளைகள், பணக்கார வீட்டுக் குழந்தைகள் ஆங்கில மீடியத்தில் படிக்கிறார்களே' என்கிறார்கள். அது விரும்பத்தக்க நிலை அல்லதான். அந்த நிலை மாற வேண்டும் என்பதற்குத்தான் சட்டம் இயற்ற வேண்டி உள்ளது.


பொதுவாக வாழ்க்கையில் உயர்மட்டத்தில் இருப்பவர்கள் செய்வதைத்தான் அடி மட்டத்தில் இருப்பவர்களும் பின்பற்ற முயற்சி செய்வார்கள். முதலாளி வீட்டுக் குழந்தை ஆங்கில மீடியத்தில் படிக்கிறது என்றால் தொழிலாளியும் கடனோ உடனோ வாங்கி கஷ்டப்பட்டுத் தனது மகனையும் ஆங்கில மீடியம் பள்ளியில் சேர்க்கவே முயற்சி செய்கிறான். அந்தக் குழந்தை 'மம்மி' 'டாடி' என்று பேசுவதைக் கேட்டு பூரித்துப் போகிறான். எனவே வாழ்க்கையில் உயர் நிலையில் இருப்பவர்தான் முதலில் தவறைத் திருத்திக் கொண்டு கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்குச் சரியான வழிகாட்ட வேண்டும். இதைச் செய்யாமல் ஒரு நல்ல நோக்கத்தை ஏற்க மறுத்து எதிர்ப்பார்களேயானால், சாமானியர் கூட ஏதோ பெரிய துரோகம் தங்களுக்கு இழைக்கப்படுவது போல் கருதுவார்கள்.

அரசுப் பள்ளி, தனியார் பள்ளி, மைனாரிடி மிஷனரி பள்ளி என்று வேற்றுமையின்றி அனைத்திலும் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழியில் போதனை; அதன் பிறகு அவரவர் விருப்பப்படி ஆங்கிலம் அல்லது தாய்மொழியை போதனா மொழியாக ஏற்கலாம் என்பது உன்னதமான கருத்து. அனைத்து நாடுகளிலும் இந்தியாவின் இதர மாநிலங்களிலும் பின்பற்றப்படும் நடைமுறை.

வேறு மாநிலங்களிலிருந்து தமிழகம் வந்திருப்பவர்களும் ஆங்கிலோ இந்தியர்களும் தமிழை போதனா மொழியாக ஏற்க விரும்பவில்லை எனில் அவர்களின் குழந்தைகள் ஆங்கில மீடியத்தில் படிக்க அனுமதிக்கப்படலாம். அதற்குத் தனி பள்ளிகள் உருவாக்கலாம். இந்த வசதியைச் செய்து தரத்தான் வேண்டும். ஆனால் தமிழ்நாட்டிலேயே பிறந்த தமிழ் குழந்தைகள் ஆங்கில மீடியத்தில் படித்து, தமிழே சரியாகப் பேச வராது, எழுத வராது, படிக்கவும் வராது என்ற நிலை நிச்சயமாக மாற வேண்டும். அதே போல, தமிழ் மீடியம் பள்ளிகளில் படித்து, ஆங்கிலத்தை சரியாகப் பேசவோ எழுதவோ முடியாமல் ஒரு தாழ்வுணர்ச்சி உண்டாகிற நிலையும் மாற வேண்டும். இதற்கு முதலில் பள்ளி ஆசிரியர்களின் தரத்தையும் சேவை உணர்வையும் மேம்படுத்தியாக வேண்டும்.

தமிழ் என்று குறிப்பிடப்படுவது தமிழ் மொழி மட்டுமல்ல. தமிழ் இலக்கியம், கலைகள், பண்பாடு முதலிய பலவற்றை உள்ளடக்கியது. 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்று உரைத்தவன் மேதை அல்ல, நிச்சயமாகப் பேதைதான் என்பதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். ○

## அறிமுகம்!



தமிழக மக்களுக்கு மிகவும் பரிச்சயமான வித்யா நோட்டுப் புத்தகங்களைத் தயாரிக்கும் மைசூர் சேல்ஸ் இன்டர்நேஷனல் **(MSIL)** நிறுவனமானது தற்போது ஒரு புதிய துறையில் புகுந்துள்ளது. **LKG** முதல் கல்லூரி மாணவர்கள் வரை அனைவருக்கும் தேவையான அளவுகளில் எண்ணற்ற வண்ணங்களில் 'வித்யா ஸ்கூல் பேக்' **(Vidya School Bag)** தயாரிக்கிறது. இந்த தரமான, நேர்த்தியான **Bag**களை 7 மாடல்களில் வெளியிட்டுள்ளார்கள். இவை ரூ. 175/- முதல் ரூ. 245/- வரையிலான விலைக்குக் கிடைக்கின்றன. 'வித்யா' நோட்டுப் புத்தகங்களுக்கு தமிழகத்தில் கிடைத்த வெற்றியைப் போல 'வித்யா ஸ்கூல் பேக்' வகைகளும் தமிழகத்தில் நிச்சயம் விற்பனையில் மிகப் பெரிய சாதனை புரியும் என **MSIL**ன் துணைப் பொதுமேலாளர் திரு. ஜேம்ஸ் **L.** ஃபிக்சர் கூறுகிறார்.



## முத்துப் போல் பற்கள் இருக்க வேண்டுமா!

டூத்-பிரஷ்களை பல வடிவங்களாகவும், பல நிறங்களாகவும் மாற்றியுள்ள போதிலும், எவ்வளவுதான் அதிநவீனமான பிரஷ் என்றாலும் பற்களில் உள்ள உணவுத் துணுக்குகளை அகற்றுகிறதா? இல்லை. இதோ இங்கிலாந்தில் வடிவமைக்கப்பட்ட குச்சங்களுக்கு இடையே துளையுள்ள **ஓசோன் டூத் பிரஷ்** மற்றதை விட **60%** அதிக சுகாதாரமானது என்று Dental Institute of London-னால் சான்றிதழ் பெற்றுள்ளது. U.K. Design Council இந்த பிரஷ்ஷிற்கு Millennium Product என்று அறிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் முகவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். (பெண் முகவர்களுக்கு சிறப்புச் சலுகை உண்டு)

**LAKMITEK ENTERPRISES,**
**1/2, 44th Street,**
**Ashok Nagar, Chennai - 83.**
**Ph : 6548886, 2311242**
**E-Mail-veniviv@vsnl.com.**
**Fax :(044) 2321918. 5369101.**

# எந்த டால்கம் பவுடர் வியர்வை நாற்றத்தை தடுத்து நறுமணம் தருகிறது ?

# தாரா மட்டுமே





* மல்லிகை * சந்தனம் * லாவண்டர்
* மேக்னட் * பக்கூர்

விற்பனையாளர்

**பட்டேல் எண்டர்பிரைஸஸ்**
மெப்ஸ், சென்னை - 600 045.
✆ : 2363157 / 2368083

**டீலர்ஷிப் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**


அடுத்த
இதழ்
விடுமுறை
ஸ்பெஷல்!
ஜாலி!
சூப்பர்!
த்ரில்!
விடுமுறை
ஸ்பெஷலோடு
வேறொரு
ஸ்பெஷலும்
உண்டு!
பார்க்க — பக்கம் 31






2000 மே 14
விக்ரம வைகாசி 1
மலர் : 58
இதழ் : 42

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




# வறட்சி நிவாரணத்தில் வறட்சி!

'வறட்சி நிவாரணத்துக்கு வாரி வழங்குங்கள்' என்று பிரதமர் கோரிக்கை விடுத்திருப்பதைப் படிக்கும்போது, உடனடியாக உதவித்தொகை அனுப்பி வைக்கத் துடிக்கிறோம். ஆனால் நாம் அனுப்பும் தொகை உரிய காலத்தில், உரிய நபருக்கு, உரிய நிவாரணமாகப் போய்ச் சேருமா என்ற சந்தேகம் வறட்சியைப் போலவே பயங்கரமாக அச்சுறுத்துகிறது.

கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாகவே குஜராத், ராஜஸ்தான், ஒரிஸ்ஸா மாநிலங்களில் வறட்சி என்பது தலைப்புச் செய்தியாக நெஞ்சைப் பிழியும் படங்களுடன் வெளியாகி வருகிறது. நிவாரணம் பெற்று மக்கள் துயர் குறைந்ததாகவோ, இம்மாதிரி வறட்சியின்போது பரவக்கூடிய நோய்த் தடுப்புக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவோ செய்திகளே இல்லை.

மாறாக, வறட்சியால் உயிரிழந்த விலங்குகளின் பிணக் குவியல், வண்டிகளில் ஏற்றிச் செல்லப்படும் படங்கள், ஒரே அழுக்கு நீர்க் குட்டையில் மனிதர்களும் விலங்குகளும் தாகம் தணித்துக் கொள்ள முயற்சி செய்யும் காட்சிகள்; ஒரு கிராமத்தில் பட்டினிச் சாவு நிகழ்ந்த பிறகு அவசரமாக விழுந்தடித்துக்கொண்டு உதவி அனுப்பப்பட்ட அவலச் செய்தி...

ஒரு சில இடங்களுக்கு நிவாரணமும் உதவியும் போய்ச் சேர்ந்துள்ளதாக செய்திகள் வெளியானாலும் வறட்சியின் கொடூரத்தையும் வீச்சையும் ஒப்புநோக்க, உதவி மிகக் குறைவாகவும் தாமதமாகவுமே கிடைக்கிறது.




'மாநில அரசுகள், அதிகார பூர்வமாக கோரிக்கை விடுத்த பிறகே ரயில்களில் உதவி அனுப்ப முடியும். அதற்குக் காத்திருக்கிறோம்'- போன்ற அபத்தமான சிவப்பு நாடா விளக்கங்கள் ஆத்திரமூட்டுபவையாக இருக்கின்றன.

மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி, வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பியிருக்கிறார். ஆனால், அந்த விஜயம் நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தவுமில்லை; மேம்படுத்தவுமில்லை.

இந்தியா போன்ற விரிந்து-பரந்த நாட்டில் எப்போதும் எல்லா பகுதிகளிலும் சுபிட்சம் நிலவும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். ஆனால், இயற்கை சீற்றத்தை முன்கூட்டியே அறியவும் கவனமான திட்டமிடல் மூலம் அதன் விளைவுகளை ஓரளவு முறியடிக்கவும் இன்று வழிவகை இருக்கிறது.


உதாரணமாக NRSA எனப்படும் National Remote Sensing Agency என்ற அமைப்பு, இவ்வாண்டின் வறட்சிக் கொடுமையை சாடிலைட் படங்களின் உதவியுடன் முன்கூட்டியே அறிந்து அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. குஜராத், ராஜஸ்தான் மாநில அரசுகள் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தி எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

வறட்சிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்று கேட்கலாம். எந்தெந்த இடங்களில் நிலத்தடி நீரை வளப்படுத்த முடியும் என்பது குறித்தும் சாடிலைட் படங்கள் உதவியுடன் NRSA அறிக்கை தந்திருக்கிறது.

இத்தனை உதவியையும் தொழில்நுட்பச் செல்வத்தையும் வைத்துக் கொண்டு, சரியாகப் பயன்படுத்தாமலும் திட்டமிடாமலும் நமது அரசுகள் வீணடித்து வருகின்றன.

நர்மதாவில் அணை கட்டி சர்தார் சரோவர் நீர்த் தேக்கம் அமைக்கும் மிகப் பெரிய திட்டம் ஒன்று குஜராத் மாநிலத்தில் தடைப்பட்டு நிற்பதையும் நாம் அறிவோம்.

நர்மதா அணையை எதிர்ப்பதற்கே ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, அப்பணிக்கு முட்டுக் கட்டை போட்டு வருகிறது. எடுத்துச் சொல்லப்படும் காரணங்கள் நியாயமானவைதான். பல்லாயிரம் கிராமங்கள் மூழ்கிப் போகும்; வனப் பகுதிகள் அழிந்து, சுற்றுச் சூழல் பாதிப்பு




விளையும் என்பது வாதம்.

எந்தவொரு அபிவிருத்திப் பணியானாலும் அதற்கு மறுபுறமாக இத்தகைய பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும்.

'நர்மதா அணை மட்டும் கட்டப்பட்டிருந்தால் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பாசன வசதி பெற்றிருக்கும்; வறட்சியின் கொடுமை அங்கெல்லாம் இராது என்பதுடன் நிலத்தடி நீர் ஏராளமான நிலப்பரப்பில் வளம் பெற்றிருக்கும்' என்று ஆதாரபூர்வமாகப் பேசும் பிரிவினரும் உண்டு.

பல ஆண்டுகளாக நிலுவையிலேயே இருக்கும் நர்மதா பிரச்னைக்குத் தீர்வு காண்பது, நீண்டகால நோக்கில் உடனடியாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மழை பெய்கிற காலத்தில் நீரைக் கடலில் கலக்க விடாமல் சேமிக்கவும் நிலத்தடி நீரை வளப்படுத்தவும் திட்டங்கள் வகுப்பது, அதற்கு மக்களைப் பழக்குவது- இவையெல்லாம் மத்திய-மாநில அரசுகள் இணைந்து நிறைவேற்றவேண்டிய நீண்ட காலத் திட்டங்களாகும்.

உடனடி நடவடிக்கையாகச் செய்ய வேண்டியவையும் உண்டு :

நாடு முழுவதிலுமுள்ள தன்னார்வ அமைப்புகளிலிருந்து திறமை மிக்க உழைப்பாளிகளைத் தேர்ந்தெடுத்து பணிக்குழு ஒன்றை அமைக்க வேண்டும். இக்குழுவுக்கு உதவ ஓர் அரசாங்க உயர் அதிகாரியை ஒருங்கிணைப்பாளராக நியமிக்க வேண்டும். அவ்வொருங்கிணைப்பாளருக்கு உடனடியாக அரசு இயந்திரத்தை இயக்கவல்ல சர்வ அதிகாரங்களையும் குறுகியகால ஏற்பாடாக வழங்க வேண்டும்.

நிவாரணத் தொகையுடன் போக்குவரத்து, மருத்துவ வசதிகளையும் இக்குழுவிடம் ஒப்படைத்து, வறட்சி பாதித்த மாநிலங்களில் பணியாற்ற அவர்களுக்கு அனுமதியும் சுதந்தரமும் வழங்க வேண்டும். நிவாரணப் பணிகள் நேர்மையாகவும் சுறுசுறுப்பாகவும் நடைபெற இது ஒன்றே வழி.

ஆனால் நாம் காண்பதோ, நிவாரணப் பணி புரியும் அரசு ஊழியர்களிடையே நேர்மை வறட்சி, மனிதாபிமான வறட்சி, அரசிடமோ திட்டமிடல் வறட்சி, தீர்க்கதரிசன வறட்சி!

இந்த ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் முப்பத்துநான்கு கல்லூரிகளுக்கான மொத்தமுள்ள 190 விருதுகளில் ஐம்பது விருதுகளை சத்தியபாமா மாணவமாணவியரே தட்டிச் சென்றிருக்கிறார்கள். அவர்களின் புகைப்படங்களையெல்லாம் ஹிந்து நாளிதழில் வெளியிட்டு பெரிய விளம்பரம் தந்ததோடு, அனைவருக்கும் கல்லூரி செலவில் தங்கப் பதக்கங்கள் செய்து, அவர்களின் பெற்றோரை வரவழைத்து விழா நடத்தி ஜமாய்த்திருக்கிறார் ஜேப்பியார்.

சத்தியபாமா கல்வி அறக்கட்டளையின் கீழ் சத்தியபாமா பொறியியல் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி, பாலிடெக்னிக், விரைவில் பல் மருத்துவக் கல்லூரி என்று பல கல்வி நிலையங்களின் நிறுவனராகவும், தலைவராகவும் இன்று ஜேப்பியார், கல்வி உலகில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில் அந்த விரிந்து பரந்த சத்தியபாமா பொறியியல் கல்லூரி வளாகத்தில் ஜேப்பியார் அறைக்குள் நுழைந்ததுமே வியப்புதான். அறையில் முக்கால் பங்கை அடைத்துக் கொண்டிருக்கும் கனமான வெள்ளை உறையிட்ட மெத்தை. அதன் மேல் திண்டுகளின் மீது கையூன்றி ஸ்டைலாக சாய்ந்து அமர்ந்திருக்கிறார் ஜேப்பியார். அன்று பார்த்த அதே வெள்ளை வேட்டி, சட்டைதான். கால்களில் சாக்ஸ். ஷூக்கள் கழற்றி அருகே வைக்கப்பட்டிருக்கின்றன. அறைக்குள் பிரதானமாக எம்.ஜி.ஆர். படம். சீரியல் பல்புகள் விட்டு விட்டு எம்.ஜி.ஆரைச் சுற்றி வருகின்றன. மெத்தை மீது தம்மைச் சுற்றி சத்தியபாமா கல்லூரிக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரச் சான்றிதழ்கள்; புத்தகங்கள்; அன்னை தெரசா படம் இப்படி ஏகமாய் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றன.

"எங்கிட்ட என்ன கேக்கணும்? கேளுங்க" என்று வரவேற்கிறார்.

"ஒரு காலத்தில் தமிழக அரசியலில் புகுந்து கலக்கியவர் நீங்கள். எம்.ஜி.ஆரின் பாதுகாவலராக, அவருக்காக எதையும் ரிஸ்க் எடுத்துச் செய்யத் தயாராக இருந்



தவராக, சட்டப் பேரவையில் நடைபெற்ற மிகப் பெரிய கலாட்டாவுக்குத் தலைமை தாங்கியவராக-மொத்தத்தில் ஒரு 'நொட்டோரியஸ்' அரசியல்வாதியாக இருந்த அன்றைய ஜேப்பியாருக்கும், இன்றைய ஜேப்பியாருக்கும் அடேயப்பா! என்ன வித்தியாசம்!"

"நீங்கள் இப்படி வியப்படைவதில் அர்த்தமே இல்லை. ஏனெனில் நான் அப்படியேதான் இருக்கிறேன். இன்றைய நான்தான் அன்றைக்கும். ஆனாலும் எனக்கு அப்படியொரு முத்திரை குத்தப்பட்டு விட்டது. சந்தேகமில்லாமல் நான் எம்.ஜி.ஆரின் விசுவாசிதான். நான் மேடைகளில் அப்போது வேகமாகப் பேசுவேன், ஒப்புக் கொள்கிறேன். எங்கு போனாலும் ஒரு கூட்டத்தோடு போவேன், ஒப்புக் கொள்கிறேன். கடைசியில் என்ன ஆயிற்று? அந்தக் கூட்டம் நடந்து கொண்ட சில விரும்பத்தகாத முறைகளுக்கு என்னைப் பொறுப்பாக்கி விட்டார்கள். ஏனெனில் நான் அதற்குத் தலைமை தாங்கியதால். இதுதான் நடந்த உண்மை. எனவே என் மனச்சாட்சி தெளிவாக இருக்கும்போது அன்றைய ஜேப்பியார், இன்றைய ஜேப்பியார் என்றெல்லாம் பேசுவது

என்னைப் பாதிப்பதில்லை."

"உங்களுக்குள் இருந்த கல்வியாளர் விசுவரூபமெடுத்தது எப்போது?"

"எம்.ஜி.ஆர். இருக்கும்போதே எனக்கு கல்வி மீது ஆசை. ஒரு மிகப் பிரமாத மான கல்லூரியை உருவாக்க வேண்டும் என்ற லட்சியம் இருந்தது."

"சென்னையை விட்டு இவ்வளவு தூரம் தள்ளி வந்து கல்லூரியைக் கட்டியிருக்கிறீர்களே..."

"இப்போது பொறியியல் கல்லூரியை அமைக்க 25 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்கிறது அரசு. அப்போதோ 150 ஏக்கர் நிலம் அவசியப்பட்டது. அவ் வளவு பரப்பு இங்கேதான் கிடைத்தது. என்ன செய்ய?"




● "தற்போது தங்களுக்கு அரசியல் ஈடுபாடு ஏதும்..." என்று கேள்வியை முடிக்கும் முன்பாக இரண்டு கைகளையும் சேர்த்துப் பெரிய கும்பிடாகப் போடுகிறார்! ●

"நீங்கள் இங்கே சேரும் ஒவ்வொரு மாணவ மாணவியும் இங்கே மெஸ்ஸில்தான் சாப்பிட்டாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறீர்களாமே, அதற்கான கட்டணத்தையும் ஃபீஸோடு சேர்த்து வாங்கி விடுகிறார் களாமே, கல்லூரிப் பருவத்தில் அவர்கள் வேண்டிய இடத்தில் இஷ்டப்படுவதைச் சாப்பிடும் உரிமையை மறுப்பது என்ன நியாயம்?"

# இவர் வேறு ஜேப்பியார்!

"ஆமாம். இங்கேதான் சாப்பிட்டாக வேண்டும். நான் பலமாக யோசித்து எடுத்த முடிவு இது. பையன்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்தால் என்ன ஆகிறது? காலையில் எட்டுக் கெல்லாம் இங்கே இருக்க வேண்டும். அப்படியானால் ஆறுமணிக்கெல்லாம் சமைக்க வேண்டும். அது மத்தியானம் சாப்பிடுவதற்குள் ஆறி அவலாகப் போகலாம். சில சமயம் ருசியிழந்து கெட்டும் போகலாம். இன்னும் சில சமயங்களில் வழியிலேயே கூட வரும் நண்பர்கள் உரிமையோடு இன்னொருவனின் டிப னைத் திறந்து காலி பண்ணி விடலாம். என் குழந்தைகள் (மாணவ மாணவியர்) வயிறார சாப்பிட வேண்டும். சுவையாகச் சாப்பிட வேண்டும். நான் இதில் கண்டிப்பாக இருப்பது உண்மை. ஆனால் இங்கே சமையலில் என்ன குறை என்று யாரையாவது சொல்லச் சொல்லுங்கள். தினந்தோறும் 2500 பேருக்கு சமையல் நடக்கிறது, சைவம், அசைவம் இரண்டும் மூன்று வேளையும், வருடம் முழுவதும். கோடை விடு முறையின் போதும் சமையலறைக் கதவுகள் மூடாது. ஹாஸ்டல் மாண வர்கள் சாப்பிட வசதியாக.

"நீங்கள் கேட்பதற்கு முன்பாக இன்னொன் றையும் நான் சொல்லி விடுகிறேன். இங்கே மாணவ மாணவியர் யாரும் சொந்த மாக சைக்கிள், பைக், ஸ்கூட்டர், கார், வேன் எதிலும் வரக் கூடாது. கல்லூரி பஸ்ஸில்தான் வர வேண்டும். இது ஏன் என்று கேட்பீர்கள். வீட்டிலிருந்து கிளம்பும் மாணவன் கல் லூரிக்குத்தான் வருகிறானா என்று பெற்றோர்களுக்குத் தெரியாது. அதே போல இங்கிருந்து நேராக வீட்டுக் குத்தான் போகிறானா, எங்கேயாவது சுற்றுகிறானா



**பெங்களூர் சேஷாத்ரிபுரத்தில் உள்ள பழைய நேஷனல் டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷனின் மில்லுக்கு, பெங்களூர்வாசிகள் சூட்டிய பெயர் ராஜாமில்! இன்று அங்கே துணி உற்பத்தி கிடையாது. பதிலாக சினிமா ஷூட்டிங் நடக்கிறது. அண்மையில் ஒரு கன்னடப் படத்துக்காக, மில் வளாகத்துக்குள்ளே பிரதான சாலை, தெருக்கள், கல்லூரி, வீடுகள், ஆட்டோ ஸ்டாண்டு, பஸ் ஸ்டாப், கோவில், கடைத் தெரு, போஸ்ட் ஆபீஸ், டெலிபோன் பூத் என்று சகலமும் கொண்ட ஒரு ஊரே உருவாக்கப்பட்டுள்ளது. படத்தில் காண்பது கல்லூரி (செட்!)**

**– எம்.**

என்றும் தெரியாது. அதனால்தான் 65 பேருந்துகளை வாங்கி விட்டிருக்கிறேன். ஒரு நாள் கல்லூரிக்கு ஒருவன் வரவில்லையென்றால் உடனே பெற்றோருக்கு போன் போட்டு ஏன் வரவில்லை என்று கேட்போம். அதே போல பஸ்ஸில் பையன் திரும்பிப் போகவில்லையென்றால் பெற்றோர் எந்த நேரமும் எங்களைக் கேட்கலாம். இதற்கென தனி 'செல்'லே இங்கே இயங்குகிறது."

சத்தியபாமா கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கென ஆயிரத்துக்கும் மேலான கம்ப்யூட்டர்கள் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பசுமை போர்த்திய தோட்டங்கள் (திருமதி ஜேப்பியாரின் பொறுப்பு) ஒரு இதமான சூழலைத் தருகின்றன. மாணவர்களோடு அமர்ந்து மெஸ் உணவைத்தான் ஜேப்பியாரும் சாப்பிடுகிறார். காலையில் ஆறு கி.மீட்டர் வாக்கிங் போகும்போது ஹாஸ்டல் வழியாகப் போய் மாணவர்களிடம் பேசி குறைகள் இருந்தால் குறிப்பெடுக்கிறார். அன்றே அவை களையப்படுகின்றன. ஆசிரியர்கள் மீது மாணவர்கள் குறை சொன்னால் ஜேப்பியார் கோபப்படாமல் அவற்றையும் குறித்துக் கொள்கிறார். திடீரென அந்த ஆசிரியரின் வகுப்புக்குப் போய் மாணவர்களோடு ஒருவராக பெஞ்சில் அமர்ந்து அவர் பாடமெடுப்பதைக் கவனிக்கிறார். 'சேர்மன் எப்போ வந்து செக் பண்ணுவாரோ?' என்ற தார்மீக பயம் அந்த வளாகத்தின் ஒவ்வொரு அங்குலத்திலும் நிலவுகிறது. கண்காணிப்பு ஜேப்பியார் ஸ்டைல்!

"நான் முதலில் பதினொன்றாவது வகுப்பு வரைதான் படித்தேன். அப்புறம் இருபது வருடங்கள் இடைவெளி. பிறகு எம்.ஏ. படித்தேன். பி.எல். படித்தேன். அரசியலில் இருந்தபோது என் மீது பல வழக்குகள் போடப்பட்டன. எந்தெந்த கோர்ட்டுகளில் நான் குற்றவாளியாக நிற்க வைக்கப் பட்டேனோ அதே கோர்ட்டுகளில் பின்னாளில் ஒரு வழக்கறிஞராக நான் வாதாடியிருக்கிறேன். எனவே படிப்பின் அருமை எனக்குத் தெரியும்" என்கிறார் சிரித்துக் கொண்டே!

"வாழ்நாள் முடிவதற்குள் இதனைச் செய்துவிட வேண்டும் என்று ஏதாவது இலக்கு கொண்டிருக்கிறீர்களா?"

"சத்தியபாமாவில் படித்தவர்கள் யாரும் வேலையில்லாமல் இருக்கக் கூடாது. இப்போதும் அநேகமாக எல்லோருக்கும் கேம்பஸ் செலக்ஷனிலேயே வேலை கிடைத்து விடுகிறது. இங்கேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை நானே உருவாக்கித் தரவேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். ஜூன் வரை பொறுங்கள். அறிவிக்கிறேன்."

"தற்போது தங்களுக்கு அரசியல் ஈடுபாடு ஏதும்..." என்று கேள்வியை முடிக்கும் முன்பாக இரண்டு கைகளையும் சேர்த்துப் பெரிய கும்பிடாகப் போடுகிறார்!

**— ராணிமைந்தன்**

படங்கள்: **வெங்கடேஷ்**

## இலங்கைப் பிரச்னை:

# என்ன செய்யணும் இந்தியா?

**எம்.ஜி.ஆர். காலம் தொட்டே இலங்கைப் பிரச்னையில் கவனம் செலுத்தி வருபவர் பண்ருட்டி ராமச்சந்திரன். இன்றைய நிலவரம் குறித்து நம்மிடம் பேசினார்:**



"இன்றைய சூழ்நிலையில் சிங்கள ராணுவம் தப்பிக்க, மூன்று வழிகள்தான் உள்ளன. முதலாவது புலிகளோடு போரிட்டு மாள்வது அல்லது மீள்வது. இரண்டாவது, போர் நிறுத்தப் பிரகடனம் செய்து ராணுவ வீரர்களை சமாதான அடிப்படையில் திரும்பப் பெற்றுக் கொள்வது. மூன்றாவது, நட்பு நாடுகளின் துணை கொண்டு யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்துக் கொள்வது.

சந்திரிகா மூன்றாவது வழியைத் தேர்ந்தெடுத்துள்ளார். இதில் உடனடியாக உதவக் கூடிய நிலையில் இருபது மைல் தூரத்திலே உள்ள ஒரே நாடு இந்தியாதான். இந்தியாவை மட்டும் அழைத்தால் ராஜதந்திர முறையில் குறை காண்பார்கள் என்பதற்காக சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இலங்கை இனப் பிரச்னையில் இந்தியா ஏற்கெனவே சூடு கண்ட பூனையாக உள்ளது. மீண்டும் இந்திய அரசு இலங்கைக்கு ராணுவத்தை அனுப்புவதை இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை மத்திய அரசு நன்கு புரிந்து வைத்துள்ளது. அதே நேரத்தில் புலிகளின் கை ஓங்குவதை இந்திய அரசு ஒரு போதும் ஏற்காது! புலிகளின் செல்வாக்கு தமிழ்நாட்டில் ஓங்கி விடும் என்பதாலும், எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் பிரிவினை இயக்கம் வலுப்பட்டு விடும் என்பதாலும் இதைத் துவக்கத்திலேயே கிள்ளி எறியத்தான் இந்திய அரசு முயற்சிக்கும். இன்று இலங்கையில் தனி ஈழக் கோரிக்கை வெற்றி பெற்றால் நாளை காஷ்மீர் பிரச்னை மேலும் சிக்கலாவதற்கு அதுவே ஓர் முன்னுதாரணமாக அமையும் என்பதை இந்தியா அறியும். எனவே இந்திய அரசு இப்பிரச்னையில் நேரடியாகத் தலையிடாவிட்டாலும் மறைமுகமாகப் புலிகள் ஆதிக்கத்தைத் தகர்க்க முனைவதே இயல்பு. இலங்கை இனப் பிரச்னையில் இந்தியா தலையிடாவிட்டால் பாகிஸ்தான் சீனா போன்ற நாடுகள் தலையிட்டு செல்வாக்கைத் தேடிக் கொள்ளும் என்ற வாதம் அபத்தமானது. அந்த நாடுகள் ராணுவ ரீதியில் தலையிடாது என்பது மட்டுமல்ல; தலையிட்டாலும் அதனால் அவர்களுக்கு நஷ்டமே தவிர ஆதாயம் ஏதுமில்லை!

இந்தியாவைப் பொறுத்த வரையில், வந்து சேரும் அகதிகளை ஆதரிப்பதும், காயமுற்றோருக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதும் தான் இந்தியா செய்யக் கூடியவை. மனிதாபிமான அடிப்படையில் தலையிடுவோம் என்று இந்திய அரசு சொல்வது தவறானது. இதே அடிப்படையில் காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தான் உதவலாமா என்ற கேள்வி வரும்.

நமது அரசியல் கட்சிகள், இலங்கை அரசின் ராணுவ அணுகுமுறையை நிறுத்தச் சொல்லி வற்புறுத்துவதே முதலும் முக்கியமானதுமான காரியம்.

இலங்கை அரசு இணங்காவிட்டால் ஐ.நா. மூலம் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஏற்பாடு செய்து பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வற்புறுத்த வேண்டும். மத்திய அரசின் நிர்வாகத்தில் பங்கு பெற்றிருக்கும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகள் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் நடக்க வேண்டும் என்பதும் முக்கியமான ஒன்று!"

சந்திப்பு: **ப்ரியன்**



• மருத்துவமனையில் தமிழ்க்குடிமகன்



• டிரைவர் ஜெயபாலன்

"அப்பாவைப் பதினைந்து நாட் களுக்கு ஒருமுறை எப்படியும் பார்த்து விடுவேன். சொந்த வேலை நிமித்தமாக மதுரையில் தங்கியிருந்த எனக்கு, திருவாரூர் தேர்த்திருவிழாவில் கலந்து கொள்ள அப்பா வருவதாகத் தகவல் கிடைத்தது. அவர் தஞ் சைப் பக்கம் வந்தால் தமது தொகுதியான இளை யான்குடிக்கு வராமல் செல்ல மாட்டார். அப் போது மதுரை வரும் அவரைப் பார்த்துவிடலாம் என்று ஆவலோடு இருந்தேன். மறுநாள் பத்திரிகையில் வந்த விபத்துச் செய்தி இடிபோல் தாக்க, உடன் சென் னைக்கு ஓடி வந்தேன்!'' என்கிறார் சாலை விபத்தில் சிக்கி சென்னை மலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அமைச்சர் தமிழ்க்குடிமகனின் கடைசி மகன் பாரி.

"காலை ஏழு மணிக்குத் திருவாரூரில் தேரோட்டம் என்ப தால் அன்றுதான் டில்லியிலிருந்து சென்னை திரும்பியவர், வீட்டுக்குக் கூடச் செல்லாமல் விமான நிலையத்திலிருந்தே நேரே திருவாரூர் கிளம்பி இருக்கிறார். கொட்டிவாக்கம் அருகே கார் வந்துகொண்டிருந்திருக்கிறது. அப்போது எதிரே தாறுமாறாக வந்த சியலோ கார் நேருக்கு நேராக மோதி விட்டது! பின்னால் வந்து கொண்டிருந்த போலீஸ் பாது காப்பு வேனில் அப்பாவையும், அடிபட்ட டிரைவர் உள் ளிட்ட மற்றவர்களையும் மலர் மருத்துவமனையில் சேர்த் திருக்கிறார்கள். விபத்தில் அப்பாவுக்கு இடது கை மணிக் கட்டு தலைகீழாகத் திரும்பி விட்டது. இடுப்பிலிருந்து எலும்பு ஒன்றை எடுத்து, கையில் பொருத்தி ஆபரேஷன் செய்திருக்கிறார்கள். விபத்து நடந்தபோது பல்லைக் கடித் ததால் வாயைச் சுற்றிலும் காயம்! எனவே பல இடங்களில் தையல் போட்டிருக்கிறார்கள். காயம் ஆறினால்தான் அவரால் பேச முடியும். அப்பாவின் டிரைவர் ஜெய பாலனுக்கு வலதுகால் தொடை எலும்பும், கெண் டைக்கால் எலும்பும் முறிந்து விட்டன!'' என்ற பாரி, டிரைவரிடமும் நம்மை அழைத்துப் போனார்.

"இருபது வருஷமா டிரைவரா இருக்கேன்... இவ் வளவு மோசமான விபத்தை நான் பார்த்தது கிடையாது. எப்போதும் முன் சீட்லதான் ஐயா உட்காருவார். முப்ப தாம் தேதி இரவு சென்னை விமான நிலையத்துல ஐயா வுக்காகக் காத்துக்கிட்டு இருந்தோம். அவர் வந்ததும் வீட்டுக்குப் போயிட்டு போகலாமான்னு கேட் டேன். வேண்டாம்னு சொல்லிவிட்டார். அங் கிருந்தே திருவாரூர் கிளம் பிட்டோம். கொட்டிவாக் கம் பக்கத்துல வந்தப்போ, கண்ணாடியைத் துடைச் சுட்டு, (பனி படர்ந்திருந்த தால்) பிறகு போகலாம்ங்கிற முடிவோடு, இடது பக்கமா வண்டியை திருத்த, மெல்ல

ஸ்லோ செய்ய ஆரம்பிச்சேன். அப்போ எதிரில் முன்னூறு அடி தூரத்துல வந்துகிட்டு இருந்த கார் ஒய்ட்லைனைத் தாண்டி, எங்க சைடை நோக்கித் தாறுமாறாக வந்தது. உடனே ஐயாவும் 'ஓரம் கட்டு, ஓரம் கட்டு'ன்னு குரல் கொடுக்க ஆரம்பிச்சிட்டார். வண்டியை நிறுத்தறதுக்கு முன்னாடி மோதிட்டாங்க... ஐயா மயக்கமாயிட்டார். எனக்கும்



• மலர் மருத்துவமனை

எதுவும் தெரியலை. ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். அந்தக் கார்ல வந்தவங்க குடிச்சுட்டுத்தான் ஓட்டி இருக்கணும்... ஏன்னா சைக்கிள் ஓட்டுற மாதிரி வந்தாங்க'' என்று முடித்தார்.

அமைச்சர் காரின் மீது மோதியதாகக் கூறப்படும் சியலோ காரில் செந்தில் குமார், பாஸ்கர், ஆண்டனி ராஜ், வெள்ளைத்துரை, பிரகாஷ் சந்திரன் என ஆறு பேர் பயணம் செய்தார்களாம். அதில் காரை ஓட்டி வந்தவர் பாஸ்கர். எல்லோருமே வேளச்சேரி கலைக் கல்லூரி ஒன்றின் மாணவர்கள். எல்லோருக்குமே பலத்த அடி என்கிறார்கள். பாஸ்கர், செந்தில், ஆண்டனி ஆகிய மூவரும் மலர் மருத்துவமனையிலேயே சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

பாஸ்கருக்கு வலது காலும், செந்திலுக்கு வலது கையும் உடைந்து ஆபரேஷன் செய்யப்பட்டு இருந்தார்கள்.

ஆண்டனிராஜ் தெளிவாகவே பேசினார்.

"நீலாங்கரையில் நண்பன் திருமணத்துக்குப் போய்விட்டு, அங்குள்ள பஷிரா ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டோம். கொட்டிவாக்கம் அருகே வந்தப்போ... சைரன் போட்டுக் கொண்டு ஒரு அம்பாசிடர் கார் மட்டும் தனியே வந்து கொண்டிருந்தது. ஆனால் பயங்கர வேகம்! பாதுகாப்பு வேன் பக்கத்திலேயே வந்து கொண்டிருந்தது என்று சொல்வது சுத்த ரீல்! அது ரொம்ப தூரத்தில்தான் வந்து கொண்டிருக்க வேண்டும். நாங்கள் ஒயிட்லைனைத் தாண்டி ஓர்

# தப்பித்தார்

# தமிழ்க்குடிமகன்!

அடிகூட அந்தப் பக்கம் செல்லவில்லை. இரண்டு கார்களும் வேகமாக கிராஸ் செய்து போய் விடும் என்றுதான் நான் நினைத்தேன்... ஆனால் விபத்து ஏற்பட்டது எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது. சத்தியமாக நாங்கள் குடிக்கவில்லை. குடித்திருந்தால் ஸ்பாட்டிலேயே எல்லோரும் இறந்திருப்போம்'' என்கிறார் ஆண்டனி.



இப்போது இரவ உணவு மட்டுமே சாப்பிட்டு வரும் அமைச்சரை, முதல்வர் உடனே வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறார். தொண்டர்கள், நிர்வாகிகள் என்று உடன்பிறப்புகளின் கூட்டம் மருத்துவமனையை மாநாட்டரங்கம் ஆக்கியிருக்கிறது. பெரிய ஆபத்து ஏதுமில்லை. விரைவில் அமைச்சர் வீடு திரும்பி விடுவார் என்கிறது மருத்துவமனை வட்டாரம்.

— ஆர். சி. ஜெயந்தன்
படங்கள்: வெங்கடேஷ்

• பாரி

● ஏ. ஆர். என் மணி, திருச்சி-2 ❒

*? பெண் சாமியார் மோசடி, கிரிக்கெட் மோசடி, நிதிநிறுவன மோசடி, மூலிகை பெட்ரோல் மோசடி, ஜாதி சான்றிதழ் மோசடி, ரூபாய் இரட்டிப்பு மோசடி... இரு கைவிரல் பத்தாது போலிருக்கிறதே?*

! இத்தனை மோசடிகளிலும் பொது மக்களின் பேராசை காரணமான ஒத்துழைப்பு இருந்திருக்கிறது என்பதைக் கவனியுங்கள்!

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்.

*? தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து தேசிய அளவில் விலக வாய்ப்பில்லை, ஆனால் மாநில அளவில் விலக வாய்ப்பு உள்ளது என்கிறாரே பா.ம.க. தலைவர் ராமதாஸ்...?*

! இதெல்லாம் தொகுதி உடன்பாட்டுக்கு முன் நிகழும் மிரட்டில் டாக்டிக்ஸ். தேர்தல் நெருங்குகிறது அல்லவா?

● ப்ரீத் சூர்யா, சிதம்பரம்.

*? நளினிக்குத் தண்டனையைக் குறைத்திருப்பது அபாயகரமான முன்னுதாரணம் என்று வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளாரே...?*

! உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் ஒரு நீதிபதி கருணை காட்டலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்; ராஜீவ் மரணத்தால் மிக அதிகமான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் சோனியாவும் கருணை காட்டுமாறு ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்துள்ளார். இந்நிலையில் கருணை காட்டாமல் போனால்தான் தவறாகிவிடும். மரண தண்டனை பெற்ற அனைவருக்கும் கருணை காட்டினால்தான் அபாயம்.

● ஆறுபாதி திருமால்,
சென்னை – 50 ✱

*? கிருஷ்ணா நீர் கிடைத்துவிட்டால் சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் தீர்ந்துவிடுமா?*

! நிச்சயம் தீராது. ஆனால் துளியூண்டு குறையும். அந்தத் துளியூண்டுக்கே ஏங்கி நன்றி சொல்லும் நிலையில் இருக்கிறது சென்னை.

● பி.எம். வள்ளி, மதுரை-16.

*? மே 2 முதல் தபால் ஊழியர் ஸ்டிரைக் வாபஸானது பற்றி...?*

! கூரியர் நிறுவனங்களுக்கு ஏமாற்றம். நிற்க. அத்தியாவசியமான அமைப்புகள் வேலை நிறுத்தம் பற்றிச் சிந்திக்கவே கூடாது. பேச்சு வார்த்தை மற்றும் இதர ரக போராட்டங்களைத்தான் கையாள வேண்டும்.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

*? மே 7 அன்று சிதம்பரத்தில் தமிழீழ ஆதரவு எழுச்சி மாநாடு, 'ஆனையிரவு வெற்றி' மாநாடாக நடத்தப்படும் என பழ. நெடுமாறன் அறிவித்துள்ளாரே?*

! நெடுமாறன், வைகோ போன்றவர்களின் புலிகள் ஆதரவுப் பிரசாரத்தைவிட ஆபத்தானது எது தெரியுமா...? அத்தகைய பிரசாரத்தை விரும்பாத கட்சிகள்கூட அரசியல் ஆதாயத்துக்காக அதை எதிர்க்கத் தவறுவதுதான்!


# கிருஷ்ணா தண்ணீர்


• மிரட்டல் மன்னர்!
• இரட்டைப் பரிந்துரை.
• அவசரம்!
• அபாய அறிவிப்பு!

● கே. வைத்யநாதேஸ்வரன், நெய்வேலி –3.

*? தாய்மையைக் காரணம் காட்டி நளினிக்கு வழங்கப்பட்ட கருணையைப் போல் சேடப்பட்டியாரின் மகன் மலர்விழிக்கு (கைக்குழந்தையுடன் இருக்கிறாரே) பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்வது பற்றி அரசு ஆலோசிக்குமா?*

**நீங்கள் கேட்டவை— தராசு**



• ஜோர் ஜோடி!

• தாய்மைக்குத் தயவு...?

# கஷ்டம் தீர்க்குமா?

தான். ஆனால், அவர்களாவது பகுத்தறிவைப் பயன்படுத்த முடியும். வாயில்லா ஜீவன்களின் நிலைதான் மிகக் கொடுமையானது. மலை மலையாக விலங்குகளின் பிணங்களை லாரிகள் ஏற்றிச் செல்லும் பயங்கரக் காட்சி கதிகலங்கச் செய்கிறது. இந்தக் கொடுமை போதாதென்று ரான்தம்பர் சரணாலயத்தில் drooping head syndrome என்ற கொடும் நோயால் பறவைகள் செத்து விழுந்து கொண்டிருக்கின்றனவாம். உட்கார்ந்த நிலையில் தலை தொங்கிப் போன ராஜாளி பறவையின் படம் பார்க்கவே மிகவும் கலக்கமாயிருக்கிறது. கடும் பஞ்சத்தை விடக் கொடூரம் ஒன்று உண்டென்றால் அது பஞ்ச நிவாரணத்தில் அரசின் மெத்தனம், சிவப்பு நாடா அணுகுமுறை ஆகியனதான்.

● அனுஷா, சென்னை – 20.

? சோ.பாவுடைய குற்றச்சாட்டுக்கு (கல்கி பேட்டி) துரை முருகன் அளித்த மறுப்பை கல்கி வெளியிடத் தவறியது என்று குறிப்பிட்டு, அமைச்சரின் அந்த மறுப்புக் கடிதத்தையும் பிரகரித்துள்ளதே முரசொலி...?

! சோ.பா. பேட்டிக்கு (இதழ் தேதி–23.4.2000) அமைச்சரின் பதில் வந்தது 22.4.2000 அன்று மாலைதான். அக் கடிதம் வருவதற்குள்ளாக 30.4.2000 இதழ் அச்சேறிவிட்டது. எனவே 7.5.2000 இதழில் துரைமுருகனின் கடிதம் இடம்பெற்றுள்ளது. அதற்குள் அவசரப்பட்டு முரசொலியில் பிரகரிக்கச் செய்துவிட்டார் அமைச்சர்.

! யானைக்கும் பூனைக்கும் வித்தியாசமில்லையா என்ன...? மரண தண்டனை அல்ல; ஒரு வருஷம் கடுங்காவல்தான் மலர்விழிக்கு.

● மு. அப்துல் மஜீத், வானூர்.

? பல கட்சிகளிடமிருந்தும் 'அழைப்பு' வருவதாக அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்டவர்கள் சொல்லிக் கொள்கிறார்களே...?

! இவர்கள் திருநாவுக்கரசின் அழைப்பை ஏற்றிருந்தால்தான் சரியாக இருந்திருக்கும். தி.மு.கவில் சேர்ந்ததில் இவர்களுக்கும் பயன் ஏதும் இராது; தி.மு.கவுக்கும் அவப் பெயர்தான் உண்டாகும்.

● எஸ். ராமசுப்ரமணியன், தூத்துக்குடி.

? ஷாலினி அஜித் ஜோடிப் பொருத்தம் எப்படி...?

! கண்படும் அளவுக்கு ஜோடிப் பொருத்தம் என்று நினைத்தேன். அதற்கேற்றார்போல் அஜித் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு வந்த ரசிகர் கூட்டம் தறிகெட்டு அவர் காரை உடைத்து நொறுக்கிவிட்டது. போங்கள்!

● மல்லிகை மன்னன், மதுரை–17.

? வெயில் கொடுமை தாங்காமல் குஜராத்திலும் ராஜஸ்தானிலும் பல உயிர்கள் பலியாகிவிட்டனவே?

! மனிதர்கள் படும் அவஸ்தையே பரிதாபம்

☐ ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஏ.ஆர்.என். மணி,
47, மூக்கப்பிள்ளை லேன்,
வடக்கு ஆண்டார் வீதி,
திருச்சி – 600 002.

• ரூ. 25 பரிசு பெறுபவர்:
ஆறுபாதி திருமால்,
123, சத்தியாநகர்,
முகப்பேர் ரோடு,
பாடி, சென்னை – 50

# அனந்தமங்கலம்

ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தின்போது வருண பகவான் தோன்றி அற்புதமான ஒளி வீசும் ஒரு முத்து மாலையை ராமபிரானுக்கு அளித்தார். அந்த முத்து மாலையை, முடிசூடி சக்கரவர்த்தினியாக வீற்றிருந்த சீதையிடம் ராமர் கொடுத்து "உனக்குப் பிரியமானவருக்கு நீ இதைக் கொடு" என்று சொன்னார்.

அதைக் கையில் பெற்ற சீதாதேவியின் மனத்தில் யாருக்குப் பரிசளிப்பது என்ற சந்தேகமே எழவில்லை. அடக்கத்துடன் சற்று மறைவாக நின்று பட்டாபிஷேகத்தைக் கண்டு மனம் களித்துப் பரவசமாக நின்று கொண்டிருந்த அனுமாரிடம் நேரே சென்றாள் சீதை. முத்து மாலையை அவர் கையில் கொடுத்தாள். அனுமாருக்கு எப்படி இருந்திருக்கும்!



"விற்பெருந்
தடந்தோள்
வீர!
வீங்கு நீர்
இலங்கை வெற்பில்
நற்பெருந்
தவத்தளாய
நங்கையைக்
கண்டேன் அல்லேன்.

..........

கற்பெனும்
பெயரதொன்றும்
களிநடம்
புரியக் கண்டேன்"

என்று ஜனகபுத்திரியைப் பற்றிப் பரவசமாகப் பேசியவரல்லவா? அந்த சீதையின் கையால் பரிசு பெற்றவர் அனுமார். அஷ்ட ஐச்வரியங்களுக்கும், நன்நடத்தைக்கும், காதலுக்கும், அன்புக்கும், இரக்க குணத்துக்கும் இருப்பிடமாக இருக்கும் ஜானகியின் கையினால் பரிசு பெற்றவர் அனுமான். மகாலக்ஷ்மியான சீதாபிராட்டிக்கே உதவி செய்த ஆஞ்சனேயர், பெண்கள் துயரத்திலோ துன்பத்திலோ அழைத்தால் உதவப் பாய்ந்து வர மாட்டாரா?

லாங்கூலன், அஸாத்ய ஸாதகன், ராமதூதன், இருபாஸிந்து, குமாரன் கபிச்ரேஷ்டன், மஹாதீரன், வாயு புத்திரன், பவனஜன், மஹாபலன், ஆஞ்சநேயன் என்றெல்லாம் ஹனுமானை அழைத்துக் கொண்டாடுகிறார்கள்.

சிக்கல் தலத்தில் சின்னஞ்சிறு பால ஆஞ்சநேயராகவும், நாமகிரியிலும், நங்கநல்லூரிலும் சீதாபிராட்டியைத் தேட இலங்கையை நோக்கி மகேந்திர மலையிலிருந்து தாவிய வானளாவிய ஆஞ்சனேயராகவும் தரிசிக்கிறோம்.

ப்ரும்மா, விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்திகளின்

**தெய்வ தரிசனம் — 28**



# ஆஞ்சனேயர்

அம்சத்தையும் தன்னிடம் பெற்று பக்தர்களுக்கு வர மருளுகின்ற திரிநேத்ர தச புஜ ஆஞ்சனேய ஸ்வாமியைத் தரிசனம் செய்ய அனந்தமங்கலத்துக்குப் போக வேண்டும். மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி போகும் வழியில் (திருக்கடையூரும் அருகில்தான் இருக்கிறது) இருக்கிறது அனந்தமங்கலம்.

கோவில் என்னவோ அருள்மிகு ராஜகோபால ஸ்வாமிக்கு விஜயநகர மன்னர்கள் கட்டியது. புகழ் என்னவோ இந்தக் கோவிலில் மூன்று கண்களுடனும், பத்துக் கரங்களுடனும் பறக்கச் சிறகுகளுடனும் காட்சி தரும் அனுமாருக்குத்தான்! தன் பக்தனுடைய பெருமையையும் கீர்த்தியையும் பார்த்து உள்ளம் பூரித்து அதிக அருள் செய்கிறார் ஸ்ரீராஜகோபாலன். ஸ்ரீ கிருஷ்ணன் கோவிலில் ஆஞ்சனேயருக்கு இவ்வளவு கீர்த்தியும், சக்தியும் இருப்பது சிறப்பு. அனந்தமங்கலம் ஆஞ்சனேயர் கோவில் என்றுதான் எல்லாரும் சொல்லுகிறார்கள். அங்கே போய்த் தரிசனம் செய்தபோதுதான் ஸ்ரீருக்மிணி ஸத்யபாமா ஸமேதரான ராஜகோபால ஸ்வாமியின் கோவில் என்பதே தெரிய வந்தது!

மூலவர் சங்கு சக்கரம், சாட்டை, வெண்ணெய் கரங்களில் ஏந்திக் கொண்டு கண்ண பரமாத்மா போல விளங்குகிறார்.

பொன் மயமாக ஜொலிக்கின்ற உலோகத்தினால் செய்யப்பட்ட மூர்த்தியோ, ப்ரும்மா விஷ்ணு சிவன் இவர்கள் மூவரும் ஒன்றாகி ஆஞ்சனேயராக உருவெடுத்தது போலக் காட்சியளிக்கிறார்.

பத்துக் கைகளில் ஏந்தியிருக்கும் ஆயுதங்களைப் பார்க்கலாம். சங்கு, சக்கரம், சூலம், கபாலம், மழு, பாசம், வில், அம்பு, சாட்டை, வெண்ணெய் எல்லாம் இந்த அபூர்வமான புஜபல பராக்ரம ஆஞ்சனேயரை ஸ்ரீமந் நாராயணனாகவும், ஈசுவரனாகவும், ராமனாகவும், கண்ணனாகவும் தோன்றச் செய்கின்றன. குங்குமத்தால் அர்ச்சனை செய்து சிவப்புப் பட்டு உடுத்துவதால் அம்பிகையின் அம்சமும் சேர்ந்தவர் இவர். இந்த முக்கண் ஆஞ்சனேயரைத் தரிசிப்பது அற்புதமான அனுபவம்.

அதுவும் நான் சென்ற தினம் தை அமாவாசை. மேலும் சனிக்கிழமையில் ச்ரவண நக்ஷத்திரம். கோவிலை நெருங்கும் போதே சாரி சாரியாக மக்கள். சாலையில் மக்கள் போவதும் வருவதுமாக ஆயிரக்கணக்கான பக்தர்கள்! எங்கே தரிசனம் கிடைக்கப் போகிறது என்று தோன்றியது. கோவிலை நெருங்கியபோது இந்தச் சின்னக் கோவிலில் இத்தனை பேர் எப்படி தரிசனம் செய்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் என்ன ஒழுங்கு! அன்பர்கள் கொண்டு வரும் தேங்காய்களை உடைக்க ஓர் இடம். இளநீர் வழிந்து ஓடாமல் அடியில் பாத்திரம். வரிசையில் நின்று மெள்ள மெள்ள நகர்ந்து மூலவரைத் தரிசனம் செய்து கொள்கிறோம். எல்லாருடைய காணிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரசாதம் அழகாக வழங்கப்படுகிறது. ரொம்பக்

ஆனந்தி

கச்சிதமான ஏற்பாடு. இப்படி ஒழுங்கு படுத்தி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்திருக்கும் கோவில் நிர்வாகிகளை எவ்வளவு பாராட்டினாலும் போதாது. கிட்டத்தட்ட நான்கு லட்சம் பேர் தரிசனத்துக்கு வந்திருப்பார்கள் என்று சொன்னார்கள்!

லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசிக்க வேண்டும் என்பதால் திரிநேத்ர தசபுஜ ஆஞ்சனேயரைப் பிராகாரத்தில் பந்தலில் உயரமாக எழுந்தருளச் செய்திருக்கிறார்கள். அதனால் எல்லோரும் நன்றாகத் தரிசிக்க முடிகிறது. பிராகாரத்தில் திரும் பிய பக்கமெல்லாம் ஆஞ்ச னேயர் பச்சை வண்ணத் தில் மதில்



மீது காட்சி தருகிறார்.

எப்படியோ தசபுஜ ஆஞ்சநேயருக்கு அருகில் சென்று அவருக்குச் செய்யப் பட்டுள்ள அற்புதமான அலங்காரங்களை அன்று பார்க்கக் கொடுத்து வைத்திருந்தது. மாலைகள் என்றால் எத்தனை? பந்தல் முழுவதும் மாலைகள்தான்! மாலை மலை! எலுமிச்சம் பழ மாலைகள் வேறு ஒரு பக்கம் குவிந்து கிடக்கிறது. மணிகளின் சுநாதம், நைவேத்யங்களிலிருந்து வரும் தனித்த வாசனை, பச்சைக் கற்பூர வாசனை, தேன் மணம், பன்னீர் மணம், சாம்பிராணி வாசனை என்று பலவித வாசனைகளிலேயே நமக்கு அனுக்ரஹம் கிடைத்துவிடுகிறது. பழங்களின் மணம் அலாதியாக நம் உடல் முழுவதும் பரவுவது போல இருக்கிறது.

அதிசயம் என்னவென்றால் அதிக சத்தம் இல்லை. கட்டுப்பாடாகத் தரிசனம் செய்யும் எளிய மக்கள். திடீரென்று இனிமையான குரலில் சுத்தமான கர்நாடக ராகங்களில் ஹனுமானின் நாமங்களைச் சொல்லி அர்ச்சனை செய்வது காதில் விழுகிறது. அப்படியே உள்ளமும் உடலும் சிலிர்த்துப் போகிறது.

ஹனுமனை உபாசிப்பவர்கள் அசாத்தியமான காரியங்களைச் சாதிப்பார்கள். அதற்கான சக்தியை அவர் தருவார்.

நல்ல புத்தி, பலம், புகழ், மனத்திடம், பயம் என்ற உணர்வே தோன்றாதிருத்தல், வியாதியற்ற சரீரம், சுறுசுறுப்பு, பேசுவதில் சாமர்த்தியம் இவையெல்லாம் ஸ்ரீஹனுமானை நினைத்த மாத்திரத்திலேயே உண்டாகும் என்கிறது சுலோகம்.

நமக்குக் கதை பிடிக்குமே! தல வரலாறைக் கேட்கலாமா?

ராவண வதத்துக்குப் பின் சீதையை அழைத்துக்கொண்டு சகாக்கள் சூழ அயோத்திக்குத் திரும்பும் வழியில் பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்தில் புஷ்பக விமானத்திலிருந்து இறங்கினார்கள். அங்கே வந்த நாரதர், ராமபிரானைப் பார்த்து, "ஹே ராமா, ராவணனை நீ ஸம்ஹாரம் செய்தும் அரக்கர் குலம் அழியவில்லை. ரக்தபிந்து, ரக்தாக்ஷன் என்று இரண்டு அசுரர்கள் ஏழு சமுத்திரங்களுக்கும் அப்பால் கடலில் மூழ்கித் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தவம் பலித்தால் உலகமே நாசமாகும். நீ உடனே அவர்களைக் கண்டுபிடித்து அழிக்க வேண்டும்' என்றார்.

ராமபிரானுக்குச் சங்கடமான நிலை. குறிப்பிட்ட நேரத்துக்குள் அயோத்திக்குப் போய்ச் சேராவிட்டால் பரதன் தீக்குண்டத்தில் பாய்ந்து விடுவான். சற்று யோசித்து அனுமானைக் கூப்பிட்டார்.

"ரக்த பிந்து, ரக்தாக்ஷன் இரண்டு பேரையும் சம்ஹாரம் செய்துவிட்டு வா" என்று சொன்னார்.

ராமரையும் சீதையையும் வணங்கி ஹனுமான் புறப்பட்டபோது எல்லாத் தேவர்களும் வந்து குழுமிவிட்டார்கள்.

திருமால் சங்கு சக்கரங்களை அளித்தார். பிரும்மா பிரும்ம கபாலத்தைக் கொடுத்தார். மற்ற தேவர்களும் ஆயுதங்கள் அளித்தார்கள். பத்து கரங்களிலும் பத்து ஆயுதங்கள் பளபளத்தன. அப்போது கைலாயத்திலிருந்து சிவபெருமான் வந்தார். தன்னுடைய நெற்றிக் கண்ணையே அனுமானுக்கு வழங்கி விட்டார். கருடன் மிகப் பெரிய சிறகுகளை அளித்தார். விரைவாகப் பறந்து போய் அந்த இரண்டு ராக்ஷசர்களையும் தவத்திலிருந்து எழுப்பி யுத்தம் செய்து ஜெயித்து விட்டார் ஹனுமான். அசுரஸம்ஹாரம் செய்து விட்டுத் திரும்பும்போது பசுமையான மரங்கள் சூழ்ந்த ஒரு சோலை தெரிந்தது. அங்கே சற்றுத் தங்கி ஸ்நானம் செய்து இளைப்பாறினார். அந்த இடமே ஆனந்தமங்கலம். பிறகு அனந்தமங்கலமாகி விட்டது. இங்கே இருக்கும் குளத்தை ஹனுமான் தீர்த்தம் என்று சொல்கிறார்கள். பிணிகளைப் போக்கும் மருந்து என்று நம்புகிறார்கள்.

அனுமன் சந்நிதியிலிருந்து கிளம்ப மனமே வரவில்லை. ஆயிரக்கணக்கான பக்தர்கள் காத்திருப்பதால் காதுகளில் ரீங்கார மிடும் இனிய இசையின் ஞாபகத்துடன் நகர வேண்டியதாக இருக்கிறது.

ஐம்புலன்களையும் வென்ற சிரஞ்சீவி ஹனுமான். ஆனந்தமாகவும், களையான முகத்துடனும், அபூர்வமான தோற்றத்துடனும் காட்சி தரும் முக்கண்ணனாகிய தசபுஜ அனுமானைப் பூஜித்தால் மனத்தில் நினைத்தது நடக்கும். வெண்ணெய் சாத்தினால் நமது கஷ்டங்கள் வெண்ணெய் உருகி ஓடுவது போலப் போய்விடும்.

ராகு காலம், எம கண்டம், அஷ்டமி நவமி இவை எதுவும் ஆஞ்சநேயரைத் தொழுவதற்குத் தடை இல்லை.

வெற்றிலை, துளசி, வடை மாலைகள் சாத்துவது சிறப்பு. வட நாட்டில் ஜிலேபி மாலை சாத்துவார்கள்!

ஸ்ரீ ராஜகோபால சுவாமியைத் தரிசித்து விட்டுக் கிளம்புகிறோம். ஸ்ரீ ருக்மிணி சத்யபாமா அருகில் நிற்க "என் பக்தனின் பெருமையைப் பார்த்தாயா?" என்று பெருமிதத்துடன் கேட்பது போலிருக்கிறது அவருடைய புன்னகை தவழும் வதனம்.

சூரிய பகவானிடம் சகல சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தாலும் ஹனுமான், எல்லாத் தேவர்களிடமும் வரங்கள் பெற்றவர். அளவற்ற சக்தி கொண்டவர். சீதா தேவிக்குத் தன் விசுவரூபத்தைக் காட்டி பிரமிக்கச் செய்தவர். ராமலக்ஷ்மணர்களைத் தன் தோள்களில் சுமந்து செல்லும் ஆற்றல் படைத்தவர். இறக்கைகள் இல்லாமலேயே பறக்கக் கூடியவர்.

இத்தனை பலமும், புத்தி சாதுரியமும், செய்யும் ஆற்றலும், கல்வியும், தவமும், புலன் அடக்கமும், தீரமும் அறிவுக்கூர்மையும் படைத்த அனுமானுக்குத் தன் பலம் தெரியாது என்பதுதான் ஆச்சரியம்.

அவருடைய அடக்கமே மிகச் சிறப்பானது. அறிவு பலம் உடையவர்களுக்கும் சரி. உடல் வலிமை உடையவர்களுக்கும் சரி ஆஞ்சனேயர் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று வள்ளுவர் சொன்னபடி நாம் நடந்து கொள்வதற்கு ஹனுமான் துணை நிற்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்.

இந்த தெய்வ தரிசனம் தொடரை, அற்புதத் தோற்றம் கொண்ட அனந்தமங்கலம் ஆஞ்சநேயர் குறித்த இக்கட்டுரையுடன் நிறைவு செய்கிறேன். பக்திக்கு உதாரணமானவன், பக்தியைத் தவிர வேறொன்றறியாதவன், பகவானிடம் எதையும் கேட்காத அசஞ்சல பக்திமான் ஆஞ்சநேயன். எந்தக் கோவிலுக்கு எப்போது சென்றாலும் அவன் உள்ளத் தூய்மையை ஒரு கணம் நினைத்துப் பார்த்துக் கொண்டோமானால் நம் தரிசனம் பூரணமாகி விடும் அல்லவா!

ஓம் சாந்தி.

படங்கள்: ஸ்ரீஹரி



*இத்தொடருக்கான பல தகவல்கள் சென்னை உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் திரட்டப்பட்டன.*



# கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

எக்ஸ்-கமாண்டர் என்று மம்முட்டியும், எக்ஸ்-கேம்பிளர் என்று மணிவண்ணனும் பெருமையில் மல்லாந்து போய்த் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ள, ஒரு பெரிய ஃபைனான்ஸ் கம்பெனி க்ரூப்பையே தலைமை ஏற்று நடத்தும் அப்பாஸ், "நான் ஒரு சாதாரண மனுஷன்" என்று இன்ட்ரொடியூஸ் பண்ணிக் கொள்வது;

மம்முட்டியின் காதலை ஒருவழியாகப் புரிந்து கொண்டு அவரின் அன்பை அங்கீகரிக்கும் விதத்தில் ஐஸ்வர்யா ராய் அவரை இறுக்கி அணைத்துக் கொள்ள, அந்தப் பரவசமான கணத்தில் கூட மம்முட்டியின் ரியாக்ஷன் அவருடைய சங்கோஜ குணத்தால் அண்டர்ப்ளே ஆவது;

தன்னுடைய அபிமான பாடகியையே பெண் பார்க்கப் போகும் அளவுக்கு அதிர்ஷ்டம் அடித்த அஜீத், அவர் காப்பி கொண்டு வந்து தரும்போது ஸ்பிரிங் மாதிரி எழுந்து நின்று வாங்கிக் கொள்வது;

பிரமோஷன் கிடைத்த சந்தோஷத்தில் தபு தன்னுடைய பாஸ் ரகுவரனுக்குக் கைகுலுக்கத் தானே கூச்சத்துடன் வாலண்டியர் செய்வது;

செயற்கைக் கால் பொருத்தப்பட்ட மம்முட்டியைப் பார்த்தவுடன், "இந்த மாமா குளிக்கும்போது காலைக் கழட்டி வைத்து விடுவாரா?" என்று அந்த வயதிற்கே உரித்தான சந்தேகங்களை ஷாமிலி பட்டுப் பட்டென்று தீர்த்துக் கொள்வது...

– காட்சிகளை இவ்வளவு யதார்த்தமாக இவ்வளவு கவிதை நயத்துடன் அமைக்க தமிழ்ப்பட உலகில் ஒரு ஜீவன் இல்லை என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நம்மை ஒரு உலுக்கு உலுக்கி அசத்தி விடுகிறார் ராஜீவ்மேனன்.

விரட்டி விரட்டி தபுவைக் காதலித்த அஜீத், தபு அவரை போனில் அழைக்கும்போது, "அப்புறம் பேசச் சொல்லுடா இடியட்!" என்று அஸிஸ்டென்டிடம் கத்த, நாமும் தபுவுடன் சேர்ந்து பொருமுகிறோம். ஆனால் அடுத்த நிமிடமே, படாதபாடு பட்டு முதல் திரைப்படத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கும் ஒரு மனுஷனுக்கு இத்தனை டென்ஷன் கூட இருக்காதா என்று தோன்றுகிறது.

அதே மாதிரி, ஆசை காட்டி மோசம் செய்துவிடும் அப்பாஸை நினைத்து நாமும் ஐஸ்வர்யாராயோடு சேர்ந்து ஆத்திரப்படுகிறோம். ஆனால் இன்னொரு கோணத்திலிருந்து சிந்தித்தால், விசுவாசமான அதிகாரிகளே பழிக்கு அஞ்சி ராஜினாமா செய்துவிட, தனிமனிதனாக மூழ்கிக் கொண்டிருக்கும் ஃபைனான்ஸ் கம்பெனியைக் கரையேற்ற முழி பிதுங்கிக் கொண்டிருக்கும் அப்பாஸ் செய்ததில் என்ன தவறு என்று தோன்றுகிறது. இப்படி, ஒவ்வொரு காரெக்டரின் எண்ண ஓட்டங்களையும் செய்கைகளையும் நியாயப்படுத்திவிடுவதுதான் ராஜீவ்மேனனின் மிகப் பெரிய பலம் என்று தோன்றுகிறது.

அஜீத், ஐஸ்வர்யாராய், மம்முட்டி, தபு, அப்பாஸ், ஏ.ஆர். ரஹ்மான், சுஜாதா அத்தனை பேரும் ஒரு துளி பிசிறில்லாமல் தங்கள் கான்ட்ரிபியூஷனைத் தந்திருக்கிறார்கள்.

திருஷ்டி சுற்றித்தான் போட வேண்டும்.

— கிருஷ்ணா சிதம்பரம்



# தாடி எப்படி மலையானது?

நாத்திகம், சுயமரியாதை என்பதெல்லாம் அறிவுபூர்வமானவை. மதம், கடவுள் நம்பிக்கை போன்றவையெல்லாம் உணர்வுபூர்வமானவை. வாழ்க்கையை அறிவுபூர்வமாகத்தான் வாழ வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அதனால், பிறருடைய கால்களில் - அவர்கள் எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் விழுந்து வணங்குவதெல்லாம் கூடாது என்பதுதான் எனது கொள்கை. என்றாலும் ஒருவன் எப்போதும் அறிவுபூர்வமாகவே வாழ்ந்து கொண்டிருந்து விட முடியாது என்கிற நிலை எனக்கும் ஏற்பட்டது.

நான் முன்பே எனது பள்ளிப் பருவத்தில் ஜனார்த்தனம் ஆசிரியர் எனக்கு உணவளித்த விஷயங்கள் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர் இப்போது பெரம்பூர்ப் பகுதியில் 'ஜெயம் கல்வி நிலையம்' என்று சில பள்ளிகளை நடத்தி வருகிறார். அவர் சில ஆண்டுகளுக்கு முன்பு என்னை அவரது பள்ளிக்கு அழைத்து மாணவர்களிடையே பேசச் சொன்னார். வழக்கமாக நான்தான் அதிகம் பேசுவேன் என்றாலும் அன்றைக்கு ஏற்பட்ட உணர்ச்சிப் பெருக்கால் என்னால் அதிகம் பேச முடியவில்லை. ஆசிரியர் ஜனார்த்தனம் அவர்கள்தாம் அதிகம் பேசினார். என்னைப் பாராட்டியும் புகழ்ந்தும் பேசினார்.

இறுதியில் எனக்கு அவர் பொன்னாடை போர்த்தியபோது நான் மிகுந்த உணர்ச்சிவசப்பட்டு, வெட்டிச் சாய்த்த மரம் போல அவரது கால்களில் விழுந்து விட்டேன். கூட்டமெல்லாம் முடிந்த பிறகு என்னைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் சோறு போட்டு, என்னைத் தமது பழைய பள்ளி மாணவனாகவே நினைத்துச் செல்லமாக ஓர் அடியும் கொடுத்து, "சாப்டுடா!" என்றார். அந்த வெள்ளிக் கிண்ணத்தை எனக்கே தந்து அனுப்பி வைத்தார்.

சரி, யார் காலிலும் விழாத - விழ

**நான் நாத்திகனில்லை — 18**

**பேராசிரியர் பெரியார்தாசன்**




இன்னொரு 52 வார டி.வி தொடர்! இம்முறை டி.டி.1ல். ஆனால் முக்கியமான வித்தியாசம் – இதில் சதா மூக்கைச் சிந்தும் மனைவிகளும் பல்லைக் கடிக்கும் கணவன்களும் டெலிபோனில் காதலிக்கும் இளைஞர்களும் வந்து போர் அடிக்க மாட்டார்கள். ஒவ்வொரு வாரமும் தனிக்கதை – இந்திய பாரம்பரிய இசையின் உயர்வை எடுத்துச் சொல்லும் வகையில் அமைந்திருக்கும். மாதுரி தீக்ஷித், மனிஷா கொய்ராலா, ஜாகிர் ஹுசைன், நானா பலேகர், பிர்ஜு மஹராஜ், ஷர்மிளா டாகூர், அமோல் படேகர், கவிதா கிருஷ்ணமூர்த்தி என்று நட்சத்திரப் பங்கேற்புடன் தயாராகி மே 7 முதல் ஞாயிறு காலை 10.30 நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகிறது ஸ்வர் சாதனா. நிகழ்ச்சி தயாரிப்பு: சங்கீதா சங்கர். ஹிந்தி நிகழ்ச்சி; தமிழ் தயாரிப்பாளர்... சங்கீதா! பிரபல வயலினிஸ்ட். வயலின் வித்வான் என். ராஜம் இவர் அம்மா; டி.என். கிருஷ்ணன் இவரது மாமா.

விரும்பாத நான் எப்படி அவர் காலில் விழுந்தேன் என்று யோசிக்க ஆரம்பித்த போதுதான் என் அறிவிலும் உணர்ச்சி பூர்வமான ஒரு பகுதி இருப்பதை உணர்ந்தேன். எல்லாச் சமயங்களிலும் ஒருவரால் அறிவுபூர்வமாகவே இருந்துவிட முடியாது என்பதையும் உணர்ந்தேன்.

இதனால், உணர்ச்சிபூர்வமான பகுதிகள் என்று என்னாலும் என்னைப் போன்றவர்களாலும் ஒதுக்கி வைக்கப்பட்ட ஆன்மீகவாதிகளின் பக்கம் என் கவனம் சென்றது. முன்பெல்லாம் வள்ளலாரைப் படித்தாலும் சரி, திருமூலரைப் படித்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் எந்த வகையில் கறுப்புச் சட்டை போட்டுப் பார்க்கலாம் என்கிற சிந்தனையில்தான் படிப்பேன். இப்போது அப்படியின்றி யாராக இருந்தாலும் அவர்களை அவர்களாகவே பார்க்க ஆரம்பித்தேன். அவர்களுடைய கருத்துக்களை ஆழ்ந்து படித்து, அவற்றில் ஒப்புக் கொள்ளக்கூடியவற்றை எடுத்துக் கொண்டு, முரண்பாடான விஷயங்களைப் பிறகு பார்த்துக் கொள்ளலாமே என்கிற எண்ணத்தில் அணுகினேன்.

இப்படி நான் முதலில் அணுகியது ஆதிசங்கரரிடத்தில். அவரை மத்வர் மிகக் கடுமையான வார்த்தைகளால் விமர்சித்திருக்கிறார். ராமானுஜர் அவரை பிரசன்ன பௌத்தர் என்று வர்ணித்திருக்கிறார் என் பதைப் படித்தபோது எனக்கு ஆதி சங்கரர் மேல் மேலும் மேலும் ஆர்வம் அதிகமானது.

அனைவராலும் 'பஜகோவிந்தம்' என்று அறியப்படுகிற அவரது 'த்வாதசமஞ்ஜரிகா' (பன்னிரு பாடல்களால் ஆனது)வை ஆழ்ந்து படித்தபோது ஆச்சரியமாக இருந்தது.

மூட ஜஹீஹி தனாகம – த்ருஷ்ணாம்
குருஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணாம்
யல்லபஸே நிஜகர்மோபாத்தம்
வித்தம் தே விநோதயசித்தம்

என்கிற அவரது முதல் பாடலிலேயே மனிதனை, 'அட மூடனே!' என்றுதான் அழைக்கிறார். 'மூட மனிதனே பொருளாசையை விடு. மாசிலா மனத்தினில் நல்லெண்ணம் நடு!' என்றுதான் ஆரம்பிக்கிறார். புத்தரும் இதையேதான் சொல்லியிருக்கிறார்.

ஒன்பதாவது பாடலில் 'நிச்சலதத்வே ஜீவன்முக்தி' என்கிறார் சங்கரர். அதாவது முக்தியடைவதென்பது இறந்த பிற்பாடு அல்ல. உயிரோடிருக்கும்போதே முக்தி நிலை பெறலாம் என்று ஆதிசங்கரர் சொல்லியிருப்பது, புத்தரின் கருத்துக்களுக்கும் தத்துவங்களுக்கும் இணையான ஒன்றாக எனக்குப்பட்டது.


இதுபோன்ற தத்துவங்களில் எனக்கு என்ன முரண்பாடுகள் இருந்துவிட முடியும்? எனக்கும் உடன்பாடுதான் என்பதால், இதுபோன்ற விஷயங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அனைவரும் அறியும் வண்ணம் வெளியிட்டால் என்ன என்று தோன்றியது. உடனே அந்தப் பன்னிரண்டு பாடல்களையும் மொழி பெயர்த்துச் சிறு புத்தகமாக வெளியிட்டேன்.

உடனே என் சகதோழர்கள் மத்தியில் எதிர்ப்பு. பெரியார்தாசன் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படி ஆதிசங்கரருக்கு வக்காலத்து வாங்கலாமா என்கிற கேள்விகள். நான் வழுக்கி விழுந்து விட்டதாகக் கிண்டல்கள்.

இருந்தாலும் அதையெல்லாம் நான் பொருட்படுத்தவில்லை. ஆதிசங்கரரிடம் பெரியார் எங்காவது ஒத்துப் போகிறாரா? அல்லது பெரியாரின் கருத்துக்களோடு ஆதிசங்கரர் ஒத்து வருகிறாரா என்கிற ஆராய்ச்சியில்தான் நான் ஈடுபட்டிருக்கிறேன்.

மனித வாழ்க்கை வாழ்வதற்கே. அதுவும் இன்பமாக வாழ்வதற்கே. மிருக வாழ்க்கைதான் பிறருக்குக் கொடுத்து வாழாத வாழ்க்கை. மிருகங்கள்தான் ஒரு குறிப்

பிட்ட காலத்துக்குப் பிறகு தனது குட்டிகளைக் கூட விலக்கி வைத்து விடும். தனக்கெனவே வாழும். மனிதர்களும் அப்படித் தனக்கெனவே வாழ்ந்தால் அப்புறம் எப்படி மனிதர்களாக இருக்க முடியும். மிருகங்களாகத்தானே இருக்க முடியும்! ஆக, மனிதன் மனிதனாக இருக்க வேண்டுமானால் பகிர்ந்து வாழ வேண்டும். இதை எந்தத் தத்துவம் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். வர்ணபேதங்கள் இல்லை என்று சங்கரர் சொல்லியிருப்பதை ஏற்றுக் கொள்வதில் எனக்கு என்ன கஷ்டம்? ஏற்றுக் கொண்ட ஒரு கருத்தை எடுத்துச் சொல்வதில் என்ன தவறு? பேதங்கள் மறைய இதுவும் ஒரு வழியல்லவா!



இவையெல்லாம் ஒருபுறமிருக்க, எனக்கு இன்னொரு முகமும் உண்டு. அதுதான் பிறருக்குத் தன் முனைப்புப் பயிற்சியளிப்பது. அதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்று கருதலாம்.

எங்கோ ஒரு மூலையில் எந்தவிதமான வளமும் நலமும் இல்லாமல் பிறந்து, வளர்ந்து, படித்து ஆசிரியர் தொழிலுக்கு வந்த நான், இப்போது பலரும் அறியப் படுகிற ஒரு நபராக எப்படி வளர்ந்தேன்? இதற்கு எனது தன்னம்பிக்கைதான் காரணம்.

1993-ம் ஆண்டு விவேகானந்தர் சிகாகோவில் பேசிய பேச்சுக்கான நூற்றாண்டு விழா நடந்தது. 1893ல் சிகாகோவில் நடந்த உலகச் சமய மாநாட்டில் இந்து சமயத்தின் சார்பில் விவேகானந்தர் பேசினார். அப்போது பௌத்த மதம் பற்றிப் பேசியவர் இலங்கையைச் சேர்ந்த அனகாரிக தம்மபாலா என்பவர். நூற்றாண்டு விழாவின்போது பௌத்த சமயம் பற்றிச் சிகாகோவில் பேசுவதற்காக என்னை அழைத்திருந்தார்கள்.

அங்கு சென்று நான் பேசிவிட்டு வந்த பிறகு, எனது பச்சையப்பன் கல்லூரியில் என்னைப் பாராட்டும்விதமாக ஒரு விழா எடுத்தார்கள். அதற்காக எனக்குப் பல இடங்களிலும் விழா எடுத்தார்கள் என்றாலும் எங்கள் கல்லூரியில் எடுத்த விழா என்பது எனக்கு மிகவும் பெருமை தரக்கூடியதாக இருந்தது.

அந்த விழாவில் பேசிய எங்கள் முதல்வர் (என்னை மாணவப் பருவத்திலிருந்தே அறிந்தவர்) "I saw him as a dust. Now I see him as a Mountain. If he can do, Why can't you?" என்று பிற மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்.

உண்மை அதுதான். ஒரு தூசியைப் போல் கிடந்த நான், இன்று பலரும் அறியப்படுகிற ஒரு நிலைக்கு எப்படி உயர்ந்தேன்? தன்னம்பிக்கை. எதைச் செய்தாலும் அதை முழு ஈடுபாட்டுடன் செய்வது. இதுதான் எனது வெற்றிக்கான காரணம். இதை அப்படியே - எனது சொந்த அனுபவங்களையே பிறருக்கும் எடுத்துச் சொல்லி அவர்களுக்கும் பயன்படுமாறு செய்ய முடியாதா என்று யோசித்தேன். செயல்படுத்தவும் செய்தேன்.

(தொடரும்)

சுகுமாரன்



'என் ஊர்' என்று எதைச்
சொல்வீர்கள்?
உங்கள் உள்ளங்கால் ரேகைகளில்
எந்த மண்
ஒட்டிப் படர்ந்திருக்குமோ?
அல்லது
எந்த மண்ணில்
உங்கள் உள்ளங்கால் ரேகை
தடமாகப் பதிந்திருக்குமோ?

உங்கள் சருமத்துளைகளில்
எந்த நீர்
ஊடுருவிக் கலந்திருக்குமோ?
அல்லது
எந்த நீரில்

உங்கள் வியர்வையின் உப்பு
உருமாறி ருசிக்குமோ?

உங்கள் சுவாசப் பைகளில்
எந்தக் காற்று
வீசிச் சிலிர்க்குமோ?
அல்லது
எந்தக் காற்றில்
உங்கள் சுவாசத்தின் வெதுவெதுப்பு
கனிந்து வருடுமோ?

அதைச் சொல்வீர் – 'என் ஊர்'

எனில்
நான் பாதம் பதித்தது
மலைப் பாம்பின் உடல்
வழுக்கலில்...
நான் சரீரம் நனைத்தது
இரத்தத்தின் கல்மழையில்...
நான் மூச்சுக் குழலில் சுமந்தது
பனிக்குளிரின் முட்களை...

'என் ஊர்' என்று எதைச் சொல்வேன்?

நாடோடியின் உள்ளங்காலில்
எந்த மண்ணும் ஒட்டுவதில்லை
பறவையின் சிறகுகளில்
எந்த நீரும் ஊடுருவுவதில்லை.

நான் நாடோடி
நான் பறவை



ஊரைத் துறந்ததால்
நாடோடியும் பறவையும் ஆனேனா?
நாடோடியும் பறவையும் ஆனதால்
ஊரைத் துறந்தேனா?

எதுவாயினும் பூங்குன்றா!
கச்சிதம் உன் கணிப்பு –
'யாதும் ஊரே; யாவரும் கேளிர்.'

"நீரிழிவு (டயபடிஸ்) நோய் வந்து, தமது ஒரு காலை இழந்தார் ஒரு பெரியவர். அஜாக்கிரதைதான் காரணம். அவரது மனைவிக்கும் டயபடிஸ் இருந்தது. அவளுக்கும் காலில் புண் வந்து, முற்றிப்போய், இரண்டே வருடங்களில் காலை இழக்க வேண்டி வந்தது!'' என்கிறார் டாக்டர் ஆர்.எஸ். ஹரிஹரன்.

"நீரிழிவு நோயினால் எப்படி சிறுநீரகம் பாதிக்கப்படுகிறதோ, கண்கள் பாதிக்கப்படுகின்றனவோ, அப்படியே கால்களும் பாதிக்கப்படுகின்றன. டயபடிஸ் வந்து காலில் புண் வந்தால், மருத்துவர் அறுவைச் சிகிச்சை நிபுணரிடம் போகச் சொல்லி விடுவார். அந்த அறுவைச் சிகிச்சையோ தொல்லையான ஒன்று. எனவே அறுவைச் சிகிச்சை நிபுணரும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. அதனால் அவதிப்படுவது நீரிழிவு நோயாளிதான்!" என்கிறார் டாக்டர் ஹரிஹரன். இவர் சென்னை தலைமை மருத்துவமனை நிபுணர்.

பாதங்கள் எப்படி ஆரம்பத்தில் பாதிக்கப்பட்டு, கடைசியில் காலையே இழக்க வேண்டிய நிலைக்கு நோயாளி தள்ளப்படுகிறார் என்பதை ஸ்லைடுகள் போட்டு டாக்டர் விளக்கிய போது நீரிழிவு நோயாளிகள் குறித்துச் சற்றுக் கவலை உண்டாயிற்று!

'பாதம்' (Prevention of Amputation in Diabetics, Health Awareness & Management) என்ற அமைப்பைத் துவக்கி, 'நீரிழிவு நோயில் கால் பராமரிப்பு' என்ற நூலை வெளியிட்ட டாக்டர் சிவகுமார் சொன்னார் :

''தமக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று தெரிந்ததுமே, கால் பாதுகாப்பு மிகவும் அவசியம் என்பதை இவர்கள் உணர வேண்டும். இன்னும் நீரிழிவு நோயாளிகள் இதயம் மற்றும் சிறுநீரகங்கள் பற்றியே அதிகம் கவலைப்படுகிறார்கள். கால்களின் பாதுகாப்புப் பற்றிக் கவலைப்படுவதில்லை. காலம் தாழ்த்தி மருத்துவ உதவியை நாடுவதற்கு இதுதான் காரணம்.

''உலகப் போர்களின் போது இழந்த கால்களை விடவும், சாலை விபத்துக்களில் கால்களை இழப்பதை விடவும் 'டயபடிஸ் ஃபுட்'டினால் காலை இழப்பவர்கள் எண்ணிக்கை அதிகம்.



# பொன்னான

''அதிலும் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகம். சுமார் 13 சதவிகிதம்!

''கால் இழப்பைத் தடுக்க, பல்வேறு முறைகள் உள்ளன. எளிய கால் பாதுகாப்பு முறையிலிருந்து, மிக நுண்ணிய ரத்த நாள சிகிச்சை வரை பல வழிமுறைகள் இருக்கின்றன. பாதங்களின்

# பாதம் புண்ணாகலாமா?

விரல் இடுக்குகளில் அழுக்கு மற்றும் நீர் சேராமல் நன்றாகத் துடைக்க வேண்டும். தினமும் கால்களைச் சுத்தமான நீரில் கழுவிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பாதத்தின் சருமம் உலர்ந்திருந்தால் வேஸலைன் அல்லது எண்ணெய் தடவி, வெடிப்பு எதுவும் இல்லாமல் வைத்துக் கொள்ள வேண்டும். விரல் நகங்களை அவ்வப்போது சுத்தரித்து விட வேண்டும். ஆனால் நகங்களை வெட்டுகையில் காயம் ஏற்படாமல் இருப்பது அவசியம். காலணிகள் போடாமல் நடக்கக் கூடாது. கால் வலி என்று சுடுநீரில் ஒத்தடம் கொடுக்கக் கூடாது. காலணிகள் தேய்ந்து சில இடங்களில் உருமாறி இருந்தால், இந்த நோயாளிகள் நடக்கும் விதமும் மாறுபடும். காலணிகளில் சிறு கற்கள் அல்லது ஆணிகள் போன்றவை இருந்தால், அவை அகற்றப்பட வேண்டும். பருத்தியிலான சாக்ஸ் (காலுறை) அணிய வேண்டும். காலில் ஆணி இருந்தால் பிளேடால் வெட்டி, சுய சிகிச்சை செய்து கொள்ளலாகாது. காலில் சிறிய புண் அல்லது சிறு மாற்றம் தென்பட்டால்,

• டாக்டர் சிவகுமார்



உடனே மருத்துவரிடம் போய் விட வேண்டும். ரசாயனக் கலவை உள்ள 'க்ரீம்'களைக் காலில் தடவ வேண்டாம். புகை பிடிக்காமல் இருப்பது நல்லது. கால்களுக்குச் சீரான இரத்த ஓட்டம் கிடைக்க, நடப்பதும், எளிய தேகப் பயிற்சி செய்வதும் நல்லது. கால்களுக்கு இதமாக இருக்கிறது என்பதற்காகக் கால்களைச் சுடு நீரிலோ குளிர்ந்த நீரிலோ வைத்திருப்பது கூடாது.

நெடுநேரம் உட்கார்ந்திருக்கும்போது, கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்காருவதைத் தவிர்க்க வேண்டும். காலில் உணர்ச்சியைக் கண்டறிய மெல்லிய நாலிழைகள் இருக்கின்றன. இவற்றின் உதவியுடன் நோயாளியே பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளலாம். காலில் ஏற்கெனவே புண் வந்து சிகிச்சை எடுத்துக் கொண்டவர்கள், கால் பாதுகாப்பில் இன்னும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். கால் பாதுகாப்புக்கு மிக அவசியமான ப்ளட் ஷுகரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிக அவசியம். கண் பார்வை மங்கிய, பருமனான நீரிழிவு நோயாளிகள், குனிந்து, தமது பாதங்களைப் பார்ப்பது கடினம். ஒரு கண்ணாடியிலோ, ஓர் இடத்தில் அமர்ந்தோ தமது கால்களைப் பார்த்துக் கொள்வது அவசியம்.

"சக நோயாளி, கால் புண் காரணமாகக் காலை இழந்தார் என்பதால் தாமும் இழந்து விடுவோமோ என்று அஞ்சத் தேவையில்லை. ஆனால் உடனடி மருத்துவ ஆலோசனை பெறுவது மிகவும் அவசியம். ஏழு வகைகளில் இவர்களைக் குணப்படுத்த வசதிகள் இருக்கின்றன. மருந்துகள் கொடுப்பது முதல் வகை. சிறிய அறுவைச் சிகிச்சை மூலம் புண்களில் உள்ள சீழ் அகற்றும் முறை. நோயினால் பாதிக்கப்பட்ட கால் விரல்களை அகற்றும் முறை. வேஸ்குலர் சர்ஜரி எனப்படும் இரத்த நாளங்களில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை. பாதம் வளைந்தும், மூட்டுகள் பழுதடைந்தும் இருக்கும் நிலையைச் சீராக்கும் முறை. விரல், நகம் ஆகியவற்றைச் சீர் செய்யும் மருத்துவரின் உதவி பெற்றுக் குணமாக்கும் முறை. கடைசியாகத்தான் ஆம்ப்யுடேஷன் எனப்படும் காலை அகற்றும் முறை" என்கிறார் டாக்டர் சிவகுமார்.

சந்திப்பு : **சாருகேசி**

*('நீரிழிவு நோயில் கால் பராமரிப்பு' – ஆசிரியர்: டாக்டர் ஜி. சிவகுமார். அல்லயன்ஸ், 244 ராமகிருஷ்ணா மடம் சாலை, சென்னை – 600 004.*

*படங்களுடன், விளக்கமாக எழுதப்பட்ட இந்நூலின் விலை ரூ. 35/-)*




### நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

## "நீ என் சகோதரி!"

நந்தினியும் வந்தியத்தேவனும் நின்ற இடத்தை அணுகி இளவரசரும் மணிமேகலையும் வந்து சேர்ந்தார்கள்.

அருகில் வரும்வரையில் இளவரசர் வந்தியத்தேவனை நோக்கிய வண்ணம் வந்தார். கிட்டே வந்ததும் நந்தினியை ஏறிட்டுப்பார்த்தார். அவளுடைய ஒரு கன்னத்திலும் ஒரு தோளிலும் சிவந்த கோடுகள் போன்ற காயங்களிலிருந்து இரத்தம் கசிவதைக் கண்டார்.

"ஐயோ! உங்களை அந்தப் பாழாய்ப் போன புலி காயப்படுத்தி விட்டதா, என்ன?" என்றார்.

"ஆம், ஐயா! ஆனால் அந்தப் புலி என் உடம்பைத்தான் காயப்படுத்தியது; நெஞ்சிலே காயம் உண்டாக்கவில்லை!" என்றாள் நந்தினி.

இந்த வார்த்தைகள் கரிகாலருடைய நெஞ்சிலே பாய்ந்தன. அவர் மேலே எதுவும் சொல்லுவதற்குள் மணிமேகலை நந்தினியின் அருகில் பதற்றத்துடன் சென்று, "ஆம், அக்கா! நன்றாய்க் கீறி விட்டிருக்கிறதே! நல்ல வேளையாக அஞ்சனம் கொண்டு வந்திருக்கிறேன். வாருங்கள், போட்டு விடுகிறேன்! உடனே போட்டால் காயம் சீக்கிரம் குணமாகி விடும்!" என்றாள்.

"தங்காய்! இந்த மாதிரி காயங்கள் எனக்குச் சர்வ சாதாரணம். எத்தனையோ காயங்கள் பட்டு ஆறி

**அமரர் கல்கி**

யிருக்கின்றன. நெஞ்சில் படும் காயத்தை ஆற்ற ஏதாவது அஞ்சனம் இருக்கிறதா சொல்!'' என்றாள்.

''ஓ! இருக்கிறது, அக்கா! அதுவும் இருக்கிறது!'' என்று மணிமேகலை சொல்லி விட்டு நந்தினியைக் கையைப்



பிடித்து அழைத்துக் கொண்டு பளிங்கு மண்டபத்துக்குச் சென்றாள்.

இளவரசரும் வந்தியத் தேவனும் சிறிது

பின்னால் சென்று மண்டபத்துக்கு அருகில் ஒரு விசாலமான மாமரத்தின் அடியில் அமைந்திருந்த சலவைக் கல் மேடையில் அமர்ந்தார்கள்.

''ஐயா! எவ்வளவு சீக்கிரம் இங்கிருந்து போகிறோமோ, அவ்வளவுக்கு நல்லது! அதிக நேரம் தங்கினால் கந்தமாறனும் அவன் தந்தையும் ஏதாவது தவறாக எண்ணிக்கொள்ளலாம்'' என்றான் வந்தியத்தேவன்.

''யார் வேணுமானாலும் தவறாக எண்ணிக்கொள்ளட்டும். நம் தலையை வாங்கி விடுவார்களா, என்ன? இந்தப் பெண்கள் நம்மைப் பற்றித் தவறாக எண்ணிக்கொள்ளாமலிருந்தால் போதும். அவர்கள் வந்ததும் சொல்லிக்கொண்டு புறப்படலாம்'' என்றார் இளவரசர்.

சற்று நேரத்துக்கெல்லாம் நந்தினியும் மணிமேகலையும் புதிய ஆடைகள் அணிந்து அலங்கரித்துக்கொண்டு வந்தார்கள். நந்தினியின் கன்னத்திலும் தோளிலும் இரத்தக் காயம் தெரியாதபடி அஞ்சனம் தடவியிருந்தது.

''உங்களிடம் விடை பெற்றுக்கொண்டு போவதற்காகக் காத்திருந்தோம்'' என்றார் கரிகாலர்.

''நன்றாயிருக்கிறது. உச்சிவேளைக்கு மேலாகிவிட்டது. எங்களுடன் இருந்து உணவருந்திவிட்டுத்தான் போக வேண்டும். இந்த நேரத்தில், உங்களைப் போக விட்டு விட்டால், சம்புவரையர் மகள் என்னை மன்னிக்கவே மாட்டாள்'' என்றாள் பழுவூர் ராணி.

''ஒரு நிபந்தனையின் பேரில் இருக்கிறோம். உங்களுடைய காயத்துக்கு அஞ்சனம் தடவியிருக்கிறாள் மணிமேகலை. நெஞ்சத்தின் காயத்துக்கும் ஏதோ அஞ்சனம் இருக்கிறது என்று சொன்னாள் அல்லவா? அது என்ன அஞ்சனம் என்பதைத் தெரிவித்தால் இருக்கிறோம்'' என்றார் கரிகாலர்.

''அவளைக் கேட்காமல் நாமே அதை ஊகித்துச் சொல்லப் பார்க்கலாமே?'' என்றாள் நந்தினி.

''ஒருவேளை காலப் போக்கினால் ஏற்படும் மறதியைச் சொல்லியிருக்கலாம்'' என்றார் கரிகாலர்.

''அதுவாக இருக்க முடியாது. காலப் போக்கினால் மாறாத நெஞ்சப் புண்ணும் உண்டு அல்லவா?'' என்றாள் நந்தினி.

''பெண்களின் விஷயத்தில் நெஞ்சப் புண்ணுக்கு ஒரு நல்ல அஞ்சனம் இருக்கிறது! அதுதான் கண்ணீர்!'' என்றான் வந்தியத்தேவன்.

''பெண்களைக் கேவலப்படுத்தச் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்று வல்லத்து இளவரசர் காத்திருக்கிறார். ஆனால் அவர் சொல்வதும் சரியல்ல. சில விதமான நெஞ்சுக் காயங்கள் ஏற்பட்டுவிட்டால் கண்ணீர் விடும் சக்தியே போய்விடுகிறது. பிறகு அது அஞ்சனமாக எவ்விதம் பயன்படக் கூடும்?'' என்றாள் நந்தினி.

''நாங்கள் இருவரும் சொன்னது சரியில்லையென்றால், நீங்கள் உங்கள் ஊகத்தைச் சொல்லுங்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

''அதற்கென்ன, சொல்லுகிறேன். தங்காய்! நீ குறிப்பிடும் அஞ்சனம் செவியின் மூலமாக நெஞ்சுக்குப் போவதல்லவா? யாழிலும், குழலிலும், இனிய குரலிலும் எழும் இன்னிசையைத் தானே நெஞ்சின் காயத்துக்கு அஞ்சனம் என்று சொல்கிறாய்?'' என்றாள் நந்தினி.

''ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?'' என்று மணிமேகலை கேட்டாள்.

''நான்தான் மந்திரக்காரி என்று சொல்லியிருக்கிறேனே? பிறர் மனத்தில் உள்ளதை அறியும் சக்தி எனக்கு உண்டு. ஐயா! நீங்கள் இருவரும் இன்னிசையின் அந்த அபூர்வ சக்தியை ஒப்புக்கொள்கிறீர்களா?'' என்று நந்தினி கேட்டாள்.

''ஆம், ஆம்! அதை ஊகிக்க முடியாமற் போனது எங்கள் தவறு என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். மணிமேகலை இசைக்கலையில் தேர்ந்தவள் என்றும் நன்றாக யாழ் வாசிப்பாள் என்றும் கந்தமாறன் கூறியதும் நினைவு



வருகிறது'' என்றார் கரிகாலர்.

''தமையன் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? தங்கையின் புகழை யாரிடமாவது சொல்லாத நாளெல்லாம் கடம்பூர் இளவரசருக்குப் பிறவாத நாள் போலிருக்கிறது. மணிமேகலையின் இசைத் திறனைப் பற்றி அவர் கூறியது உண்மைதான். மணிமேகலை யாழ்கூட எடுத்து வந்திருக்கிறாள். கான வித்தையின் மகிமை அறியாத என்னை மட்டும் வைத்துக்கொண்டு பாட வேண்டிய நிர்ப்பந்தம் நல்லவேளையாக அவளுக்கு இன்று இல்லை. ஐயா! பேதைப் பெண்களாகிய எங்களை இன்று புலிக்கு உணவாகாமல் காப்பாற்றினீர்கள். அதற்கு நன்றி நாங்கள் செலுத்த வேண்டாமா? எங்களுடன் உணவருந்தி விட்டு மணிமேகலையின் இசை அமுதையும் அருந்தி விட்டுத்தான் போக வேண்டும்'' என்று வற்புறுத்தினாள் நந்தினி.

வந்தியத்தேவன் அதற்கு இணங்க வேண்டாம் என்று இளவரசருக்குச் சமிக்ஞை செய்தான். அதை அவர் கவனிக்கவேயில்லை.



''இளவரசிகளின் சித்தம் எங்கள் பாக்கியம்'' என்றார் கரிகாலர்.

''மணிமேகலை! உன் மனோரதம் நிறைவேறிவிட்டது. சமையல் ஆகி விட்டதா என்று போய்ப் பார்! இல்லாவிடில், சற்று துரிதப்படுத்து'' என்று ஏவினாள் நந்தினி.

மணிமேகலை உடனே எழுந்து சமையல் நடந்த இடத்தை நோக்கிச் சென்றாள்.

அதே சமயத்தில் வந்தியத் தேவனும் எழுந்து நின்றுகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான்.

அதை நந்தினி கவனித்துவிட்டு, ''சற்று முன் பிறருடைய மனத்தில் உள்ளதை அறியும் மந்திர சக்தி எனக்கு உண்டு என்று சொன்னேன் அல்லவா! அதை இப்போது பரீட்சை பார்க்க விரும்புகிறேன். வல்லத்து இளவரசரின் மனத்தில் இப்போதுள்ள எண்ணத்தைச் சொல்லட்டுமா?'' என்று கேட்டாள்.

கரிகாலர் சிரித்துக்கொண்டே "சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றார்.

"அந்தப் புலியைக் கொன்று இந்தப் பெண்களைக் காப்பாற்றியது பெருந் தவறு என்று பச்சாத்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறார். இவர்கள் இருவரும் அந்தப் புலியின் வயிற்றுக்குள் போயிருந்தால் மிக்க நன்றாயிருக்கும் என்று எண்ணமிடுகிறார்."

கரிகாலர் மேலும் சிரித்துக் கொண்டே ''நண்பா! நீ அப்படி எண்ணமிடுகிறாயா?'' என்று கேட்டார்.

''இல்லை, ஐயா! அப்படி நான் எண்ணவில்லை. ஆனால் புலியைப் பற்றியும் இவர்களைப் பற்றியும் எண்ணியது உண்மைதான். இவர்களிடம் அகப்பட்டுக்கொண்ட புலி எப்படி உயிரோடு தப்பிப் பிழைத்தது என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறேன்!'' என்றான்.

''என்ன, தம்பி, உளறுகிறாய்? புலி தப்பிப் பிழைத்ததா? மறுபடியுமா? செத்த புலியின் உடல் தண்ணீரில் மிதந்ததே! அது எங்கே?'' என்று இளவரசரும் எழுந்து நின்று கேட்டார்.

''அதோ பாருங்கள்!'' என்று வந்தியத்தேவன் சுட்டிக்காட்டினான்.

அவர்கள் இருந்த இடத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் மரக்கிளைகளின் இடையில் தண்ணீர்க் கரை தெரிந்தது. அங்கே இளவரசிகள் வந்த படகு கட்டிப்போட்டிருந்தது. அந்தப் படகின் முனையை முன்னங் கால்களினால் பற்றிக்கொண்டு சிறுத்தை படகில் ஏற முயன்றுகொண்டிருந்தது.

''ஆகா! இந்தப் புலியின் உயிர் வெகு கெட்டி!'' என்றார் கரிகாலர்.

''ஐயா! வாருங்கள், போய் அதைக் கொன்று விட்டு வரலாம். காயம் பட்ட புலியை உயிரோடு விடுவது தவறு!'' என்றான் வல்லவரையன்.

''வாணர் குலத்து வீரரே! நீங்கள் இரண்டு வீரர்கள் ஒரு காயம் பட்ட புலிக்காக ஏன் சிரமப்பட வேண்டும்? மணிமேகலையைக் கூப்பிடுகிறேன். அவள் தன் கையில் உள்ள சிறிய கத்தியினால் புலியைக் கொன்றுவிட்டு வருவாள்!'' என்றாள் நந்தினி.

''பார்த்தாயா, நண்பா! பழுவூர் ராணி நமது வீரதீரத்தைக் குறித்து அவ்வளவு பெருமதிப்பு வைத்திருக்கிறார். நானும் வர வேண்டுமா? நீ மட்டும் போய் வருகிறாயா?'' என்றார் கரிகாலர்.

''அல்லது மணிமேகலையை அனுப்பலாமா?'' என்றாள் நந்தினி.

''மணிமேகலையை அனுப்பலாம். ஆனால் அந்தப் பெண் ஒருவேளை காயம்பட்ட புலிக்கும் அஞ்சனம் தடவிப். பிழைக்க வைத்துக்கொண்டு வந்துவிட்டால் என்ன செய்கிறது?'' என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான்.

''என்ன யோசிக்கிறாய்?'' என்றார் இளவரசர்.

''காயம்பட்ட புலியின் தலையை

வெட்டிக்கொண்டு வந்து பழுவூர் அரசியின் காலடியில் சமர்ப்பிக்கலாமா என்று யோசிக்கிறேன். அப்போதாவது அவர் திருப்தியடைகிறாரா, பார்க்கலாம்'' என்று சொல்லிவிட்டு வந்தியத்தேவன் விடு விடு என்று நடந்தான்.

''அந்த மூடன் சொன்னதைக் கேட்டீர்களா? காயம்பட்ட புலியின் தலையை வெட்ட ரொம்ப வீரம் வேண்டுமா?'' என்று கரிகாலர் கேட்டுக்கொண்டே சிரிக்கத் தொடங்கியவர், நந்தினியின் முகத்தைப் பார்த்துவிட்டுப் பாதியில் சிரிப்பை நிறுத்தினார்.

"அதைப் பற்றித் தாங்கள் அல்லவோ அபிப்பிராயம் சொல்ல வேண்டும்?'' என்றாள் நந்தினி.

கரிகாலரின் தேகமெல்லாம் சிலிர்த்தது.

தழுதழுத்த குரலில், ''நந்தினி! கந்தமாறனிடம் நீ ஓலை கொடுத்து அனுப்பினாய். அதனாலேதான் நான் இவ்விடம் வந்தேன். இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேன்'' என்றார்.

"என் வேண்டுகோளுக்கு இத்தனை காலங் கழித்தாவது மதிப்புக் கொடுத்தீர்களே! மிக்க வந்தனம்!'' என்றாள் நந்தினி.

''சென்று போனதையெல்லாம் நீ மறந்துவிட்டாய் என்று நினைத்தேன். அதனாலேதான் ஓலை அனுப்பினாய் என்று கருதினேன்...''

"சென்றதையெல்லாம் மறக்க முடியுமா, ஐயா! நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா...?''

''மறக்க முடியாதுதான். என்னாலும் மறக்க முடியவில்லை! நீ கண்ணும் கண்ணீருமாக நின்று என்னிடம் ஒரு வரம் கேட்டாய். அதை நான் கொடுக்கவில்லை. அந்தச் சமயம் ஏதோ வெறி கொண்டிருந்தேன். அதையெல்லாம் நான் இன்னமும் மறக்கவில்லைதான். ஆனால் எதற்காக ஓலை கொடுத்து அனுப்பினாய்? எதற்காக என்னை இவ்விடம் வரச்சொன்னாய்?'' என்று கேட்டார் இளவரசர்.

''ஐயா! தஞ்சாவூருக்குத் தாங்கள் மூன்று ஆண்டுகளாக வரவில்லை. நோய்ப்பட்டிருக்கும் தங்கள் தந்தையைப் பார்க்கவும் வரவில்லை...''

''அவர் எனக்கு மட்டும் தந்தை அல்ல, நந்தினி...!''

''ஆம், இளையபிராட்டிக்கும் தந்தைதான்! பொன்னியின் செல்வருக்கும் தந்தைதான்! ஆயினும் தங்களைப் பார்க்காததுதான் தங்கள் தந்தைக்குப் பெருங்குறையாக இருக்கிறது. தாங்கள் வராமைக்குக் காரணம் நான் என்று சக்கரவர்த்தியிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். அதனால் அவர் என்னைப் பார்ப்பதே கிடையாது. ஐயா! எனக்கு ஏற்கெனவே தாங்கள் செய்த தீங்கெல்லாம் போதாதா? இந்தப் பழி வேறு எனக்கு ஏற்பட வேண்டுமா...?''

''ஆனால் அது உண்மைதானே? உன் காரணமாகத்தான் தஞ்சைக்கு நான் வரவில்லை...''

''அப்படியானால், நான் தஞ்சையை விட்டுப் போய்விடுகிறேன். தாங்கள் தஞ்சைக்கு வந்து, தங்கள் தந்தையின் சிம்மாசனத்தில் அமர்ந்து மணிமகுடம் சூட்டிக்கொண்டு...''

''நந்தினி! அது ஒரு நாளும் நடவாத காரியம். எனக்குச் சிம்மாசனத்தில் இப்போது ஆசை இல்லை. மதுராந்தகத் தேவன் சிங்காதனத்தில் அமர்ந்து சாம்ராஜ்யத்தின் மணிமகுடத்தைச் சூட்டிக்கொண்டு இராஜ்யம் ஆளட்டும்...''

''ஐயா! மதுராந்தகரைத் தங்களுக்கு நன்றாகத் தெரியும். அவரால் இந்தப் பெரிய சாம்ராஜ்யத்தை ஒரு நாளேனும் ஆள முடியுமா?''

''அவனால் ஆள முடியாவிட்டால், அவனுக்கு உதவி செய்யப் பழுவேட்டரையர்கள் இருக்கிறார்கள். நீயும் இருக்கிறாய்...''

''ஐயா! தங்கள் விருப்பம் இப்போது நன்றாய் எனக்குத் தெரிகிறது. நான் தஞ்சையிலிருந்து, பழுவூர் அரண்மனையிலிருந்து, போய் விடுகிறேன்...

தாங்கள் தஞ்சைக்கு வந்து...''

''இல்லை, இல்லை! நீ தவறாக எண்ணுகிறாய். எனக்கு அந்த எண்ணமே கிடையாது. உனக்கு நான் முன்னம் செய்த குற்றமெல்லாம் போதும். பழுவூர் அரண்மனையிலிருந்து உன்னைத் துரத்திய பாதகத்தையும் நான் சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டாம்...''

''ஐயா! நாம் இருவரும் தஞ்சையில் இருக்க முடியாதா? அந்தப் பெரிய நகரில் நாம் இரண்டு பேரும் இருக்க இடம் இல்லையா? ஒருவரையொருவர் பார்க்க வேண்டிய அவசியங்கூட இல்லையே?''

''பார்க்க வேண்டிய அவசியமில்லாமலிருக்கலாம். ஆனால் மனத்தில் நினைக்காமல் இருக்க முடியுமா? சற்று முன் நீதான் சொன்னாய்! சென்று போனதையெல்லாம் மறக்க முடியாது என்று. உன் நெஞ்சத்திலுள்ள காயத்தைப் பற்றியும் சொன்னாய். என் நெஞ்சத்திலும் காயம் பட்டிருக்கிறது. என்னாலும் மறக்க முடியவில்லை.''

''மறக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் மன்னிக்க முடியாதா? நான் செய்த குற்றங்களை இத்தனை காலங் கழித்த பிறகும் மன்னிக்க முடியாதா?''

''நந்தினி! நான் மன்னிக்கும்படியாக நீ ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றம் செய்தவன் நான். உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியவன் நான். காஞ்சியிலிருந்து புறப்பட்ட போதுகூட உன்னிடம் மன்னிப்புக் கேட்டுப் பெறலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன். ஆனால் வழியில் நான் அறிந்த ஒரு செய்தி உன்னிடம் மன்னிப்புக் கேட்கவே என்னைத் தகுதியற்றவன் ஆக்கி விட்டது.''

''கோமகனே! தாங்கள் என்னிடம் மன்னிப்புக் கேட்பது எந்த வகையிலும் தகுதியற்றதுதான். தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். நான் பெற்ற தாய் தந்தையரால் கைவிடப்பட்ட அனாதைப் பெண்...''

''இல்லை, நந்தினி நீ அநாதைப் பெண் அல்ல!''

''தனாதிகாரி பழுவேட்டரையர் என்னை மனமுவந்து தம் இளைய ராணியாக அங்கீகரித்தார். ஆனாலும்...''





''அது மட்டுமல்ல, நந்தினி! எப்படி உன்னிடம் உண்மையைச் சொல்வது என்று தயங்குகிறேன்...''

''இந்தப் பேதைப் பெண்ணிடம் தாங்கள் எதை வேணுமானாலும் தயங்காமல் சொல்லலாம். வழியோடு போகிறவர்கள் எல்லோரும் என்னிடம் ஏதேதோ சொல்லத் துணிகிறார்கள். என்னை வம்புக்கு இழுத்து அவமதிக்கிறார்கள்...''

''நந்தினி! இனி அவ்விதம் யாரேனும் நடந்துகொண்டால் என்னால் ஒரு கணமும் பொறுக்க முடியாது. நீ சொல்ல வேண்டியதுதான். அவனை உடனே யமனுலகுக்கு அனுப்பி விட்டு மறுகாரியம் பார்ப்பேன்...''

''எப்போதும் என்னிடம் தாங்கள் அத்தகைய கருணை காட்டி வந்திருக்கிறீர்கள். பழையாறை இளையபிராட்டியோடுகூட எனக்காகச் சிறுபிராயத்தில் சண்டை பிடித்திருக்கிறீர்கள். அவர் தங்கள் சகோதரி...''

''நந்தினி! நீயும் என்



சகோதரிதான்! இளையபிராட்டியைப் போல நீயும் என் சகோதரி; நான் உன் சகோதரன்!''

''கோமகனே! நான் இன்னொருவரை மணந்ததிலிருந்து என்னைத் தங்கள் சகோதரியாகப் பாவிக்கிறீர்கள். அது தங்கள் குலத்தின் பெருமைக்கு உகந்ததுதான். ஆனால் சக்கரவர்த்தியின் திருக்குமாரரை, மூவுலகும் ஆளப் பிறந்தவரை, நான் எவ்வாறு என் சகோதரராகக் கருத முடியும்...?''

''நான் சொல்வதை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, நந்தினி! உண்மையாகவே நீ என் சகோதரி; மூவுலகும் ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரி...!''

இதைக் கேட்ட நந்தினி கலகலவென்று சிரித்தாள்.

''தங்களுடைய சித்தம் குழம்பியிருக்கிறதா, எனக்குத்தான் பைத்தியம் பிடித்திருக்கிறதா, தெரியவில்லை!'' என்று கூறினாள்.

''சித்தப் பிரமையும் இல்லை; பைத்தியமும் இல்லை.''

''அப்படியானால், இந்தப் பேதையைப் பரிகாசம் செய்கிறீர்களா?''

''என்னைப் பார்த்துச் சொல், நந்தினி! உண்மையாகவே உன்னைப் பரிகசிப்பவனாகத் தோன்றுகிறதா?''

''ஐயா! தாங்கள் என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்! என்னைப் பார்த்தால், சக்கரவர்த்தியின் திருக்குமாரி என்று தோன்றுகிறதா? இராஜ குலத்தின் இலட்சணம் என் முகத்திலே விளங்குகிறதா?''

''நந்தினி! நீ ஐந்து வயதுப் பெண்ணாக இருந்தது முதல் உன் முகத்தைப் பார்த்திருக்கிறேன். உன் முகத்தில் ஜொலித்த இணையில்லாத சௌந்தரியத்தைக் கண்டு வியந்திருக்கிறேன். அதற்குக் காரணம் மட்டும் இப்போதுதான் தெரிந்தது. காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு நடுவழியிலேதான் தெரிந்தது. சோழ குலத்தில் வாழ்க்கைப்பட்டவர்களிலே வைதும்பராஜன் மகள் கலியாணிக்கு இணையான அழகுடையவர் யாரும் இல்லை என்பது உலகப் பிரசித்தம். அவர் என் பாட்டி. இன்னமும் பழையாறையில் உயிரோடு இருந்து வருகிறார். எழுபது வயது ஆன பிறகும் அவர் முகத்தில் விளங்கும் தெய்வீகமான அழகு கண்களைச் கூசச் செய்யும். அவருடைய அழகெல்லாம் இப்போது உன்னிடந்தான் தஞ்சம் புகுந்திருக்கிறது. அது என்னிடம் இல்லை; இளையபிராட்டியிடம் இல்லை; அருள்மொழியிடமும் இல்லை. என் தந்தையின் மூலமாக உன்னிடத்தேதான் வந்திருக்கிறது...''

''ஐயா! இது என்ன சொல்கிறீர்கள்? உண்மையிலேயே எனக்குச் சித்தக் கோளாறுதான் போலிருக்கிறது. அல்லது என் காதுகளில் ஏதேனும் கோளாறு இருக்க வேண்டும்...''

''இல்லை, நந்தினி, இல்லை! சித்தக் கோளாறும் இல்லை; உன் காதிலே கோளாறும் இல்லை. நீ என் தந்தையின் மகள்; ஆகையால் என் சகோதரி! சக்கரவர்த்தி என் அன்னையை மணப்பதற்கு முன்னால் ஈழ நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிலே ஒரு மாதரசியைக் காதலித்துக் காந்தர்வ மணம் புரிந்துகொண்டார். அவளுடைய புதல்வி நீ; ஆகையால் என் சகோதரி!'' என்று கரிகாலர் ஆதுரம் ததும்பிய குரலிலே கூறினார்.

நந்தினி பெருந் திகைப்பு அடைந்தவள் போலச் சிறிது நேரம் ஆதித்த கரிகாலரைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவளுடைய முகத்தில் சிறிது தெளிவு தோன்றியது.

''ஐயா! இந்தச் செய்தியைத் தானா தாங்கள் காஞ்சியிலிருந்து புறப்பட்ட பிறகு அறிந்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆம், நந்தினி! அதை அறிந்ததும் ஏற்கெனவே விளங்காமலிருந்த பல விஷயங்கள் எனக்கு விளங்கின.''

''கோமகனே! தங்களுக்கு இந்தச்

செய்தியை வழியிலே சொன்னவர் யார்? வல்லத்து இளவரசரா?''

''அவன்தான்! ஆனால் அவனாகச் சொல்லவில்லை. இளையபிராட்டி குந்தவை அவனிடம் சொல்லி அனுப்பினாள்!''

''ஆகா! தங்களையும் என்னையும் பிரித்து வைப்பதற்கு ஆதிநாளிலிருந்து எத்தனையோ சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். இன்னமும் அவர்களுடைய சூழ்ச்சிகள் முடிந்தபாடில்லை...''

''நீ நினைப்பது தவறு, நந்தினி! இதில் சூழ்ச்சி ஒன்றுமில்லை. சிறு பிராயத்தில் உன்னையும் என்னையும் பிரித்து வைப்பதற்குப் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி செய்த முயற்சிகள் எனக்குப் புரியாமலிருந்தன. அதற்காக அளவில்லாத கோபம் அடைந்தேன். அவர் எவ்வளவு பயங்கரமான விபத்திலிருந்து நம்மைத் தடுத்துக் காப்பாற்றினார் என்று இப்போதுதான் தெரிகிறது. ஆனால் உண்மையை அவர்கள் அப்போதே சொல்லியிருக்கலாம். சொல்லாத காரணத்தினால் உனக்குப் பெரும் அநீதி செய்தார்கள். எனக்கும் தீங்கு செய்து விட்டார்கள். போனது போகட்டும். சென்றதையெல்லாம் நாம் இருவரும் மறந்து விடுவோம்; மறக்க முடியாவிட்டாலும் மன்னித்து விடுவோம்...''

''ஐயா! வல்லத்து இளவரசர் வழியில் தங்களைச் சந்தித்து இந்தக் கதையை மட்டுந்தான் சொன்னாரா? இன்னும் ஏதாவது சொன்னாரா?'' என்று நந்தினி கேட்டாள்.

''கதை என்று ஏன் கூறுகிறாய், நந்தினி! உனக்கு நம்பிக்கை இல்லையா?'' என்றார் ஆதித்த கரிகாலர்.

''தாங்கள் கூறிய செய்தி அவ்வளவு எளிதாக நம்பக் கூடியதா? சக்கரவர்த்தியின் குமாரியாகப் பிறந்து நான் இந்தக் கதியை அடைந்திருக்க முடியுமா? இவ்வளவு கொடுமையான துன்பங்களுக்கு உள்ளாகியிருக்க முடியுமா? வந்தியத்தேவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். இது மட்டுந்தான் அவர் சொன்னாரா? வேறு ஒன்றும் சொல்லவில்லையா?'' என்றாள் நந்தினி.

கரிகாலர் சிறிது தயங்கிவிட்டு, ''ஆம்; இன்னொரு செய்தியும் சொன்னான். நீ பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்திருப்பதாகச் சொன்னான். சோழர் குலத்தையே கருவறுத்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னான். அதற்காக, பிடியில் மீன் சின்னம் உள்ள கொலைவாள் ஒன்றை நீ வைத்துப் பூஜித்து வருவதாகவும் சொன்னான். கொள்ளிடக் கரைக் காட்டில் பள்ளிப்படையின் அருகில் யாரோ ஒரு சிறுவனை வைத்து மணிமகுடம் சூட்டியதாகவும் கூறினான். நந்தினி! அதையெல்லாம் நீ இனி மறந்து விடு! சோழர் குலத்தின் பெருமைக்கெல்லாம் என்னைப் போல் உரிமையுள்ளவள் நீ. சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. எங்கள் அருமைச் சகோதரி. உனக்கு இதுவரை செய்த அநீதிகளுக்கெல்லாம் பரிகாரம் செய்வதே எனது முதற் கடமையாக இனி வைத்துக் கொள்வேன்...''

''ஐயா! இவ்வளவையும் தாங்கள் நம்புகிறீர்கள் அல்லவா? அப்படியிருக்கும்போது, கடம்பூருக்கு வந்து இத்தனை நாள் வரையில் காத்திருந்ததேன்? முன்னாடியே என்னைச் சந்தித்துப் பேச ஒரு முயற்சியும் செய்யாதது ஏன்?''

''என் மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பந்தான் காரணம். நம்முடைய புதிய உறவை என் மனத்தில் நிலைப்படுத்திக் கொள்ள அவகாசமும் வேண்டியிருந்தது. எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லத்தக்க சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பலர் முன்னிலையில் சொல்லக் கூடிய செய்தியா இது? அதிர்ஷ்டவசமாக, ஒரு காட்டுப் பன்றியும் ஒரு சிறுத்தைப் புலியும் இன்றைக்கு அத்தகைய சந்தர்ப்பத்தை

எனக்கு ஏற்படுத்திக்கொடுத்தன..."

நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! காட்டு மிருகங்கள் பொல்லாதவைதான்! ஆனால் மனிதர்களைப் போல் அவ்வளவு கொடுமை செய்யக் கூடியவை அல்ல. அது இன்றைக்குத் தான் எனக்கு நன்று தெரிந்தது'' என்றாள்.

"சகோதரி! சென்று போனதையெல்லாம் மறக்க முடியாது என்று சற்று முன்னால் நீ சொன்னாய். அதை நானும் ஒப்புக்கொண்டேன். மறக்க முடியாவிட்டாலும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதற்கு நீ மறுமொழி சொல்லவில்லை."

''கோமகனே! தாங்கள் இதற்கு முன்னால் எனக்குச் செய்த துரோகங்கள், குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்து விடுவேன்; ஒருவேளை மறந்தும் விடுவேன். ஆனால் இன்றைக்குச் செய்த துரோகத்தை என்றைக்கும் மறக்கவும் முடியாது; மன்னிக்கவும் முடியாது..."

"ஐயோ! இன்றைக்கு நான் என்ன செய்தேன்? நான் அறிந்து ஒரு துரோகமும் உனக்குச் செய்யவில்லயே?"

''சொல்லுகிறேன். அதோ வருகிறானே, அந்த தூர்த்தனைப் பாருங்கள்!"

"வல்லவரையனையா சொல்கிறாய்?"

''ஆமாம்; புலியின் தலையைக் கொண்டு வராமல் வெறுங்கையுடனே வருகிறானே, அவன்தான்! ஒருநாள் அவன் தஞ்சையில் என்னைப் பார்த்தான். என்னுடைய பாதம் அவன் பேரில் பட்டால் அதை 'ஒரு பாக்கியமாகக் கருதுவேன்' என்று சொன்னான். அவனை என் காலால் தொட்டு உதைக்கவும் நான் இஷ்டப்படவில்லை. வேலைக்காரர்களை அழைப்பதாகச் சொன்ன பிறகு ஓடி விட்டான். அவனுடைய நீசத்தனமான எண்ணத்துக்கு நான் இணங்காததற்காகத் தங்களிடம் இத்தகைய பயங்கரமான கற்பனைகளைப் புனைந்து சொல்லியிருக்கிறான். நான் விரும்பினால் தங்களுடைய தலையையே கொண்டு வந்து விடுவதாக உறுதி கூறினான். இதையெல்லாம் தங்களிடம் நான் சொல்லி விடப் போகிறேனே என்று அவனுக்குப் பயம். அதற்காகவே தாங்கள் கடம்பூர் மாளிகைக்கு வராமல் வழியிலே தடுத்து விடப் பார்த்தான். அதனாலேயே தங்களுடன் இணை பிரியாமல் சுற்றி வந்துகொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட நீசன், என் காலினால் தொடுவதற்குக்கூட நான் விரும்பாதவன், அவன் என் உடம்பு முழுவதையும் அணைத்துத் தூக்கிக் கரையேற்றும்படி செய்தீர்கள். அதைப் பார்த்துக் கொண்டுமிருந்தீர்கள். இதை நான் மறக்க முடியுமா? அல்லது மன்னிக்கத்தான் முடியுமா?"

இவ்விதம் நந்தினி கண்களில் கோபக்கனல் பொங்கக் கூறி வந்த பயங்கரமான மொழிகளைக் கேட்டுக் கரிகாலருடைய தலை உண்மையிலேயே சுழலத்தொடங்கியது. பளிங்கு மண்டபம், ஏரியின் நீர், காட்டு மரங்கள் எல்லாம் சுழன்றன. சற்று நிதானித்துக் கொண்டு ''சகோதரி! நந்தினி! நீ சொல்வது உண்மையாக இருக்க முடியுமா? எதை நம்புவதென்று எனக்கு மெய்யாகவே தெரியவில்லை. வந்தியத்தேவன் அவ்வளவு நீசனாக இருக்கக் கூடுமா? அவனுக்கு இந்தப் பேதைப் பெண் மணிமேகலையைத் திருமணம் செய்விப்பது என்று சற்று நேரத்துக்கு முன்னால் கூட எண்ணினேனே?'' என்றார்.

"ஐயா! நான் சொல்வதை மட்டும் நீங்கள் நம்பிவிட வேண்டாம். எப்போதுமே அவசரப்பட்டுத் தாங்கள் காரியம் செய்து விடுவீர்கள். இந்தத் தடவை அப்படிச் செய்ய வேண்டாம். இரண்டு நாள் பொறுத்திருந்து இவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வாருங்கள். தாங்களே தெரிந்து கொள்வீர்கள்!'' என்றாள் நந்தினி.

(தொடரும்)



# ஸ்டார் உபன்யாசகர்!

ஹ்ரித்திக் ரோஷன், அஜீத், விஜய் போன்ற சினி ஸ்டார்களுக்கும் உபந்யாசகர் திருச்சி கல்யாண ராமனுக்கும் என்ன ஒற்றுமை? 'இங்கே ஆட்டோகிராஃப் போடுங்கள்' என்று வெறும் கையை நீட்டும் 'ஃபானினிகள்' அவர்களைப் போலவே இவருக்கும் உண்டாம்!

''பிராரப்தம்... ஒரு பேப்பரையும் பேனாவையும் சூடும் மான்னேன்'' என்று, மேட்டர்-ஆஃப்-ஃபாக்டாய்ப் பேசும் கல்யாணராமன்தான், விஜய், ஜெயா டீவிக்கள் வாயிலாக, கடல் கடந்தும் பிராபல்யம் அடைந்திருக்கும் உபந்யாசகர்!

அண்மையில் ராமநவமி உற்சவத்திற்கென, 'கம்ப ராமாயணம்' உபந்யாசம் செய்ய மும்பை வந்து, தூள் கிளப்பினார்.

குரல்வளம், தமிழறிவு, கம்பனுடன் வில்லிபுத்தூரார், பெரியவாச்சான் பிள்ளை, சுவாமி தேசிகன், நம்மாழ்வார், ஆண்டாள், தியாகப்பிரும்மம், அன்னமாச்சார்யார், திருவள்ளுவர், பாரதியார், கண்ணதாசன் என்று எல்லோரையும் கைகோக்க வைக்கும் லாகவம், அதிரடி ஜோக்ஸ், உபன்யாசத்தையே நாடகமயமாக்குதல் போன்றவை இவர் உபன்யாசங்கள் 'ஹவுஸ்ஃபுல்' ஆகப் பெரிதும் கைகொடுக்கின்றன.

''நான் ரொம்ப போல்டாப் பேசறவன்'' என்பவர், இந்த தைரியத்துக்குக் காரணம் தன் 'அம்மா' என்கிறார். இவரது தந்தை மரித்தபோது அழுது புரளாமல், 'வாழ்க்கையே ரயில் பயணம் மாதிரி; அவரோட ஸ்டேஷன் வந்துடுத்து. இறங்கிட்டார்' என்று மற்றவர்களைத் தேற்றிவிட்டு, அடுத்த மாதமே தன் பெண்ணின் திருமணத்தையும் நடத்திக் காட்டியிருக்கிறார், இந்த போல்டு அம்மா!

கிரிக்கெட்டும் சினிமாவும் மக்களின் இரு கண்கள் என்பதை உணர்ந்து, அந்தக் கண்ணோட்டத்திலேயே இதிகாச புராணங்களை ஒரு பார்வை பார்ப்பதால், இவரது உபன்யாசங்களில் பெரிசுகளுடன் இளசுகளையும் காண முடிகிறது!

உதாரணமாக, வாமனாவதாரச் சிறப்பை விளக்குகையில், இந்த அவதாரத்தில் மட்டுமே, நெடிதுயர்ந்த திருவிக்கிரமனாகவும், குறுகிய வாமனனாகவும் ஒரே சமயத்தில் காட்சி அளித்தான் திருமால் என்பதற்கு, கிரிக்கெட்டில் காட்ச் பிடிப்பவர் ஒருவராகவும் பௌலர் வேறொருவராகவும் இருப்பது சகஜமென்றாலும், அபூர்வமாக, 'caught & bowled' ஒருவராகவே அமைவது போலிருக்கிறதென்கிறார்!

பி.எஸ்ஸி., கணிதம் பயின்று விட்டு, 20வது வயதிலிருந்தே பக்தியைப் பரப்பும் நோக்குடன், உபன்யாசத்தில் இறங்கி விட்டார். இவரது இளவயதைக் கண்டு முதலில் தயங்கிய நிகழ்ச்சி அமைப்பாளர்களெல்லாம், இவருக்குக் கிடைத்த 'கலெக்ஷனை'க் கண்டு மயங்கியே விட்டார்களாம்.

தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் இந்தத் தொழிலுக்கு ஏகமாக மவுசு குறைந்த போதிலும், திசை மாறாமல், ரங்கநாதர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்ததால் இன்று இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், லண்டன் என்று கோபால் பல்பொடி போலப் பறந்து கொண்டிருக்கிறார்.

'ராமாயணம் மகாபாரதத்தை, வைகுண்டம் போவதற்கான பழம் பெருச்சாளிக் கதை என ஒதுக்கி விடாதீர்கள். மதத்தின் அடிப்படையில், மனிதன் வாழ்வாங்கு வாழ்வதெப்படி என உணர்த்துபவை அவை.

மேலும், நம் இதிகாச புராணங்களில் இல்லாத வையே இல்லை; எயிட்ஸ் நோய் கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; விசித்ர வீரியன் இறந்தது, எய்ட்ஸ் நோயால் தான்! முதன்முதலாக பலாத்காரம் (ரேப்) செய்தவன் யார் தெரியுமா...? சூரியன்தான்! நம் புராணங்கள் உணர்த்தும் நீதியே, விட்டுக் கொடுத்து வாழத் தெரிந்தவனுக்குத்தான் இந்த சமூகம்; அது தெரியாதவனுக்கு இங்கே இடமில்லை' என்பது தான்'' என்கிறார் ஆணித்தரமாக!

— ஜெயஸ்ரீ ராஜ்



**சு**கந்தி அரவிந்தனுக்கு எழுதிய கடிதம் கீழ்க்கண்ட செய்திகளைப் பிரதானமாக உள்ளடக்கியிருந்தது. 'அன்புள்ள அண்ணா... எனக்கு மார்ச் 7-ல் பிரசவ டைம் என டாக்டர் மலர்ச்செல்வி சொல்லியிருக்கிறார்கள். ஒருநாள் முன்னமே ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடலாம் என அப்பா கூறிவிட்டார். நீ கோயம்புத்தூரிலிருந்து நேராக ஆஸ்பத்திரிக்கு வந்து விடு. சபீதா மருத்துவமனைதான் - உனக்கே தெரியும். அப்புறம் நினைத்துப் பார்க்கிறேன். இதுவரையிலான வாழ்வில் அம்மாவுக்கு நல்லபிள்ளையாகத்தான் நடந்திருக்கிறேன். இன்னும் நன்றாய் நடந்திருக்க வேண்டுமென இப்போது தோன்றுகிறது. நல்லதரத்தில் பால்புட்டி ஒன்று வாங்கி வா. கண்ணாடிக் கவரில் நிப்பிள் வைத்ததாக அது இருக்கட்டும். நீ குழந்தையாய் இருக்கும்போது விரும்பியிருந்த பொம்மைகள் ஏதும் உனக்கு நினைவிருந்தால் அவற்றையும் வாங்கி வரலாம். ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகள் எதுவானாலும் இன்னும் பொம்மைகள் பொதுவில்தான் இருக்கின்றன. நாம் எதிர்பார்த்திராத பொருட்களைக்கூட பொம்மையாய் குழந்தைகள் உணர்ந்து விடுகின்றன. பிரசவ வலி பற்றிதான் தோழிகள் பயமுறுத்திய வண்ணம் இருக்கிறார்கள். நீ ஆஸ்பத்திரியில் அருகில் இருந்தால் தெம்பாக இருக்கும். உன் தங்கை சுகந்தி.'

- இதில் உன் தங்கை சுகந்தி என்பதை இரண்டு வரிகளாய்ப் பிரித்தெழுதாமல் ஒரே வரியாய் எழுதியிருந்தாள். எப்போதும் அப்படித்தான்.

கடிதத்தைப் படித்து முடித்ததும் அரவிந்தனுக்கு அம்மாவின் நினைவே வந்தது. அம்மா இன்னும் ஒருமுறை அம்மா ஆகப் போகிறாள். பேரன் பேத்திகளை எடுக்கிறபோது அம்மாக்கள் தங்கள் 'சிசு' குழைகள் மூலமாக மறுமுறை அம்மா ஆகிறார்கள். பால்புகட்டி, கழிப்பித்து, களிப்பித்து, குளிப்பித்து... பாத்திரம் தேய்க்கிற அதே கையால் குழந்தைகளையும் குளிப்பிக்கிறார்கள். அழுத்தம் மட்டும் வேறு அளவில் இருக்கும். அழுத்தங்கள் மாறுதலாய் இருக்கத் துலங்கச் செய்வதே பெண்களின் கடன் போலும் - காரியம் எது வாயினும்.

அரவிந்தன் மார்ச ஏழில் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்டு தாராபுரம் வந்து சேர்ந்தான். பேருந்து நிலையத்திலிருந்து ஆட்டோ பிடித்து எட்டாம் நிமிடம்



# வான்சிறப்பு

க.சீ. சிவகுமார்

ஆஸ்பத்திரி முகப்பில் இருந்தான். வரவேற்பு மேஜையை நோக்கி நடந்தான். அவன் எதிர்பார்த்திருந்த அழுகிய ஆப்பிள் நெடியை அந்த மருத்துவமனை கொண்டிருக்கவில்லை. அது குறித்த மெலிதான திளைப்பில் அவன் இருந்தபோது எதிர் கடந்து ஒரு பெண் போனாள். 'நான் பிறப்பெடுத்தது இதோ இந்த அழகிய குழந்தையைப் பெற்றெடுக்கத்தான்' என்பது போன்ற தொனியில் அவளும் தோள் இருந்த குழந்தையும் இருந்தனர். வரவேற்பு மேஜையை அடைந்த அரவிந்தன்,

''மேடம்... இங்க சுகந்தின்னு...'' அவனது வாயிலிருந்து 'ஸிஸ்டர்'-ஐ எதிர்பார்த்திருந்த ஸிஸ்டர் சற்றே சுதாரித்து,

''ரூம் நெம்பர் நாப்பது. பர்ஸ்ட் ப்ளோர்'' என்றாள்.

ஆஸ்பத்திரி தரைதளம் முதல் மாடித்தளம் வரை எங்கும் மொஸைக் டைல்கள் போடப்பட்டிருந்தன. வெளியில் ஒரு காலணிக் காவலாளி செருப்பை வாங்கிக் கொண்டு டோக்கன் கொடுத்து விட்டிருந்தார்.

மொஸைத் தரை ஈரம் உணர்த்துகிறது. வானம் மேகக் குளிர் மூட்டமாக இருக்கிறபடியால் தரை மேலதிகக் குளிர்ச்சியுடன் இருந்தது. குழந்தைகளை ஏந்திய பெண்கள் எதிரிட்டும் கடந்தும் சென்று கொண்டிருந்தார்கள்.

டாக்டர் மலர்செல்வி குழந்தைகள் நல மருத்துவராகப் புகழ் அடைந்திருந்தார். அவர் உதவியில் பிறப்பித்த குழந்தைகளுக்கென 'ஏந்து துவாலையை' மருத்துவமனையிலேயே வழங்குகிறார்கள். (ரூ.150). அது உத்தேசமாக கிரிக்கெட் வீரரின் கால்காப்பு போல இருக்கிறது. குறிப்பாக விக்கெட் கீப்பரின் கால்காப்பு. மட்டையாளரின் கால்காப்பில் வேகத்தடை வடிவங்கள் அதிகம். இது அவ்வாறில்லாமல் சப்பட்டை பாய்ந்து பருமன் குறைந்து நீட்சி அடைந்ததாய் இருக்கிறது. நீல வெள்ளை செவ்வகப் புள்ளிகளாய் விரவப்பட்ட ஏந்து துவாலை பதினைந்து மீட்டருக்கு அப்பால் நீல நிறமாய்த் தோற்றம் அளிக்கிறது.

முதல் மாடியை அடைவதற்காக அரவிந்தன் சறுக்கு ஏறினான். சக்கர நாற்காலிகளும், சக்கரப் படுக்கைகளும் உருளுவதற்கான பிரத்யேக அமைப்பு அது. அரவிந்தன் இப்போது நடக்கிற பாதை ஆகாயத்திலிருந்து பார்த்தால் 'V' வடிவத்தில் தோன்றக் கூடும். நாற்பதாம் எண் அறையைத் தேடி அடைந்தான். உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. கதவு திறக்கும் ஒலியைப் போல ஆரம்பித்து குழந்தையின் அழுகைச்



## ஸ்ரீரங்கத்தில் ஒரு சர்ச்சை!

கர்னாடக மாநிலத்திலுள்ள ஒரூரில் இருக்கும் ஒரு அறக்கட்டளை நிறுவனம் ரங்கநாதர் ஆலயத்துக்கு தங்கத்தேர் செய்து தருவதாக அனுமதி கேட்டு, ஆலய நிர்வாகத்திற்குக் கடிதம் எழுதியுள்ளது. அனுமதியும் வழங்கி விடுவார்கள் என்ற சூழ்நிலையில் கோயில் ஸ்தலத்தார்களிடையே தங்கத்தேர் வேண்டும் என்று சிலரும், வேண்டாம் என்று சிலரும் கட்சி கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

''ஸ்ரீரங்கம் - ஒரு பிரார்த்தனை ஸ்தலமல்ல. ஆகம விதிமுறைகளின்படிதான் பெருமாளுக்குத் தேர்த் திருவிழா நடைபெற்று வருகிறது. தங்கத்தேர் வந்து, கட்டணம் பெறும் நிலை வந்து விட்டால், நினைத்த நேரமெல்லாம் ரதோத்ஸவம் நடைபெறும் சூழ்நிலை வந்து விடும். இதனால் மரபு கெட்டு விடும். ராமானுஜரால் வகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆலய நிர்வாக முறைகள் இதனால் தவிடு பொடியாகிவிடும்!'' என்கிறார் கோயிலண்ணன் ஸ்ரீனிவாஸாச்சாரியார்.

''தாயாருக்கும் பெருமாளுக்கும் தொன்று தொட்டு நடைபெற்று வரும் திருவிழா நாட்கள் நீங்கலாக மீதமுள்ள நாட்களில் ஒவ்வொரு மாதத்திலும் அரங்கனுக்கு தங்கத் தேர் செய்விப்பது குறித்து ஆட்சேபணை எதுமில்லை. ஆனால், பிரார்த்தனை என்ற பெயரில் அடிக்கடி புறப்பாடு செய்தல் கூடாது!'' என்கிறார் சிங்கப்பெருமாள் உத்தம நம்பிகள்.

கோயில் ஸ்தலத்தார்களின் கருத்துகள் ஒருபுறமிருக்க ஆன்மிகச் சொற்பொழிவாளரான அ. கிருஷ்ணமாசாரி என்பவர், தமது கருத்தை மூன்று பக்க அளவில் அச்சடித்து எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

''ரதோத்ஸவம் என்பது

---

சத்தம் கேட்டது.

பூ மேய்கிற பட்டாம்பூச்சியாய் ஒரு விநாடி சிறகடித்தது மனசு. நிலப்பரப்பெங்கும் கொப்புளித்து பூக்களெனவே மலர்ந்தன. கதவு திறந்து நர்ஸ் வெளிப்பட்டாள்.

''ஏங்க... சுகந்தி இருக்கறது இந்த ரூம்தானே?''

''அவங்க நாப்பத்தெட்டாம் நெம்பர் ரூமுக்கு மாறிட்டாங்க.''

நர்ஸ் அடையாளம் காட்டிய திசையில் அரவிந்தன் நடந்தான். குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்ட அந்த விநாடி அவனுக்குள் உறைந்திருந்தது. தனது தங்கையின் குழந்தையின் அழுகையே அது என நம்பியிருந்த பரவசம் நீராவியாகாத பனித்துளி போல மனதின் புல்லிதழில் தொங்கிக் கொண்டிருந்தது. நாற்பத்தெட்டாம் எண் அறைக்குள் அரவிந்தன் கதவு தள்ளி நுழைந்தபோது அம்மா கீழே உட்கார்ந்திருந்தாள். கட்டிலில் அமர்ந்திருந்த சுகந்தி,

''வாடா...'' என்றாள்.

கடிதத்தில்தான் அண்ணாவெல்லாம். நேரில் பெயர் சொல்லியோ 'டா' போட்டோதான் பேசுவாள்.

''அப்பா வர்லியாம்மா?'' என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டான்.

''இப்ப வந்திடுவாரு'' என அம்மா சொல்லிக்கொண்டிருக்கும்போதே அப்பா பின்னால் சாப்பாட்டுக் கூடையுடன் வந்து நின்றிருந்தார். ஆஸ்பத்திரியில் சாப்பிடுவது வித்தியாசமான அனுபவமாகத்தான் இருக்கிறது. ஹார்லிக்ஸ் பாட்டிலில் ரசம், குழம்பு, போதாத தம்ளர்கள் இவைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிற இடத்தைச் சுற்றி மாயக்கூண்டு அமைந்தது போல் பவ்யமாக இரை எடுக்கிற தோற்றம். சாப்பிட்டு முடித்ததும் அரவிந்தன் சுகந்தியிடம்,

''முதல்ல நாற்பதாம் நம்பர் ரூமுக்கு போயிட்டேன்.''

''அந்த ரூம் சௌகரியம் இல்லைன்னு இங்க மாத்திட்டோம்.''

நினைத்துக் கொண்டாற் போல்,

''அவரெங்க போயிட்டாரு?'' என்று தங்கையின் வீட்டுக்காரரை விசாரித்தான்.

''போன் பண்ணப் போயிருக்காரு''

மேகங்கள் சூலுற்று தாழ்ந்திருந்து

ஒன்பது நாள் விழாவின் முடிவில் நடைபெற்று வருகின்ற ஒன்று. சில மணி நேர தேர்த்திருவிழா நடத்தக் கூடிய அளவுக்கு நேர்த்திக்கடன் செலுத்தும் ஆலயமல்ல அரங்கனின் ஆலயம்.

நாத முனிகள், இராமானுஜர், மணவாள மாமுனிகள் போன்ற ஆசார்யப் பெருமக்களால் கோயில் விழா நடைமுறை வகுக்கப்பட்டுள்ளன. அதை மீறக் கூடாது.

அரங்கனின் திருமேனி பல யுகங்கள் கண்ட திருமேனி. விஞ்ஞான பூர்வமாகவும், சிறு தங்கத் தேரில் அரங்கனை எழுந்தருளச் செய்து வலம் வரும்போது ஏற்படும் அதிர்வுகள் நேரடியாக, கவசமணிந்த அரங்கனின் வடிவத்தை பாதிப்படையச் செய்யக் கூடும். இதே வேளையில், வருடந்தோறும் நிகழ்ந்து வரும் பெரிய மரத்தேரில் இந்த பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை!'' என்கிறார் இவர்.

தேவஸ்தான அலுவலகத்தின் இணை இயக்குனர் முத்துசாமியைச் சந்தித்து தங்கத் தேர் பற்றிக் கேட்டோம்.

''கோயிலுக்கு நல்ல காரியம் நடக்கும்போது எல்லோரது ஒத்துழைப்புடனும் பக்தர்களின் ஆதரவுடனும் தான் நடைபெற வேண்டும். நன்கொடையாக ஆலயத்துக்குத் தங்கத்தேர் பெற்றுத் தருவதற்குப் பெரும்பாலும் அனைத்துத் தரப்பிலிருந்தும் இன்னும் சில நாட்களில் முழு ஒத்துழைப்பும் கிடைத்து விடுமென நம்புகிறோம்!'' என்றார்.

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


• ஸ்ரீனிவாசாச்சாரியார்



• உத்தம நம்பிகள்


• கிருஷ்ணமாச்சாரி

மங்கிய மாலை நேரத்தில் சுகந்திக்குப் பிரசவ வலி வந்தது. சறுக்குகள் வழியாக ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அரவிந்தன் காரிடாரின் ஓரத்திற்கு வந்து ஜன்னலுக்கு அருகில் நின்றான். ஜன்னலுக்கு வெளியே மாமரம் இலை அசைத்துக்கொண்டிருக்கிறது. அந்த மரத்தடிக்குக் கீழே கிடக்க வேண்டிய கயிற்றுக் கட்டிலொன்று மரத்தின் கிளைக் கவட்டையில் தொங்க விடப்பட்டிருந்தது. மரத்தில் கிழ்திசைக் கிளையொன்றில் தேன் கூடு அப்பியிருந்தது. ஓரத்தைத் தட்டி எறிந்த தோசைக் கல்லைப் போல இருந்தது. சலன மற்று தேனீக்கள் இயக்கமும் சிறகடிப்பும் இல்லாமல் உண்ணிகளைப் போல ஒட்டியிருந்ததில் பளபளப்பு காணாமலாயிருந்தது. இப்போது மழை பெய்தால் தேனீக்கள் என்னவாகும் என அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதே ஒரு மழைத்துளி மாவிலை ஒன்றின் மீது விழுந்தது. நட்சத்திரக் கூம்புகள் நீட்டிய வட்டம் ஒன்று அதில் எழுந்தது. தொடர்ந்து தனித்த மழைத்துளிகளை கவனிக்க முடியாதபடி காற்றுச் சரம் கோத்த மொக்குச் சரமென துளிகள் விழ ஆரம்பித்தன. சற்றே கண்மூடி அதைத் தியானித்ததில் ஆட்டு மந்தை ஒன்று மண் பாதையில் நடந்து போவதாயிருந்தது. ஒலி வேகத்தில் வந்திறங்கிய மழைத்துளி மரத்தில் தேங்கி பின் நிலத்தில் சொட்டியது. அரவிந்தன் தேன் கூட்டைப் பார்த்தான். அது அப்படியே அசங்காமல் இருந்தது. தேனீக்களுக்குக் குளிருமா...? இப்போது தேன் கூட்டை ஊடுருவி கீழிறங்கும் மழைத்துளி ஒரு தேன் சுவையைப் பெற்றிருக்கலாம். விதை போன்றே மழையும் முக்கியம் என்பதால் ஏறக்குறைய விதையின் வரி வடிவிலேயே மழை மண்ணில் வீழ்ந்து கொண்டிருக்கிறது.

சுகந்தி எப்படியிருக்கிறாள் என்ற கேள்வி திடீரென எழுந்து வாட்டியது. அவளைப் பார்க்க வேண்டும். சீக்கிரம் அவள் குழந்தையையும். கண்ணாடிக் கலரில் அல்லது மழைத்துளியின் வண்ணத்தில் நிப்பிள் வைத்த பால்புட்டி அவன் கொண்டு வந்த பையில் உறங்குகிறது. ஆபரேஷன் தியேட்டரிலிருந்து சுகந்தி வருவதற்கு நேரம் பிடிக்கலாம்.

உலகின் பெருங்கூடாரமான வானத்தின் தொடாத்தூர தென் மூலையிலொரு கொடி மின்னல் வேர்படர்த்திப் பொலிந்தது. மிகத் தீனமான குழந்தையின் அழுகையொலி கேட்டது போலத் தோன்றியதும் அவன் நாற்பதாம் எண் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ○



# 16

**அருண் சரண்யா**

புஸ்வாணம் ஒன்று சிறி உயரே பாய்வது போன்ற ஒளிக்கீற்றுகள் சுவாதியின் மனத்திலும். பட்டேபகவான் குருஜி!

அவரது ஆசிரமத்துக்கு அப்பா தன்னை அடிக்கடி அழைத்துக் கொண்டு போவதுண்டு என்பதும், "பெண் என்பவள் பெண்ணாக இருக்கணும். வீட்டைத் தாண்டி உத்தியோகம் அது இதுன்னு போனால் அப்படித்தான் மூளை தடம் மாறிப் போகும். உன் மகளையாவது அவள் அம்மா மாதிரி இல்லாமல் பார்த்துக் கொள்" என்று ஒருமுறை அவர் அப்பாவிடம் கூறியதும் நினைவுக்கு வந்தது.

ராஜ்குமார் ஒரு பத்திரிகையாளருக்கே உரிய திறமை மற்றும் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு தனக்குத் தெரிந்த உண்மைகளை வைத்துக் கடந்த காலத்தை அப்படியே காட்சிகளாக மாற்றிக் காட்டிக் கொண்டிருந்தார்.

முதலில் சத்யாவால் நம்ப முடியவில்லை. ஆசிரமத்திலேயே சிறு வயதிலிருந்து வளர்ந்த அனாதைப் பெண்ணான வாணியை ஆசிரமத்திற்கு நிறைய நன்கொடை கொடுத்த ஒரு வெளிநாட்டுக்காரரோடு அனுப்பிவிட திட்டமிட்டாராம் குருஜி. அவரே ஒரு பெண் பித்தர் இல்லையென்றாலும் பணம் படைத்த வெளிநாட்டுக்காரர்களுக்கு அந்த ஆசிரம வளாகத்திலேயே தங்கள் வெறியைத் தீர்த்துக் கொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் உண்டாம். தவிர வெளிநாட்டு செலாவணி விவகாரத்திலும் பல மோசடிகளுக்கு குருஜி உடந்தையாம்.

"யாருக்கும் தெரியாமல் நான் ஆசிரமத்திலேயிருந்து தப்பி வந்திருக்கேன். சென்னையில் இருந்த என் தூரத்து உறவுக்காரங்க வீட்டுக்கு வந்து பார்த்தேன். வீடு பூட்டியிருக்கு. பக்கத்திலே விசாரிச்சப்போ அவங்க வெளிநாடு போயிருக்காங்களாம். வர ரெண்டு மாசமாகும்னு சொன்னாங்க. எங்கேயாவது போய் உயிரை விட்டு விடலாமான்னு கூடத் தோணிச்சு. அதுக்கு முன்னே ஆத்திரம் தீர, அந்தச் சாமியாரின் முகமூடியைப் புரிஞ்சுக்காம அவரை எங்கோ உயரத்தில் ஏற்றிவிடும் உங்களை மாதிரி பத்திரிகையாளர்களின் நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி நாலைந்து கேள்விகள் கேட்கலாம்னு முடிவு செஞ்சேன். அது தான் வந்தேன்" என்றாள் வாணி.

நிலைகுலைந்து போனான் சத்யா. தான் கண்டதும், சந்துரு ஆண்டுக் கணக்காக நம்பி வந்ததும் பொய்யா? நம்ப முடியவில்லை. அப்போதைக்குத் தன் வீட்டிலேயே வாணியைத் தங்க வைத்தான்.

விசிட்டர்ஸ் புத்தகத்தி





விருந்து தான் சேகரித்து வந்த விலாசதாரர்களுக்குக் கடிதம் எழுதினாள். குருஜியுடன் அவர்களுக்கு எவ்வளவு நாள் பழக்கம் என்பது போன்ற விவரங்களைக் கேட்டு.

அவள் அனுப்பிய கடிதங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் திரும்பி வந்தன – குறிப்பிட்ட விலாசத்தில் அப்படி யாருமே இல்லையென்று. அப்படிப்பட்ட விலாசமே இல்லையென்றும் ஒரு கடிதம் திரும்பி வந்திருந்தது.

போதாக்குறைக்கு ஷபனா ஒரு புதிய தகவலைச் சொன்னாள். சத்யாவும், சந்துருவும் ஆசிரமத்துக்குள் சென்றிருந்தபோது, வாசலில் நின்றுவிட்டிருந்த அவள், நிழல் தேடி அங்கிருந்த ஓர் ஒதுக்குப் புறமான மரத்தினருகே சென்றபோது யாரோ இருவர் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்ததாம். அவர்கள் 'நிழல் மனிதர்கள்' என்று புரிந்துக் கொண்டாளாம்.

"இதை ஏன் ஷபனா நீ என்கிட்டே முதல்லேயே சொல்லலே?" என்று சத்யா கடிந்து கொண்டபோது, "நீ அப்போ எதையும் உணர்ந்து கொள்கிற மனநிலையில் இல்லையே சத்யா" என்றாள்.

ஓங்கி அறையப்பட்டது போல் உணர்ந்தான் சத்யா.

உண்மைதான். எங்கே போயிற்று என் பத்திரிகையாளர் புத்தி? ராஜ்குமார் தயங்கினார். "இது ஒரு போலிச் சாமியாரின் விவகாரம் மட்டுமல்ல. தின நண்பன் ஏற்படுத்தப் போகும் பரபரப்பு ஸ்கூப் மட்டுமல்ல. உன் வாழ்க்கை சம்பந்தப்பட்டது இது. விளங்குதா சத்யா?"

"புரியுது சார். ஆனால் என் எழுத்து பல அப்பாவிகளை அந்த ஆசிரமத்தை நோக்கித் திருப்பியிருக்கு. என் கட்டுரை பலரை அந்த குருஜியின் பக்தர்களாக்கியிருக்கு. தெரிந்தோ தெரியாமலோ நான் பத்திரிகை தர்மத்தைக் கடைப்பிடிக்காமல் நழுவ விட்டுட்டேன். இதற்குப் பரிகாரம் தேடியே ஆக வேண்

டும்". ராஜ்குமார் சங்கடத்துடன் ஒத்துக் கொண்டார்.

**ம**கிழ்ந்து போனான் சந்துரு. "எனக்குத் தெரியும், என்னைப் பிரிந்து நாலு மாதம் உன்னாலே இருக்க முடியாதுன்னு" என்று கூறிப் பெருமிதப்பட்டான். "நான் வேணா கல்லூரிக்கு ஒரு வாரம் லீவு போட்டுட்டு உன் கூடவே இருக்கட்டுமா?" என்றான்.

"வேண்டாம். வேண்டாம். லீவெல்லாம அப்புறம் தேவைப்படும்" என்று அவனைக் கல்லூரிக்கு அனுப்பினாள் சத்யா.

அவளுக்குச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. சந்துருவை அனுப்பி விட்டுத் தான் அதையெல்லாம் செய்ய முடியும்.

"பகலிலே போரடிக்குது. குருஜியின் ஆசிரமத்துக்குப் போகிறேனே. சொல்லப் போனால் அவரைப் பற்றி இன்னொரு பெரிய கட்டுரை எழுதணும்னு கூட எனக்கு ஆசை" என்றாள் (உண்மைதானே!). அவன் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான்.

ஒரே வாரத்தில் மறுக்க முடியாத ஆதாரங்கள் சிக்கின. பதமான முறையில், "ஏங்க, உங்க குருஜிக்கு இன்னொரு இருட்டான பக்கமும் இருக்க வாய்ப்பு உண்டா?" என்று சந்துருவைக் கேட்க, "முட்டாள்தனமாகப் பேசாதே" என்ற ஆக்ரோஷமான பதில் வந்தது. விரிவாகச் சொன்னாலும் அதை ஏற்காததோடு, ஆதாரங்களையும் அழித்து விடுவானோ என்ற பயமும் ஏற்பட்டது. அதற்கு மேல் பேசாமல் சென்னை திரும்பினாள். தன் வயிற்றில் கவாதி உருவாகியிருப்பது அப்போது அவளுக்குத் தெரியாது.

"**ஒ**ரு உண்மை – ஒரு மன்னிப்பு" என்ற தலைப்பில் தின நண்பனில் சத்யா எழுதிய கட்டுரை தமிழகத்தை மட்டுமல்ல, இந்தியாவையே உலுக்கிவிட்டது. ஆங்கிலப் பத்திரிகைகள் இதை மொழிபெயர்த்து வெளியிட, சத்யாவின் புகைப்படம் வேறு அவற்றில் அச்சேறின.

சந்துருவிடமிருந்து சத்யாவுக்கு ஒரு தபால் வந்தது – வக்கீல் நோட்டீஸ். விவாகரத்து கோரி.

சந்துருவின் கோபம் அவள் எதிர்பார்த்தது தான் என்றாலும் கொஞ்சம் அமைதியாகத் தான் அளித்த ஆதாரங்களை யோசித்துப் பார்ப்பான்; பிறகு தன்னைப் புரிந்து கொள்வான்; தன்னைப் பாராட்டாவிட்டாலும் மௌனமாக ஏற்றுக் கொள்வான் என்று நினைத்திருந்தாள் சத்யா. அது நடக்கவில்லை.

"அந்த ஆசிரமம் தொடங்கியது ஒரு பூஜ்யரால்தான். வழிவழியாக அதன் தலைமையை ஏற்றவர்கள் உன்னதமானவர்கள்தான். நான் அவர்களை மதிக்கிறேன். ஆனால் கறுப்பு ஆடு போல் தற்போது ஆசிரமத்திற்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் இந்தக் குறிப்பிட்ட நபரின் குற்றங்களைத்தான் பட்டியலிட்டிருக்கிறேன். நாம் இருவரும் ஒருவரையொருவர் நேசிப்பதும், நேசித்ததும் வேறு எதன் அல்லது யாரின் காரணமாகவும் இல்லையே. அப்படியிருக்க நீங்கள் இவ்வளவு ஒரு மோசமான ஒரு முடிவை யோசிக்கலாமா?" என்று தொடங்கி நீண்டதொரு தன்னிலை விளக்கத்தை பதிலாக அனுப்பினாள் சத்யா.

**வி**வரித்துக் கொண்டு போன ராஜ்குமாரின் குரலில் வருத்தம் வழிந்தது.

"சத்யாவின் விளக்கத்தை ஏத்துக்க சந்துரு தயாராக இல்லை. அந்தச் சாமியாரின் சீடர்களில் சிலர் தவறு செய்திருக்கலாமே தவிர, அவர் புடம்போட்ட தங்கம்னே அவன் அப்போதும் நம்பினான். தவிர சத்யா இரண்டாம் முறை முசோரிக்கு வந்தது தன் மனைவியாக அல்ல; ஒரு பத்திரிகையாளராகத்தான்றதை அவனால் மன்னிக்கவே முடியல்லே. 'ஒரு பெண்ணுக்கு இவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால், எனக்கு எவ்வளவு இருக்கும்?'னு உறுமினானாம்.

சத்யா கர்ப்பமாக இருப்பதைத் தெரிஞ்சுக்கிட்டும் அவன் மனம் இளகவில்லை. போதாக் குறைக்கு, "பிறக்கப் போகும் குழந்தையை என்னிடமே சத்யா ஒப்படைத்து விட வேண்டும். அதை நான்தான் வளர்ப்பேன்'னு இன்னொரு வக்கீல் நோட்டீஸை அனுப்பினான்.

## பயமுறுத்தமாட்டோம்!

"**ம**னக ப்ளஸ்"– இது ஹன்ஸா விஷன் வழங்கும் புதிய மெகா தொடர்(சன்). ஒவ்வொரு பகுதியும் ஒரு குறும்படம். ஒவ்வொன்



றும் ஒரு மருத்துவப் பிரச்னையை—போலியோ, வலிப்பு, பிளாஸ்டிக் சர்ஜரி—போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு கதையின் முடிவிலும் ஒரு பிரபல மருத்துவர் கதையில் இடம்பெறும் மருத்துவப் பிரச்னை குறித்து விளக்குவார்!

''இவையெல்லாம் உண்மைக்கதைகள் என்பது முக்கிய விஷயம். சுவாரஸ்யத்துக்காக, சம்பவங்களை ஒரு கதையாகக் கோக்கிறோம். ஒரு டாக்குமெண்டரி போல இது ஆகிவிடக் கூடாது என்பதால் 'அப்படியே' அறுவைச் சிகிச்சையைக் காட்டுவது போன்ற பயமுறுத்தல்கள் எல்லாம் இதில் இருக்காது. தேன் கலந்த மருந்து போல சில தவறான நம்பிக்கைகளை தவறென்று மருத்துவர்கள் மூலமாகவே மக்களுக்கு உணர்த்துவதும் ஒரு முக்கிய நோக்கம். இப்போதைக்கு ஆறு எபிஸோடுகள் தயார் நிலையில் இருக்கின்றன. இவற்றைப் பார்க்கும்



நேயர்களும் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். அவற்றையும் படமாக்க உத்தேசம்'' என்கிறார் தயாரிப்பாளர் விமலா ரமணன்.

— ஜி.

இந்த ரணங்களெல்லாம் போதாதுன்னு, சத்யாவுக்கு மேலும் ஒரு இடி. மகளின் திருமண வாழ்க்கை பாதிக்கப்பட்ட மன அதிர்ச்சியில் சத்யாவின் அம்மா இறந்து விட்டாள்.

மற்ற யாரிடமும் தன் வருத்தத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மனதுக்குள்ளேயே குமுறினதாலோ என்னவோ, ஒருவித டிப்ரஷன் ஏற்பட்டு விட்டது சத்யாவுக்கு.

இதற்கு நடுவே மீண்டும் மீண்டும் சந்துரு விவாகரத்து பற்றி கடிதங்களில் வற்புறுத்த, அதற்கு ஒத்துக் கொண்டு விட்டாள் சத்யா. பலவீனமான மனநிலையில், லேசான மன நோய் காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் கூட அவளுக்கு அடிக்கடி எழத் தொடங்கியது. 'நானும் போயிட்டா இந்தக் குழந்தையை யார் கவனிச்சுப் பாங்க?'ன்ற எண்ணம் தலைதூக்கியதன் காரணமாகத்தான் இருக்கணும், 'குழந்தையை நீங்களே வளர்த்துக்கலாம்'னு சந்துருவுக்குக் கடிதம் எழுதினாள்.

ஆனால் விவாகரத்து நடந்து முடிந்ததும், தான் இறந்து விட்டதாகவே ஒரு பொய்யைச் சொல்லி தன் மகளை அவன் வளர்ப்பான்னு அவ எதிர்பார்க்கலே.

ஒருவழியாக சத்யா குணமடைந்தாள். மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். தின நண்பனும், சமூக சேவையுமே தன் வாழ்க்கைன்னு மாத்திக்கிட்டா'' என்று முடித்தார் ராஜ்குமார்.

''அதாவது சுவாதி என்ற ஒரு மகள் தனக்கு இருப்பதையே மறந்துட்டாங்க, இல்லையா?'' கேட்கும்போதே கண்களில் நீர் வழிந்தது. என்றாலும் அம்மாவின் மீது கொண்ட அபிமானம் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போனதை உணர்ந்தாள்.

தின நண்பன் அலுவலகத்தை மீண்டும் அடைந்தபோது, சுவாதிக்குத் தேவைப்பட்ட தகவல்கள் காத்திருந்தன.

''சுவாதி, பைலட் ஆவதற்கு பட்டப் படிப்பை முடிச்சிருக்கணுமாம்'' என்று அதன் சாராம்சத்தைக் கூறத் தொடங்கிய ராஜ்குமார், உலகமே இடிந்து விழுந்ததைப் போன்ற சோகத்துடன் காட்சியளித்த சுவாதியைப் பார்த்துத் திகைத்துப் போனார். ''ஓ, நீ பள்ளிப் படிப்பைத்தான் முடிச்சிருக்கே இல்லே?'' என்றவர் மீண்டும் தனக்குக் கிடைத்த தகவல்களை முழுமையாகப் படித்தார். பிறகு சற்றே பரபரப்புடன், ''நீ ப்ளஸ் டூவிலே சயின்ஸா, காமர்ஸா?'' என்றார்.

''சயின்ஸ்தான் சார்'' என்றதும் பெருமூச்சு விட்டார்.

''சயின்ஸைப் பள்ளிக்கூடத்திலே சப்ஜெக்டாக எடுத்திருந்தால் பள்ளிப் படிப்பை முடித்திருந்தால் கூட பைலட்டாகலாம்'' என்றவர், இன்னொரு விவரத்தைப் பார்த்ததும் மீண்டும் விழிகளை விரித்தார்.

அவர் பார்த்த இடத்திலேயே சுவாதியும் தன் பார்வையை செலுத்தினாள். அவள் மனம் மீண்டும் சோர்ந்து சுருண்டது. பைலட் பயிற்சிக்கு நான்கு லட்ச ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டிருந்தார் தகவலளித்தவர்.

(தொடர்ந்து பறக்கும்)



One & Only

# அம்மாவின் கதை

அப்பா மேல எனக்குக் கோபம். எதுக்கும், எப்போதும் அம்மாவைத் திட்டறார். அம்மா பாவம். பேசாத மெஷின் மாதிரி, எல்லா திட்டுங்களையும் வாங்கிக்கிட்டு வீட்டுல எல்லா வேலைங்களையும் செய்யறாங்க.

என்னைக் குளிப்பாட்டறது, டிரஸ், பாடம் எல்லாமே அம்மாதான். ஆனா அப்பா... தினம் பேப்பர் படிப்பார். காலைல ஸ்கூல்ல என்னை விடுவார். ஆபீஸ் போய் வருவார். டி.வி. நிறையப் பார்ப்பார். வேற வேலை எதுவும் செய்ய மாட்டார். ஆனா, அது சரியில்லை இது சரியில்லைன்னு அம்மாவை சதா திட்டிக்கிட்டிருப்பாரு. அடிக்கடி, தண்டம்பாரு!

நாலைஞ்சு நாளா வேலைக்காரி வரலை. அம்மாவுக்குச் செமை வேலை. பம்பரமா சுத்தறாங்க. நான் ஹெல்ப் செய்யட்டுமான்னுக் கேட்டதுக்கு 'வேணாண்டா ராசாத்தி! நீ சின்ன க்ளாஸ் படிக்கறே. பெரியவளானதும் ஹெல்ப் செய்வியாம்னு' சொல்லி என் கன்னத்தைத் தட்டிட்டுச் சிரிச்சாங்க. அப்போ, வியர்வை வழியற அம்மா முகம் ரொம்ப அழகா இருந்தது.

இன்னிக்கு மன்டே. ஒரே ரகளைதான். எனக்கு வெள்ளை யூனிஃபார்ம். எவ்வளவு வொயிட்டா அம்மா துவைச்சிருக்காங்க!

"ஏண்டி மக்கு மாடே... சுத்தம்கற வார்த்தை உங்க பரம்பரைக்கே தெரியாதா? சட்டையை எவ்வளவு மட்டமாத் துவைச்சிருக்கே. கறை கறையாத் தெரியுது பாரு..."

அம்மா பதில் சொல்லலை. அப்பாவோட இரைச்சல் அம்மாவுக்குப் பழகிருச்சு. அப்பா போட்டிருந்த சட்டையைப் பார்த்தேன். லைட் ப்ளூ கலர்ல பளிச்னு டி.வியில வர்ற மாதிரி ஜோரா இருந்தது. இதைவிட நல்லா யாரும் தோய்க்க முடியுமா என்ன... அப்பா கண்லதான் ஏதோ ரிப்பேர்!

அப்பா படபடன்னு சப்தம் போட்டுக்கிட்டிருந்தாரு.

"ஷூவாவது சுத்தமா, இல்லை உன் மூஞ்சி மாதிரி இருக்குமா... வேற க்ளீனான கர்ச்சீப் எடுத்துக்கிட்டு வா எழவே!"

ஒரு வழியாகக் கிளம்பினோம். ஸ்கூல், பக்கத்துலதான். என்னை வாசல்ல விட்டுட்டு, அப்பா பஸ் பிடிக்கப் போயிடுவாரு. இந்த ரோடு சூப்பரா இருக்கும். ரெண்டு பக்கமும் வரிசையா பெரிசு பெரிசா மரங்கள். நிழலா ஜில்லுன்னு இருக்கும். அப்பாவுக்கு சூடு இன்னமும் தணியலை. உர்ருனு இருந்தார். அந்தச் சட்டைக் கோவம் தீரலை போல!

திடீர்னு 'சொத்'-னு சப்தம். அப்பா நின்னுட்டார். ஐயையோ. ஒரு மரத்து மேலருந்து, அப்பா சட்டை மேல காக்கா 'டூ பாத்ரூம்' விழுந்திருந்தது! சட்டை அசிங்கமா கறை ஆயிருச்சு! அப்பா மேலப் பார்த்து முறைச்சாரு. அந்தக் காக்கா கண்டுக்காம காகான்னுட்டு எங்கேயோ பறந்து போயிருச்சு. எனக்கு சிரிப்பா வந்தது.

ஆனா அம்மா நிச்சயம் இதுக்கு சிரிக்க மாட்டா.

**பத்மா ரவிசங்கர்**





**மேஷம்** : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இந்த வாரம் ஊர் சுத்தறதைக் குறையுங்க. எதிலயும் எச்சரிக்கை அவசியம். உடல் நலன்ல கவனம் வையுங்க. அரசியல்வாதிகள், கலைத் துறையை சேர்ந்தவங்களுக்கு நல்ல நேரம் இது. குடும்பத்தில் சின்னச் சின்னப் பிரச்னை வரலாம். பொறுமையைக் கடைபிடிங்க. நண்பர்கள் உதவ வருவாங்க. மத்தவங்ககிட்ட நல்ல பெயர் எடுக்கறதுக் காகக் கடுமையா உழைக்க வேண்டி இருக்கும். ஆன்மீகவாதிகள் நல்ல லாபமடைய இந்த வாரம் உதவும்.



**ரிஷபம்** : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

அலுவலகப் பணியாளர்கள், உழைப்பாளிகள் இவங்களுக்கெல்லாம் இது சோதனைக் காலம். புதியவங்க கிட்ட எச்சரிக்கையா பழகுங்க. கலைத் துறையைச் சேர்ந்தவர்கள் நலமடைவாங்க. வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி ஒன்று வரலாம். அப்பாவுடன் கருத்து வேறுபாடு ஏற்படற நிலை இருக்கு. அதனால பொறுமை அவசியம். எந்த ஒரு விஷயத்துலயும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். வியாபாரிகள் அகலக் கால் வைக்க வேண்டாம். செலவு அதிகமா ஆகும். ஜாக்கிரதை.



**மிதுனம்** : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

பொருளாதாரம் தாராளமா இருக்கும். பல இடங்களிலிருந்து பணம் வந்து பையை நிரப்பும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் சக்ஸஸ் ஆகும். கவலையை விடுங்க. அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், அரசுப் பணியாளர்கள் நிலை உயரப் பெறுவார்கள். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல காலம். பெண்கள் மனநிறைவு அடைவாங்க. கணவன் மனைவி உறவு சீராக இருக்கும். வீட்ல விசேஷம் நடக்க சந்தர்ப்பம் கூடி வரும். வார இறுதியில் நிதானம் தேவை. செலவு கையை மீறிப் போகும். வெளியூர் பயணத்துல பாதுகாப்பு முக்கியம். வீடு, மனை வாங்க நினைச்சா இந்த வாரம் தவிர்த்துடுங்க.



**கடகம்** : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

இந்த வாரம் உங்களுக்கு வெற்றிமேல் வெற்றி தான். எதையெடுத்தாலும் திறம்படச் செயலாற்றுவீங்க. அரசியல்வாதிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. அரசு விவகாரங்கள்ல நல்ல திருப்பம் வரும். அலைச்சல் அதிகமா இருக்கும். உடல் நலனில் அக்கறை அவசியம். பொருளாதாரப் பிரச்னை ஏதும் இருக்காது. பொறியியல், ராணுவம் மற்றும் வியாபாரத் துறையைச் சேர்ந்தவங்க நல்ல வளர்ச்சியை எதிர்பார்க்கலாம்.



**சிம்மம்** : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

எதிரிகள் விலகிப் போயிடுவாங்க. அதனால கவலை இல்லை. போட்டி பந்தயங்களில் நிச்சயமாக வெற்றிதான். வீட்ல விசேஷ காரியங்கள் நடக்க சந்தர்ப்பம் கூடி வரும். முக்கியஸ்தர்கள் உதவ வருவாங்க. வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் கொண்டு வரும். சட்டம், காவல், இராணுவத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் பாராட்டு புகழ் கூடும். எதிர்பாராத திடீர் செலவு கூடும். யோசிச்சு செலவழிங்க.




**மேஷராசிக் காரரான ராதிகா இந்த வாரம் மிகக் கடுமையா உழைச்சாத்தான் பலன் கிடைக்குமாம்!**



**கன்னி** : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

முக்கியமான காரியங்களைத் தள்ளிப் போடறது நல்லது. மாமூலான காரியங்களில்கூட அதிக அக்கறை தேவைப்படும். கவனமா இருங்க. வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வரலாம். பயணத்தை ஒத்தி வச்சுடுங்க. எதிலயும் விசேஷமான பலனை எதிர்பார்க்க முடியாது. பொருளாதாரம் ஏறி இறங்கும். திடீர் செலவு

ஏற்படலாம். உடல் நலன்ல கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுங்க.



**துலாம்** : (சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)

நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். வீட்ல கல்யாணம் போன்ற விசேஷம் நடக்க சந்தர்ப்பம் வரலாம். நல்ல வங்க தொடர்பு கூடும். தொழிலதிபர்களுக்கு முன்னேற்ற மான வாரம் இது. கணவன் மனைவிக்குள்ள இதுவரை பிரச்னையிருந்தால் இப்போது விலகி விடும். சட்டம், காவல் ராணுவத் துறைகளைச் சேர்ந்தவங்க பொறுப்புடன் செயல்படறது நல்லது. சகோதரர்களால தொல்லைகள் ஏற்படலாம். குடும்ப நலன்ல கவனம் தேவை. பயணத்தைத் தள்ளிப் போடறது நல்லது. பண விஷயத்துல எச்சரிக்கையா நடந்துக்குங்க.

# நட்சத்திரம் பார் நடக்கும்




**விருச்சிகம்** : (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

இந்த வாரம் உங்களுக்கு அனுகூலமான வாரம்தான். தொழிலாளர்கள் தங்கள் நிலைல முன்னேற்றத்தைப் பார்க்கலாம். அரசாங்க விவகாரங்கள்ல நல்ல திருப்பம் உண்டாகும். அரசியல்வாதிகள் தங்கள் திட்டங்களுக்கு ஆதரவும் வரவேற்பும் பெறுவாங்க. கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு பிரச்னை வந்து போகும். வீண் வம்பு வழக்குகளில் தலை நீட்டக் கூடாது. ஆடம்பர வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.



**தனுசு** : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

உங்க புத்திசாலித்தனமும் அழகும் இந்த வாரம் கூடும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றிதான். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. கல்யாணமாகாதவங்களுக்கு அதற்கான வாய்ப்பு வரும். பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை. மாணவர்கள் நிலை உயரப் பெறுவாங்க. கோர்ட், வழக்கு விவகாரங்களில் வெற்றிதான். புதியவர்களிடம் நெருங்கிப் பழகுகிறதைத் தவிர்த்திடுங்க.




**மகரம்** : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

உங்கள் அறிவாற்றல், திறமை வெளிப்படும். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். கணிதம், எழுத்து, பத்திரிகை, விஞ்ஞானத் துறையை சேர்ந்தவங்க நல்ல வளர்ச்சி காண்பாங்க. பட்டம், பதவி தேடி வரும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. ரியல் எஸ்டேட் வகைகளில் லாபம் இருக்கு. வெளியூர் போறதா ப்ளான் வச்சிருந்தா ஒத்தி வச்சுடுங்க. எதிலயும் அவசரம் வேண்டாம். நிதானத்தைக் கடைப்பிடிங்க. நல்லவங்களோட தொடர்பு கொண்டால் வெற்றித் தானே வரும்.



**கும்பம்** : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

எந்தப் பிரச்னை வந்தாலும் அதையெல்லாம் தாண்டி வெற்றி பெறுவீங்க. உங்கள் ஆற்றல் 'பளிச்'னு தெரிய வரும். அரசியல்வாதிகளுக்கு மதிப்பும் பாராட்டும் கூடும். விவசாயிகள் தொழிலாளிகள் நிலை உயரப் பெறுவாங்க. திறமை உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுங்க. பண நடமாட்டமுள்ள இடங்கள்ல வேலை பார்ப்பவங்க எச்சரிக்கையாக இருங்க. நிதானம் முக்கியம்.



**மீனம்** : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

நினைத்த காரியங்கள்ல வெற்றி பெறலாம். உங்க ஆற்றல், முக வசிகரம் கூடும். எதிரிகள் ஓடி ஒளிவாங்க. பண நடமாட்டம் தாராளமா இருக்கும். பல இடங்கள்ல இருந்து பணம் வந்து சேரும். வீட்ல விசேஷங்கள் நடக்கலாம். கோர்ட் விவகாரங்கள்ல வெற்றி வந்து சேரும். பத்திரிகை, எழுத்து, கணிதத் துறைகளைச் சேர்ந்தவங்க வெற்றிநடை போடுவாங்க. செலவு அதிகமா இருக்கும். கொடுக்கல் வாங்கல் விஷயத்துல ஆதாயம் வரும். ●

# D

# ஆங்கிலமே

## கம்ஃபர்டபிள் சேர்!

**"L**ife is to live"-வாழ்க்கை வாழ்வதற்கே"

நல்லா வசதியா வாழணும்னு எல்லாருக்கும் ரொம்ப ஆசை. அதனாலதான் ஒவ்வொரு விஷயத்திலும் 'வசதி'யை எதிர்பாக்கிறோம்.

உடலுக்கும், உள்ளத்துக்கும் ஆறுதலான வசதியை இங்கிலீஷ்ல 'comfort'ன்னு சொல்றது வழக்கம்.



உதாரணமா ரயில்லயோ, பஸ்லயோ களைப்பு இல்லாம சொகுசா பிரயாணம் செய்யறதை 'comfortable journey' ன்னு சொல்றோம்.

உட்காரும் நாற்காலி வசதியா இருந்தா 'comfortable chair'ன்னு சொல்றோம்.

நாம வசிக்கிற வீடு வசதியா இருந்தா, 'இந்த வீடு ரொம்ப வசதியா இருக்கு'ன்னு இங்கிலீஷ்ல எப்படிச் சொல்றது?

"வசதியான இடம், வசதியான நேரம், வசதியான வீடு" இதுபோன்ற வசதிகளைப் பத்திப் பேசும் போது, 'convenient' (கன்வீனியன்ட்)ங்கற வார்த்தையை use பண்ணலாம்.

இந்த வீடு ரொம்ப வசதியா இருக்குங்கறதை This house is very convenient னு சொல்லலாம்.

எவ்வளவு பண வசதியிருந்தாலும் சில பேர் பழைய ஓட்டை உடைசல் சாமான்களைத் தூக்கி எறிய மனசு வராம எல்லாத்தையும் ஒரு room ல போட்டு அடைச்சு வச்சிருப்பாங்க. சில பேருக்குக் காலியான ஊதுபத்தி பாக்கெட்டைக் கூடத் தூக்கியெறிய மனசு வராது.

அதனால காத்து வரக் கூட இடமில்லாமல் ஒரே அடைசலா இருக்கும். சரி, அந்த ரூம் அடைசலா இருக்குன்னு இங்கிலீஷ்ல சொல்லணும்னா முதல்ல 'அடைசலா'ங்கறதுக்குச் சரியான இங்கிலீஷ் வார்த்தை எதுங்கறதைத் தெரிஞ்சுக்கணும்.

போதிய காற்றோட்டமில்லாத, அடைசலான என்பதைத் தெரிவிக்க 'stuffy' என்ற வார்த்தையைப் பயன்படுத்தலாம். அந்த ரூம் காத்தோட்டமில்லாம அடைசலா இருக்குங்கறதை 'That room is stuffy' னு சொல்லுங்க.

அட... இவ்வளவு இருக்கா!

'அந்த ரூம் ரொம்ப சுத்தமா இருக்கு'ங்கறதை The room is very clean ன்னு சொல்வோம். இந்த cleanங்கற வார்த்தைக்கு பதிலா The room is neatன்னு சொல்லலாம். இன்னும் நெறைய வார்த்தைங்க இருக்குங்க.

The room is tidy
The room is cozy
The room is lovely
The room is spick and span

என்றெல்லாம் வர்ணிக்கலாம்.

ரூம் ரொம்ப விசாலமா இருந்தா 'The room is spacious' என்கிறோம்.

**சி**ல வீடுகளைப் பாத்தீங்கன்னா அடைசல் எதுவுமில்லாம நல்ல காற்றோட்

**வி. ராஜகோபாலன்**

டமா இருக்கும்.

"வீடு ரொம்ப காற்றோட்டமா இருக்கு''ன்னு இங்கிலீஷ்ல சொல்லணும்னா The house is airy'னு சொல்லலாம். "போன வாரம் எங்க ஆபீஸ் டைப் பிஸ்ட் வனஜா வீட்டுக்குப் போயி ருந்தேன். வீட்டை அவங்க எவ்வளவு சுத்தமா கண்ணுல ஒத்திக்கற மாதிரி வச்சுருக்காங்க. நம்ம வீடு இருக்கே" என்று அடுத்தவர்கள் வீட்டுடன் தங்களது வீட்டை ஒப்பிட்டு நம்மவர்கள் பலர் குறைபட்டுக் கொள்வதுண்டு.

சரி, விஷயத்துக்கு வரலாம். அவங்க வீடு ரொம்ப சுத்தமா இருக்குங்கறதை இங்கிலீஷ்ல எப்படிச் சொல்வீங்க?

இது என்ன ஸார் பெரிய விஷயம்.

'clean' ன்னா சுத்தமான்னு அர்த்தம். 'Their'ன்னா அவங்களோட, houseன்னா வீடு எல்லாத்தையும் சேர்த்து ஈஸியா சொல்லிடலாமே.

நீங்க சொல்றது




# அருகில் வா!

சரிதான். ஆனா... வீடு கண்ணுல ஒத்திக் கற மாதிரி ரொம்ப cleanஆ இருந்தா அதை 'Spick and Span'ன்னு சொல்றது வழக்கம்.

அதனால "Their house is spick and span"ன்னு சொல்லுங்க.

'இந்த ஏரியால ஒரு நல்ல வீடு கிடைக்கு மான்னு தேடி நாலு மாசமா நாயா அலை யறேன். ம்ம்... ஒரு வீடு கிடைக்கலை'ன்னு உங்களோட நண்பர் சொல்கிறார். ஏம்பா இதை எங்கிட்ட அப்பவே சொல்லியிருக் கக் கூடாதா? எங்க பக்கத்து வீடு காலியா இருக்கேன்னு சொல்ல நெனைக்கிறீங்க.

இதை இங்கிலீஷ்ல சொல்லணும்னு உங்களுக்கு ஆசையா இருக்கு.

எப்படிச் சொல்வீங்க இதை இங்கிலீஷ்ல?

'neighbouring house' ன்னா அடுத்த வீடு.

'is' ன்னா இருக்கு.

சரி, 'காலியாக'ங்கறதை எப்படிச் சொல் றது? "empty" ன்னு சொல்லலாமா?

வேலை காலியா இருக்கு.

வீடு காலியா இருக்குன்னு சொல்ற துக்கு 'empty' ங்கற வார்த்தையை யூஸ் பண்றதுக்கு பதிலா 'vacant' னு சொல்றது நல்லதுங்க.

The neighbouring house is vacant- அடுத்த வீடு காலியாக இருக்கிறது.

ஒரு வேலை "காலியாக உள்ளது'' என் பதைத் தெரிவிக்க "vacant" என்ற வார்த் தையைப் பயன்படுத்தலாம்.

"The post of a typist is vacant."

டைப்பிஸ்ட் வேலை காலியாக இருக் கிறது.

அதற்கான நபர் வேலையில் அமர்த்தப் படலாம்.

கடந்த மூணு வாரமா ரோடுலேருந்து ஆரம்பிச்ச வீடு வரைக்கும் ஒவ்வொண் ணும் எப்படியிருக்குன்னு பார்த்துட் டோம்.

நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களின் நிறம், குணம், நடவடிக்கை போன்றவற்றை வர்ணிப்பது எப்படியென்று அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)

# முகச்சீரமைப்பு அறுவைச் சிகிச்சையில் புதிய அணுகுமுறையான அதி நவீன எலும்பு டிஸ்டிராக்டர் சிகிச்சை

மருத்துவ உலகில் கடந்த சில வருடங்களில் தாடை அறுவைச் சிகிச்சை துறை பெரும் முன்னேற்றங்கள் அடைந்துள்ளது. முகத்தில் தோன்றும் எலும்பு வளர்ச்சிக் குறைபாடுகளை சில மாதங்கள் முன்புவரை தாடை அறுவைச் சிகிச்சை மூலம் சீர் செய்யப்பட்டு வந்தது. இவ்வாறு சீர் செய்யும் அறுவைச் சிகிச்சைகள் பெரும்பாலும் ஒருவரின் வளரும் பருவம் தாண்டிய பிறகே செயல்படுத்த முடியும்.

முக வளர்ச்சிக் குறைபாடுகளில் பெரும்பாலும் காண்பது அதிகமாக வளர்ந்த மேல் தாடைதான். இதைத் தவிர முன்னே நீண்டு இருக்கும் கீழ்தாடை, குன்றிய மேல் அல்லது கீழ்தாடை, உதடு மற்றும் அண்ணப் பிளவு, தாடை மூட்டு நோயினால் குன்றிய கீழ்தாடை, புற்று நோயினால் இழந்த தாடை எலும்பு என்று பல காரணங்களினால் முகத்தில் உள்ள எலும்புகளின் வளர்ச்சி மற்றும் அமைப்பு பாதிக்கப்பட்டிருக்கும். மேல் கண்ட நிலைகளில் ஏதேனும் ஒரு உறுப்பு மட்டும் குறைபாடுடன் இருக்கும். ஆனால் ட்ரெச்சர்-காலின் (Treacher-Collin Syndrome) என்ற குறைபாட்டில் முகத்தில் உள்ள நெற்றி எலும்பு, கன்ன எலும்பு, மூக்கு மற்றும் கண்களைச் சுற்றியுள்ள எலும்பு பாகங்களும் வளர்ச்சியின்மையின்றி காணப்படும். இத்தகைய நிலையில் முகத்தில் நடுபாகம் எடுப்பாகத் தெரிய உடம்பின் வேறு பகுதியிலிருந்த எலும்பை எடுத்து முகத்தில் வைக்க நேரிடும். இவ்வாறு கிராஃப்டிங் செய்வதால், சில வேளை எடுத்த இடத்தில் ஏதாவது நோய் தோன்றும். மேலும் இவ்வாறு எடுக்கப்பட்ட எலும்பு முகத்தோடு சேராமல் வைத்த இடத்தை விட்டு நகர்ந்து விடும்.

இதுபோன்ற தீமைகள் எதுவும் சேராமல் தவிர்க்க எலும்பு டிஸ்ட்ராக்ட்டர்ஸ் (Bone Distractors) வந்துள்ளது. இவற்றைப் பெரும்பாலும் வளரும் பருவத்தில் உபயோகிப்பார்கள். சில பெரியவர்களுக்கும் வளர்ச்சி இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வளர்ச்சி குன்றிய எலும்பு பாகங்களின் மேல் இந்தக் கருவியை வைத்து திருகு ஆணிகளால் நிறுத்தியபிறகு, அக்கருவியின் கையைப் போல் நீண்டு இருக்கும் கம்பியைத் திருகிவிட்டால் அழுத்தத்திற்கு ஏற்றவாறு எலும்பின் வளர்ச்சியைத் தூண்டிவிடும்.

இம்முறையை முதலில் கண்டுபிடித்தவர் சைபீரியாவைச் சேர்ந்த **டாக்டர் இல்லிசராவ்** என்பவர். ஆனால் இல்லிசராவ், 1950 ஆவது ஆண்டில் வளையங்களினால் முறிக்கப்பட்ட கை மற்றும் கால் எலும்புகளை ஒன்றாக வைத்து குணப்படுத்தினார். இந்த வளையங்களைத் திருகினால், அவை முறிந்த எலும்பு துண்டுகளை மேலும் இறுகப் பிடித்து புதிய எலும்பு வளரத் தூண்டும். புதிதாகத் தோன்றிய எலும்பு மிகவும் வலிமையுடன் உடம்பில் உள்ள மற்ற எலும்புகளைப் போல் உள்ளதைக் கண்டார். ஆகையால் இம்முறையை எலும்பின் வளர்ச்சிக்கு உபயோகித்தார்.

இந்த டிஸ்ட்ராக்டர்ஸை உடம்பில் எந்த எலும்பிலும் உபயோகிக்கலாம். ஆனால் முகத்தில் மட்டும் பெரும்பாலும் கீழ்தாடையில் உபயோகிக்கப்படுகின்றன.

தாடை வளர்ச்சி மாறுபாடுகள் இருக்கும்பொழுது, அதனை வளரும் பருவத்திலேயே கட்டுப்படுத்தி குழந்தை வளர்ந்த பின்பு அக்குறை இல்லாமல் செய்யலாம். டிஸ்ட்ராக்டர்ஸ் வளர்ச்சிப் பருவத்தின் முழுப் பலனை உபயோகித்து குறைகளை நீக்கும். அது மட்டுமின்றி, பெரியவர்களில் ஓரளவு வளர்ச்சி தூண்டியதாக கூறப்படுகிறது. பொதுவாக டிஸ்ட்ராக்டர்ஸ் 2 வகைப்படும். ஒன்று வாயினுள் பொருத்தப்படுபவை மற்றொன்று வாயின் வெளியே பொருத்தப்படுவது. வாயினுள் பொருத்தப்படும் சிறிய டிஸ்ட்ராக்டர்கள் பல மடங்கு பயனுள்ளவை.



• சிகிச்சைக்கு முன்



• சிகிச்சைக்கு பின்

இம்முறையினால் அறுவைச் சிகிச்சை செய்யும் நேரம் மற்றும் மருத்துவ மனையில் இருக்க வேண்டிய நாட்களும் வெகுவாகக் குறைந்து உள்ளது. உடம்பில் பிற உறுப்பிலிருந்து எலும்பு எடுப்பதால் ஏற்படும் பின் விளைவுகளும் இதில் அறவே நீக்கப்படுகிறது. சிகிச்சைக்குப் பின் பழைய நிலை ஏற்பட வாய்ப்புக் கிடையாது. மற்றும் இதனால் பின் விளைவுகள் எதுவும் நேரிடாது. அறுவை சிகிச்சையின் பொழுது வாயினுள் திருகு ஆணிகளால் திடமாக பொருத்தப்பட்ட டிஸ்ட்ராக்டர் இருப்பதால், எலும்பு பாகங்கள் விலகி விடாது. இவ்வாறு பொருத்தியபின், ஆறு நாட்கள் கழித்து வாயின் வெளியே தென்படும் டிஸ்ட்ராக்டரின் சிறு கம்பியைத் திருகிவிட வேண்டும். நோயின் கடுமைக்கு



• டாக்டர் பாலாஜி

ஏற்றவாறும், குழந்தையின் உடல் நிலைக்கு ஏற்ற வாறும் திருப்பங் கள் கொடுக்கப்படுகின்றன.

மிகவும் சிறிய டிஸ்ட்ராக்டர் களை உதடு மற்றும் அண்ணப் பிளவு உள்ள குழந்தைகளுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இப்படி செய்வ தால் பின்னர் சிரமமான அறுவைச் சிகிச்சை கள் செய்வதைத் தவிர்க்கலாம். இந்த சிறு கருவிகளை மேல் அண்ணத்தில் பொருத்தி விட்டால் நாளடைவில் தேவையான அளவிற்கு அது வளர்ந்துவிடும்.

பொதுவாக வயதானவர்களுக்கு பற்களை எல்லாம் பிடுங்கிவிட்ட பிறகு மிஞ்சி உள்ள எலும்பின் உயரம் பல்செட்டு செய்வதற்கு பற்றாமல் போய்விடும். இவ்வாறான வயதா னவர்களுக்கு, உயர அளவைக் கூட்ட உடம்பி லிருந்து எலும்பை எடுத்துப் பொருத்துவது நல்லதாக இருக்காது. எனவே எலும்பின் உயரத்தைக் கூட்டவும் சிறு டிஸ்ட்ராக்டர்கள் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

முன்பு குறிப்பிட்டது போல் ட்ரெச்சர் காலின் என்ற குறைப்பாட்டில் முகத்தில் பல எலும்புகள் பாதிக்கப்படுவதால், இதற்கு பல திசை டிஸ்ட்ராக்டர்கள் (Multi directional) பொருத்த வேண்டும். இவை மூன்று கோணங் களிலும் வளர்ச்சியை உண்டாக்கி, குறை பாட்டை நீக்கிவிடும். தேவையான வளர்ச்சி அடைந்த பின்னும் இக்கருவியின் கம்பிகள் திருகப்படாமல் சில நாட்களுக்கு விடப் படுகிறது. இவ்வாறு விடுவதால் புதிதாக வளர்ந்த எலும்புகள் முதிர்ச்சி அடைந்து, அதன் மேல் உள்ள தசைப் பகுதிகள் வளரவும் உதவுகிறது.

தாடை மூட்டு நோயினால் பாதிக்கப்பட்ட வர்களுக்குக் கீழ்த் தாடையின் ஒரு பாகம் வளர்ச்சியின்மையின்றி இருக்கும். இவர் களுக்கு தாடையின் உயரத்தை மட்டும் கூட்டு வதற்கு, ஒரு திசை டிஸ்ட்ராக்டரை (unidirectional) உபயோகிக்கலாம். இவற்றைப் பொருத்தும் இடம் குறைபாட்டின் தன்மைக்கு ஏற்றவாறும், எலும்பின் வலிமையையும் பொருத்து உள்ளது. சிகிச்சை முடிந்த பிறகு சிறு அறுவை சிகிச்சையினால், கருவியை எடுத்து விடலாம்.

இவை எல்லாவற்றையும் விடக் குறிப்பிடத் தக்கது பியரி-ராபின் என்ற வளர்ச்சி குறை பாடு. இதில் பிறக்கும் குழந்தையின் கீழ்தாடை சிறிதளவும் இருக்காது. இதனால், குழந்தையின் நாக்கு தொண்டையில் முடங்குவதால், மூச்சு திணறல் ஏற்படும். இம்மாதிரியான அபாய நிலையில், குழந்தயின் கழுத்தில் ஓட்டை போட்டு மூச்சுவிட எளிதாக்குவார்கள். இப்படிச் செய்வதால், குழந்தைக்கு மிகவும் கடினமாகும்.

அது மட்டுமின்றி வளர்ந்தபின் னும் கழுத்தில் அந்தத் தழும்பு இருக்கும். இக்குறைகளைத் தடுக்க பிறந்த குழந்தைகளுக்கு மிகவும் சிறிய டிஸ்ட்ராக்டர் பொருத்துவ தால், விரைவில் பிறரைப் போல மூச்சுவிடவும் முடியும் மற்றும் தாடையின் தோற்றமும் நன்றாக இருக்கும்.

இவ்வாறான புதிய அணுகுமுறைகளை வெளிநாட்டில் நடக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்டும், அந்நாட்டில் நடக்கும் மாநாடு களில் பிற வெளிநாட்டு நிபுணர்களின் அறுவை சிகிச்சை முறைகளை நேரில் பார்த் தும், கற்று அறிந்து, தன் நாட்டு மக்களுக்கு இப்புதிய முறைகளைப் பயன்படுத்தி அவர் களின் வாழ்வு மலர் களை மலரச் செய்த வர் **டாக்டர் எஸ்.எம். பாலாஜி**. சென்னை யிலுள்ள மிகப் பிரபல மான பல் மருத்துவர் இவர். முகச் சீரமைப்பு நிபுணரும் கூட.



• தாடை எலும்பை நீட்டுவதற்கு எலும்பில் டிஸ்ட்ராக்டர் பொருத்தப்பட்டுள்ளது.

**டாக்டர் பாலாஜி** சென்னையில் உள்ள நான்கு பெரிய மருத்துவ மனைகளில் ஆலோ சனை நிபுணராகத் திகழ்கிறார். உலகின் பல பாகங்களில் இருந்தும் இவரிடம் சிகிச்சை பெறுவதற்காக ஆயிரக்கணக்கானோர் வந்து போகின்றனர்.

இவர் மாலத்தீவின் அரசாங்க கௌரவ மருத்துவ ஆலோசகராகத் திகழ்ந்து, அங்குள்ள மக்களுக்கு இலவசமாக அறுவைச் சிகிச்சைகள் செய்து வருகிறார்.

இப்புதிய அறுவைச் சிகிச்சை முறைகளில் நூற்றுக்கு நூறு வெற்றி பெறும் டாக்டர் **பாலாஜி**, உலகப் பிரசித்தி பெற்றவர். இவரின் பல், முகச்சீரமைப்பு அறுவைச் சிகிச்சை மையத்தின் முகவரி:

**பாலாஜி பல் இம்ப்ளாண்ட், முகச்சீரமைப்பு அறுவை சிகிச்சை மையம்**

**30/1, கவிஞர் பாரதிதாசன் சாலை,**
**(S.I.E.T. கல்லூரி எதிரில்)**
**தேனாம்பேட்டை, சென்னை - 18.**
**போன்: 436 4136, 433 1696, 432 6622, 434 6623**
**Fax:91-44-432 2907**
**E-Mail : smbalaji@md2.vsnl.net.in**
**URL: http/www.intamm.com/balaji**

(வி.ம்.)

# பாயசம்

ஜி. ஏ. பிரபா

முதியோர் இல்லத்திலிருந்து பெரியண்ணாவுக்குத் தகவல் வந்தது. அம்மா இறந்து போனாள். அவன்தான் போய் ஆம்புலன்ஸில் வைத்து அம்மாவைக் கொண்டு வந்தான்.

இரண்டு மணிக்குள் பெரியக்கா கோதை, சின்னவள் மாலு, ரெண்டாவது பையன் பாலு எல்லாரும் வந்து விட்டார்கள். எல்லோருமே உள்ளூர். எல்லோரிடமும் செல்ஃபோன் இருந்ததால் சட்டென்று விஷயம் சொல்ல முடிந்தது.

எல்லாருமே நல்ல வசதிதான். சொந்த வீடு, கார், அதிகாரம், ஆள் படைகள் எல்லாமே உண்டுதான். மனசுதான் இல்லை.

அதனால்தான் அம்மாவை முதியோர் இல்லத்தில் விட்டு விட்டார்கள். "ஒரு வாய் சோறு. பழையது போட்டாலும் சரிடா. நான் உன்கிட்டே வந்து இருக்கேனே" - அம்மா அழுவாள். அப்போதைக்குத் தலையாட்டினாலும் யாரும் காரியத்தில் முனைந்ததில்லை.

"கொள்ளியானும் போடுடா" - என்றாளாம் பெரியண்ணாவிடம்.

போட்டு விட்டான்.

துக்கமில்லாமலிருந்திருக்காது. ஆனால் வரிசையாக அலுவலக ஊழியர்கள் துக்கம் விசாரிக்க வரவே, கம்பீரமாகி விட்டான். கஸ்டம்ஸ் கலெக்டர் கலங்கலாமா?

"பத்து நாள் காரியம் பண்றதா உத்தேசம் உண்டோ?" - சாஸ்திரிகள்.

"கண்டிப்பா."

"ரொம்ப சந்தோஷம்."

"என்ன பண்ணணும்னு சொல்லுங்கோ!"

"தானம் எல்லாம் தரணும். அது உங்க வசதியைப் பொறுத்தது."

"எதுக்கு?"

"அதான் அவளுக்கு சொர்க்கத்துக்குப் போகும் வழி."

"ஓஹோ!"

"ஆத்மா சாந்தியடைய வேண்டாமா? நீங்க பண்ற தானம் தர்மம்தான் அவளை நிம்மதியா போக வைக்கும்."

"என்னென்ன தானம் தரணும்னு லிஸ்ட் கொடுங்கோ."

"குடை, தண்ணீர், தங்கம், வெள்ளி, தடி, செருப்பு, ஜமுக்காளம், பாய், விரும்பறதைத் தரலாம்."

"சரி."

"மாடு தானம் செய்யணும்."

"மாடு எதுக்கு?"

"வழில நெருப்பாறு இருக்கும். இந்த மாட்டு வாலைப் பிடிச்சிண்டு தாண்டிடலாம்."

"ஹம்பக்" - என்றாள் கோதை.

"ஹைலி இடியாட்டிக்" - இது பாலு.

"சாஸ்திரம்" என்றார் சாஸ்திரிகள்.

அண்ணா யோசித்தான். அக்கம் பக்கம் நண்பர்கள் ஊதி விட்டது. "பெத்த தாய்க்கு கணக்குப் பாக்கறியா?" - என்றார் சித்தப்பா.

முதியோர் இல்லத்தில் சேர்க்கப் போவதாக அறிவித்த அன்றே அம்மா இறந்திருப்பாள். வயதான காலத்தில், பெற்ற குழந்தைகளுக்கு மத்தியில் இல்லாமல், தனியே உயிரை விடும் நிலை அம்மாவை எப்படி வேதனைப்படுத்தியிருக்கும் என்று நினைத்துப் பார்க்க முடியவில்லை.

"எல்லாரும் கேவலமா பாப்பாங்க" என்றாள் கோதை.

"செலவைப் பத்தி கவலைப்பட வேண்டாம். அம்மாவுக்குப் பண்றோம்" என்றாள் பெரிய மன்னி.

"ஆமாண்ணா. ஆகிற செலவு ஆகட்டும். செலவை நாலு பேரும் பகிர்ந்துக்கலாம்" - மாலு.

"அதை அப்புறமா பேசலாம். பாலு நீ லிஸ்ட் வாங்கிண்டு வா" என்றான் பெரியண்ணா.

வெகு ஜோராக அம்மாவின் காரியங்கள் நடந்தன. பெண்கள், உறவுகள் பெரி

யண்ணாவின் வீட்டிலேயே தங்கி விட்டனர். கலகல வென்று சிரிப்பும், விளை யாட்டுமாய் இருந்தது வீடு. எல்லா துவேஷங்களும், விரோதங்களும் மறைந்தது போல் இருந்தாலும் தனியா கச் சேர்ந்த பெண்கள் குழு அண்ணாக்களை விமர் சித்தது. அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்த்தது. ரெண்டு பையன்கள் இருந்தும் அவள் அனாதையாக இறந்தது பற்றிப் புலம்பி அழுதது.

''ஏன்! அவ்வளவு பிரியம் இருந்தா நீ கூட்டிட்டுப் போய் வச்சுக்க வேண்டி யதுதானே" என்றாள் பெரிய மன்னி.

"பெண்களுக்குக் கடமையில்லை."

''அப்போ, அம்மாவைப் பற்றி நீ பேசாதே."

சண்டை போட்ட பெண்கள் துணி வாங்கும் போது ஒற்றுமை ஆனார்கள். குழந்தை களுக்கு, பெரியவர் களுக்கு, அக்கா, தங்கை களுக்கு ஒரே மாதிரி புடைவை என்று எடுத்தார் கள்.

பத்தாம் நாள் அம்மாவுக்கு உப்பில்லாமல் சமையல் படைக்கப்பட்டது.

"அம்மாவுக்கு வாழைக்காய் பொடித்தூவல் பிடிக்கும்."

"அதிரசம்னா அம்மா செய் யணும்."

"அம்மா கைப்பக்குவமே தனி. சின்னதா ஒரு ரசம் செஞ்சா போதுமே."

அம்மாவின் குணங் களும், திறமைகளும் விமர்சிக்கப்பட்டன. அவள் வாழ்க்கையும்,



குழந்தைகளை வளர்த்த விதத்தையும் பெருமையாகக் கூறி, எல்லாரும் கூடிக் கண்ணீர் விட்டார்கள்.

பதிமூன்றாம் நாள் நல்லது செய்து, எண்ணெயில் முகம் பார்த்து, புதுத் துணி வாங்கி உடுத்தி, எல்லாரும் அரூபமாய் இருந்த அம்மாவை வணங்கி எழுந்தார்கள்.

சாஸ்திரிகள் அம்மாவின் வாழ்க்கையைப் புகழ்ந்து பேசிவிட்டு தட்சிணையை வாங்கிக் கொண்டு போனார்.

"கணக்குப் பார்த்துடலாமே" என்றாள் கோதை.

"ஆமாம். இப்பவே முடிச்சிடலாம்."

மொத்தக் கணக்கும் பார்க்கப்பட்டது.

வைதிகச் செலவு, சாப்பாடு, துணிமணிகள் எல்லாம் சேர்ந்து இருபதாயிரம் வந்தது. உடனே பணம் பிரித்து வசூல் நடந்தது.

"காசு போனா போகட்டும். திருப்தியா நடந்ததே."

"ஆமா. அம்மாவோட ஆத்மா நிச்சயம் திருப்தி அடைஞ்சிருக்கும்."

"வந்தவாளுக்கு சாப்பாடு போட்டுடலாமே" - பெரியண்ணா.

தெரிந்தவர்கள், உறவுகள் என்று நூறு இலை விழுந்தது.

"கல்யாணம் மாதிரி நடத்திட்டேள் போங்கோ" - ஒரு வெற்றிலை வாய் அண்ணாவின் தோளில் தட்டியது.

"சும்மாவா இருபதாயிரம்?"

"யப்பா!"

எல்லாரும், எல்லாரையும் புகழ்ந்து வெளியேறிய பின் குடும்பம் சாப்பிட உட்கார்ந்தது.

இலை போட்டு, பாயசம் ஊற்றினார்கள்.

"என்ன பாயசம்?" பெரியண்ணா.

"பால் பாயசம்."

"அம்மாவுக்கு ரொம்பப் பிடிக்கும்" - பெரியண்ணா.

"நான் ஒருதரம் போனப்போ கேட்டா, பால் பாயசம் செஞ்சு எடுத்துண்டு வாயேண்டா. சாப்பிடணும் போல இருக்குன்னா அம்மா" - சொல்லச் சொல்லக் குரல் கலங்கியது அவனுக்கு.

"செத்தாட்டு அவ ஆத்மா சாந்தி அடையணும்னு ஆயிரக்கணக்குல செலவு செஞ்சு தானதர்மம் செஞ்சோம். யார், யாருக்கோ சோறு போட்டோம். பெத்த வயிறு, அவளுக்கு உயிரோட இருக்கறப்போ ஒரு வாய் சோறு போடாம விட்டுட்டேன்" - உடைந்து போனான்.

வாயில் பால் பாயசம் வழிய அம்மா.... ஆ...ஆ.. என்று வாய்விட்டு அழுதான்.

அம்மாவின் வயிறு இப்போது நிறைந்திருக்கும் என்று தோன்றியது.



## "அழகாக இருந்தால் சண்டைபோடக் கூடாதா?"

குத்துச் சண்டை வீரர் முகமது அலியின் மகள் லைலா அலி, கிரிஸ்டினா கிங் என்ற அமெரிக்க போலீஸ் அணியைச் சேர்ந்த இன்னொரு வீராங்கனையைத் தோற்கடித்தார். இந்த பாக்ஸிங் பந்தயம் சைனாவில் நடந்தது.

சீனர்கள், பெண்கள் குத்துச் சண்டை போடுவதை ஏற்பதில்லை. சீன டெலிவிஷன் இந்தப் பந்தயத்தை நேரடி ஒளிபரப்புச் செய்ய மறுத்தது!

"அதனாலென்ன? எங்கே நடந்தாலும் போட்டி போட்டிதானே" என்கிறார் லைலா. "அப்பாவின் குத்துச் சண்டை தொழில் என்னைப் பெரிய அளவில் கவரவில்லை. அப்போதெல்லாம் நான் மிகவும் சிறியவள். இப்போது ஏதோ ஒன்று இந்தத் துறைக்கு என்னை ஈர்க்கிறது. எது என்று சொல்லத் தெரியவில்லை... அப்பா என்னை இந்தத் துறையில் ஊக்குவிக்கவில்லை; கஷ்டமான விளையாட்டு இல்லையா இது... ஆனால் நான் முடிவெடுத்துவிட்டேன். பெண்கள் குத்துச் சண்டை போடக் கூடாது என்று நிறைய பேர் எதிர்க்கிறார்கள். எங்களைப் போன்ற பெண்கள் ஆண் தன்மை கொண்டவர்கள் என்றும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் என்றும் அவதூறு பேசுகிறார்கள். 'அழகாக இருக்கிறாயே! உனக்கு ஏன் இந்த வேலை?' என்று கேட்பவர்களும் உண்டு. ஆனால் எனக்குக் குத்துச் சண்டை பிடித்திருக்கிறது..." - லைலா உறுதியாய்ச் சொல்கிறார்!

✉ சினிமா இசை திசை மாறி, பாரம்பரிய இசையின் பெருமையைப் பாழ் படுத்துகிறதே என்ற ஆதங்கத்தில் திரை இசைப் பாடகர் டி.எம்.சௌந்தராஜன் கூறி இருக்கும் ஒவ்வொரு வார்த்தையும் ஏற்றுக் கொள்ளும் வகையில்தான், இப்போதைய சினிமா பாடல்கள் அமைந்திருக்கின்றன.

விழுப்புரம்,
வை. வெங்கடேசன்.

✉ நாளிதழ்களில் செய்தியாக வந்தபோதே படித்து அதிர்ந்து போனேன். ('பலி கேட்கும் மருத்துவமனை'- கட்டுரை) தற்போது 'கல்கி'யில் படத் துடன் படிக்கும்போது மேலும் மேலும் அதிர்ச்சி! எல்லா அரசு மருத்துவமனைக்கும் ஒரு விசிட் அடியுங்கள் கல்கியாரே!

திண்டுக்கல்,
ஜனனி பார்கவி.

✉ 'முற்றும்' சிறுகதை நல்ல நிறைவைத் தந்தது. பா. ராகவனுக்குப் பாராட்டுக்கள்.

சாத்தியாகுளம்,
க. பாக்யமலர்.

✉ இந்தியாவின் கலாசாரக் கூறுகளை மூட நம்பிக்கையாய் உருவகப்படுத்தி விருதும், காசும் பண்ணுவதில் கைதேர்ந்த இந்திய - ஆங்கில எழுத்தாளர்கள் மத்தியில் கலாசார வேரைத் தேடி வரும் லாஹிரி முற்றிலும் வித்தியா சமானவர், பாராட்டுக்குரியவர்.

புனே, ரஜினி ராம்கி.



✉ தயாரிப் பாளரும் டைரக் டரும் 'சந்தித்த வேளை' சரியில்லை போலிருக்கிறது. படத்தை இந்த வாரு வாரியிருக்கிறீர்களே விமர்சனத்தில்!

பொன்மலை,
ஆர். பிரகாஷ்.

✉ 'கோர்ட்டுத் தீர்ப்பும் கோணல் அரசியலும்' தலையங்கம் படித்தேன். மூப்பனாரை அ.தி.மு.கவிலிருந்து கிளப்பிக் கொண்டு வர நீங்களும் அவ்வப்போது அவருக்கு உரைக்கிற மாதிரி எழுதுகிறீர்கள். ஆனால், அவரோ எதற்கும் அசைந்து கொடுக்கிறவர் மாதிரி தெரியவில்லை. மூப்பனாரைப் பொறுத்தவரை தலைக்கு மேல் வெள்ளம் போயாற்று. இனி சாண் என்ன, முழம் என்ன? கதைதான்.

மொரட்டுப்பாளையம்,
சு.நா. இராஜேஸ்வரன்.

# உறுதி, உயர்ந்த இடம்!

✉ காத்திருந்தால் வெற்றி கிடைக்கும் என்பதை விக்ரமின் பேட்டி மூலம் உணர முடிந்தது. ரசிகர்கள் பாராட்டையும், ரஜினி, கமலின் அன்பு கலந்த பாராட்டையும் விருதாக நினைக்கும் விக்ரம் பெரிய ஆள்தான். திரையுலகில் உயர்ந்த இடத்தைத் தொட்டு விடுவார் என்பது உறுதி!

தூத்துக்குடி,
எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ ரஜினி கிருஷ்ணனின் 'கை வந்த' கலையைப் பார்த்ததும் ஆச்சர்யமாக இருந்தது. அந்த யோகப் பெண்ணின் களிமண் சிலை மிக மிக தத்ரூபமாக இருந்தது.

பெங்களூர் - 16, அ. சங்கரன்.

## தங்கச்சங்கலி பரிசு!

இத்தொடர் கதையை வாரம் ஒரு எழுத்தாளர் என்று பத்து எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். கவனமாகப் படித்து வாருங்கள். கடைசி வாரத்தில் ஒரு கேள்வி உங்களுக்காகவே தயாராக இருக்கிறது. சரியாக பதிலளிப்பவர்களுக்குப் பரிசாகக் காத்திருக்கிறது தங்கச் சங்கிலி! பலர் சரியாக எழுதியிருந்தால் குலுக்கலில் ஒருவர்! பரிசளிப்பு விஷயத்தில் ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

# 5

நாலாவது கடிதம்.

மீண்டும் அதே பல்லவி, அனுபல்லவி, சரணங்கள்.

அன்பே, ஆருயிரே, அமுதமே, தேனே, மணியே, முத்தே (பக்கத்தில் ஒரு ஜோடி உதடுகள்) எல்லாம் அதனதன் இடத்தில் பொருந்தும்படி ஒரு கடிதக் காவியம். மங்களநாயகிக்கு மண்டை இடியே வந்துவிடும் போலிருந்தது.

இப்படி ஒரு பைத்தியமாக இருக்கிறானே? உருகி உருகி வழிகிறானே. மயங்கி மயங்கி பினாத்தல்களாகக் கடிதம் எழுதுகிறான்.

இவனை என்ன செய்தால் தேவலை?

உண்மையில் இது காதல்தானா?

அன்புவைக் கேட்டால், உதைக்கவே வருவான். கண்ணை, மூக்கை, வாயை மறைக்கும் காதல். எப்படி ஒப்புக்கொள்வாள்?

“தோழி, ஒரு சின்ன





விண்ணப்பம்'' என்றாள் மங்களநாயகி.

ஹாஸ்டலின் நடை யோடியில் பூங்காற்று பூசிக்கொண்டு நகர, தூரத்து வானில் வெண் மேகப் புரவிகள்.

''என்ன செய்தி சகியே?''

''ஒரு வேண்டுகோள்.''

''செப்பு கண்ணே!''

''உன் அன்பு மனங் கவர்ந்தவன் பற்றி ஒரு சிறு குறுக்கீடு''

''குறுக்கீடா?''

''ஆம்.''

''என்ன அது?''

''இன்றைய நாளில், ஆடவர்கள் பயங் கரமாய் ஆட்டம் ஆடுபவர்கள்.''

''இருக்கட்டும்.''

''தங்களது கண்ணாளனும் அப்படிப் பட்டவரா எனக் கேட்கும் துணிவு எனக் கில்லையெனினும், தங்களது ஆருயிர்த் தோழி என்பதால் கேட்காமலும் இருக்க முடியவில்லை.''

''ஏன் இவ்வளவு பீடிகை?''

''தங்கள் மனங்கவர்ந்தவரை நான் குறை காணவில்லை.''

''அப்போது குறை காண்கிறாய் என்பதுதானே பொருள்?''

''சினம் கொள்ள வேண்டாம் பெரு மாட்டி.''

''சினம் கொள்ளாதவாறு பேசு, பார்ப்போம்.''

''சரி, வேறு வகையில் இதை அணுகு வோம்.''


''எப்படி?''

''தங்கள் அசோக், தங்களுக்காக என்னவெல்லாம் செய்வார்?''


''ஆ! என்ன கேள்வி கேட்டாய். அசோக் எனக்காக என்னவும் செய்வார். புதிதாகக் கட்டப்படும் சிறு மேம்பாலங்களின் மேலிருந்து தலைகுப்புற குதிக்க வேண் டுமா? நடுக்கடல் திருவள்ளுவர் சிலையை 108முறை சுற்றி வர வேண்டுமா? காவிரியை யும் கிருஷ்ணாவையும் கொண்டு வர வேண்டுமா? முஷாரஃபின் மண்டையில் போட வேண்டுமா? சதாமைச் சதாய்க்க வேண்டுமா? இல்லை மாங்கு மாங்கென்று மெட்ரோ வாட்டரில் தண்ணீர் பிடித்து வர வேண்டுமா? எது வேண்டும்? சொல் சொல்:''

''தங்களை டீலில் விட்டு விடாமல், காப்பாற்றுவாரா?''

''என்ன, என்ன?''



சீதா ரவி



• கியூப உறவினர்களுடன் எலியன்

# 'எலி' பிடித்த அமெரிக்கா!

பசி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்பது போன்ற பெரிய பிரச்னைகள் அவ்வளவாக இல்லையென்றால் ஒரு வளமான நாடு என்ன செய்யும்? ஏதாவது ஒரு அக்கப்போரில் அகப்பட்டுக் கொண்டு கொஞ்ச நாள் அல்லாடுமோ? எலியன் விவகாரத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது.

எலியன் கோன்ஸலெஸ் ஆறு வயதுப் பையன். அவன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஒத்துப் போகவில்லை. பிரிந்து விட்டார்கள். எலியன் அம்மாவிடம் இருந்தான். கியூபாவில் வசித்து வந்தார்கள். கியூபா வாழ்க்கை பிடிக்காத சிலர் 'அமெரிக்கா போகலாம்' என்று ஒரு படகில் ரகசியமாக (நம்மூர் பாஷையில் சொல்வதானால் ஒரு கள்ளத் தோணியில்) கிளம்பினார்கள்.

அவர்களுடன் எலியனும் அவன் அம்மாவும் கிளம்பினார்கள். ஆனால் கரை சேரக் கொடுத்து வைக்கவில்லை. படகு கவிழ்ந்தது. கண் முன்னே அம்மா கடலுக்குள் மூழ்குவதைப் பார்த்துக் கொண்டே கடல் அலைகளில் சிக்கித் தவித்து ஒருவழியாகப் பிழைத்தவன் எலியன் மட்டுமே.

அவனை அமெரிக்க மீனவர்கள் காப்பாற்றி கரை சேர்த்த வினாடியே பிரச்னை ஆரம்பமாயிற்று.

எலியனை அமெரிக்காவில் இருக்கும் அவனது உறவினர்களிடம் ஒப்படைப்பதா? அல்லது கியூபாவில் இருக்கும் அப்பாவிடம் அனுப்பி வைப்பதா?

எப்போதுமே கியூபாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏழாம் பொருத்தம். பிரச்னை சூடுபிடிக்க இது போதாதா?

'எலியனை நாங்கள் கியூபாவுக்கு அனுப்ப மாட்டோம். நாங்களே அவனைச் சீராட்டிக் கொள்கிறோம்' என்று ஒரு பெரிய கும்பலே முன்வந்து கரம் நீட்டியது. இவர்கள் கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்கு வந்து 'லிட்டில் ஹவானா' என்ற இடத்தில் வசித்துக் கொண்டிருப்பவர்கள்.

'அதெல்லாம் முடியாது. நீ என்ன சீராட்டுவது! கியூபாவில்தான் எலியனின் அப்பா இருக்கிறார். அங்கே அனுப்பி வை' என்று கியூபாவில் ஒரே ஆர்ப்பாட்டம். க்யூபா அதிபர் காஸ்ட்ரோ அந்த ஆர்ப்பாட்டத்தை ஆதரித்தார்.

தன்னை மையமாக வைத்து இரண்டு நாடுகள் சண்டை போட்டுக் கொண்டிருப்பது தெரியாமல் எலியன் ஜாலியாக குட்டி

---

"மன்னிக்க வேண்டும் சகி."

"சே, இப்படியொரு கேள்வி பிறந்து விட்டதே. எங்கள் காதலின் மகிமையை எப்படி நான் செப்புவேன். ஐயகோ! காலமே, உனக்கு வாயிருக்குமானால், இச்சகியின் சந்தேகத்தைத் தீர்த்து வை. வானமே, உனக்கு மனசிருந்தால், இப் பாவையின் பார்வைக் கோளாறைச் சரி செய். இதம் தரும் காற்றே, தென்றலே, புயலே, உனக்கு நெஞ்சமிருந்தால், எங்கள் நெருக்கத்தின் அன்பை, இவளுக்கு விளக்கு. நான் எப்படி விளக்குவது! தெரியவில்லை!"

தலைவி அன்பு மனமொடிந்து, மதியிழந்து புலம்பத் தொடங்கிய கணம், மங்கள நாயகிக்கு மருந்தைத் தேடும் மார்க்கம் புலப்படவில்லை. எப்படித் தேற்றுவது?

தான் தவறிழைத்து விட்டோம். மிகப் பெரும் அநீதி! ஒரு அமரக் காதலைச் சந்தேகிக்கலாமா! சந்தேகித்தால் என்னவாகும் என்பதனை அன்பு நிரூபித்து விட்டாள். புயலெனவும், போரெனவும், வெள்ளமெனவும் பொங்கிய அவளது சீற்றத்தை மங்களத்தால் தாங்க முடியவில்லை.

"தோழி! உன் ஐயம் நியாயமாகவும் இருக்கலாம். என் தலைவன் அப்படிப்பட்டவனல்ல. அவனது மனத் தூய்மைக்கு இணையே கிடையாது. வெண்மையிலும் அழுக்குண்டு. பளிங்கிலும் பாதிப்பு உண்டு. அசோக்கோ, ஆகாயம். நிர்மலன். நித்தியன். நிரந்தரன். நிகரற்றவன். நீலமேகன். உன் சந்தேகப் பார்வையும், பாதையும் மாற்றிக் கொள். அதுதான் உனக்கு அழகு. உன்னோடு நான் தொடர்ந்து நட்பு பாராட்டவும் அதுவே அழகு. இல்லையேல் டுமீல். ஓடிப் போ நாயே!"

இந்த நீண்ட உரையாடலை (நாகரிகம்



சைக்கிள் ஓட்டிக் கொண்டு, விரும்பியதையெல்லாம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தான்.

அமெரிக்க கோர்ட்டில் வழக்கும் பதிவாகி நடந்து கொண்டிருக்கிறது.

இதற்கிடையில் எலியும் பூனையுமாக இருந்தாலும் எலியனின் அப்பா அமெரிக்காவுக்கு வர, கிளின்டன் அரசு ஸ்பெஷல் விசா வழங்கியது.

அப்பா தன் இரண்டாவது மனைவி, மகனுடன் வாஷிங்டன் வந்து சேர்ந்தார். பையன் இருப்பதோ மயாமி பக்கம். லிட்டில் ஹவானா பகுதி மக்களின் அரவணைப்பில் அவன் இருந்தான். வீட்டைச் சுற்றி 'ஷிப்டு' போட்டுக் கொண்டு அங்கே வசிக்கும் முன்னாள் கியூபாக்காரர்கள் காவல் இருந்தார்கள். கதை முடிகிறாற்போல இல்லை.

ஏப்ரல் 22ம் தேதி. அதிகாலை. யாருமே எதிர்பாராத வகையில் அமெரிக்க அதிரடி வீரர்கள் லிட்டில் ஹவானாவில் எலியன் இருந்த வீட்டுக்குள் மின்னலாய்ப் புகுந்தார்கள். உறவினர் கையிலிருந்து எலியனைப் பிடுங்கி அதே மின்னல் வேகத்தில் காரில் பாய்ந்து வாஷிங்டனில் தங்கியிருந்த அவனது அப்பாவின் கையில் ஒப்படைத்துவிட்டார்கள்.

'அப்படி வா வழிக்கு' என்று காஸ்ட்ரோவுக்கும் கொஞ்சம் சந்தோஷம்.

எலியன் விவகாரத்தில் கியூபா – அமெரிக்கா பகை கொஞ்சமாவது குறையுமா என்பதுதான் இருதரப்பு நலன் விரும்பிகளின் பிரதான எதிர்பார்ப்பு.

— ஆரெம்

சுருதி நயத் தமிழில் எழுதியது. அவர்கள் பேச்சு அச்சுக்கு ஆகாது!) முடித்து, இருவரும் அறைக்குத் திரும்பியதும், ஒரு ஹைட்ரஜன் குண்டு, பேரனத்திலிருந்து வந்து சேர்ந்தது அன்புவுக்கு. அப்பாவிடமிருந்து (அவசரத்தில் ஸ்டாம்பு ஒட்டாத) ஒரு கடிதம்.

ட்யூ அழுது, வாங்கிப் பிரித்தவள் ஆடிப் போனாள்.

'நாயே' என்று அன்பாகத் தொடங்கியிருந்தார், சன்றபொழுதில் பெரிதுவந்தவர்.

"யாரையோ லவ்வறியாமே? மொட்டைக் கடுதாசி வந்திருக்குது பாரு. ஜெராக்ஸ் அனுப்பியிருக்கேன். சோமாறி, எட்டாங்கிளாஸ் பெயிலானவன் எழுதற மாதிரி எப்படி எழுதியிருக்கான் பாரு. நீ படிக்கப் போனியா? டாவடிக்கப் போனியா?" – இப்படியாக அது நீளவும், கதி கலங்கிப் போன அன்பு, மறுநாள் பாத்ரூமில் அசோக் வீசியிருந்த கடிதப் பந்தைப் பார்த்ததும் மேலும் கலங்கினாள்.

அவனுக்கும் அவனப்பாவிடமிருந்து கடிதமாம்! கூடவே ஸேம் ஜெராக்ஸ் மொட்டைக் கடிதம் அல்லது கடித மொட்டை ஜெராக்ஸ்!

"நான் சந்தேகப்பட்டுக் கோவிந்தை விசாரிச்சேன். சாஷ்டாங்கமா கால்ல விழுந்து, 'நானில்லை'ன்னு சாதிக்கறான் அன்பு!" என்று கடிதத்திலேயே கண்ணீர் விட்டிருந்தான் அசோக்.

பல்லை நறநறகரகரத்தபடி அன்பு, மங்குனை பெண்டு கழற்ற, அவள் ஒரு கண்ணீர்க் காவியமே பாடி, தானும் இல்லை என்று சொன்னாள்.

"ஐயோ, அசோக்! யார் நம்ம எதிரி?"

அடுத்த சந்திப்பில் அழுதபடியே கேட்டாள் அன்பு.

"அதுவா முக்கியம்? அப்பனுங்களை முதல்ல சரிக்கட்டணும். நான் யாரையும் காதலிக்கலை. ஓகேவா?"

"பாவி!"

"சும்மா உளுளுவா கட்டிக்கு!"

"சரி, நானும் யாரையும் காதலிக்கலை!"

"எங்கிட்ட சொல்லாத. என் பேரனத்து மாமனாருக்கு எழுது!" என்றான் அசோக்.

(தொடரும்)



**அக்னி நட்சத்திரம் ஆரம்பித்து, வெயில் மண்டையைப் பிளக்கிறது. இதிலிருந்து தப்பிப்பது எப்படி? சில எளிய டிப்ஸ் கொடுக்கிறார் பிரபல சித்த மருத்துவர் மூலிகை மணி வேங்கடேசன்:**

● வெயில் காலத்தில் உடலில் உஷ்ண பாதிப்பு அதிகம் இருக்கும். நீராகாரத்தில் சிறிய வெங்காயத்தை நறுக்கிப் போட்டு, சாதத்தையும் நன்கு பிசைந்து, இரண்டு, மூன்று தம்ளர் அடித்தால், மிகவும் நல்லது. வெங்காயம் இல்லையெனில் காய்ந்த நார்த்தங்காய் ஓ.கே.

● குழந்தைகளுக்கு, அதுவும் கைக்குழந்தைகளுக்கு சாதாரண மல் துணியில் தைத்த எளிமையான உடைதான் பெஸ்ட். வியர்வையை உறிஞ்சி, எரிச்சலைத் தடுக்கும். மார்பிலும் முதுகிலும், நிறைய சந்தனம் தடவினால் (கட்டையில் அரைத்த சந்தனம்) வியர்க்குருவிலிருந்து தப்பிக்கலாம்.

● புழுங்கல் அரிசி நொய்யில் கஞ்சி தயாரித்து அதில் மோரும், தண்ணீரும் விட்டு, கொஞ்சம் போல சீரகப் பொடி கலந்து குடித்தால், உடல் சூடு தணியும்.

● இந்தக் கோடையில் வெஜிடேரியன்கள் கத்தரிக்காயையும், அசைவக்காரர்கள் பொதுவாகவே நான் - வெஜ் ஐட்டங்களையும் (முக்கியமாக, கோழியைத்) தவிர்க்க வேண்டும். பீர்க்கங்காயில் கூட்டு செய்து சாப்பிடுங்கள்.

● சிறிய வெங்காயம் + கேரட் சாலட் ரொம்ப நல்லது.

● ஒரு பிடி பொட்டுக்கடலை, இருபது ஏலக்காய், மூணு ஸ்பூன் சர்க்கரை இவற்றை மிக்ஸியில் போட்டு, மாவாக்கி வைத்

# ஜில்ஜில்லென...

துக்கொண்டு தினம் மூணு வேளை, ஒரு ஸ்பூன் சாப்பிடலாம். மலக்குடல் ரணம், மலச்சிக்கல் போன்ற பிரச்னைகளைத் தடுக்க இது நல்லது.

● சாம்பிராணி பவுடரைப் போட்டுக் காய்ச்சிய நல்லெண்ணெயைத் தலைக்கு வைத்துக்கொண்டு, அரை மணி நேரம் நன்கு ஊறிய பின் குளித்தால், நல்ல குளிர்ச்சியாக இருக்கும்; மூலச்சூடு உஷ்ணம் தணியும்.

● அரைக்கிலோ வெட்டிவேர், நூறு கிராம் வெந்தயம், கால் கிலோ கிச்சிலிக் கிழங்கு, கால் கிலோ நன்னாரி, கால்கிலோ சந்தனச் சக்கையை அரவை மிஷினில் கொடுத்து மாவு அரைத்து ஒரு பக்கெட் தண்ணீரில் தினம் ஐந்து ஸ்பூன் போட்டு, நன்கு கரைந்த பின் குளிக்கலாம். அல்லது சோப்புக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம்.

● இரவு ஒரு தம்ளர் தண்ணீரில் ஐந்து ஏலக்காயைப் போட்டு, இரவு முழுக்க ஊறிய பின், காலை, வெறும் வயிற்றில் குடித்தால் கண் எரிச்சல் வராது.

● கேழ்வரகு மாவில் கூழ் செய்து, மோர் ஊற்றி சிறு மாங்காய்த் துண்டுகளையும், வெங்காயத் துண்டுகளையும் போட்டு, நன்கு கலந்து, இரண்டு தம்ளர் குடித்தால் வெயிலுக்கு இதமாக இருக்கும்.

● இரவில், காற்றோட்டமில்லாமல் தூக்கம் வர சிரமப்படுகிறபோது மருதாணிப் பூவை ஒரு பையில் போட்டு, தலையணை மீது பரப்பி வைத்து, அதிலே தலை வைத்துத் தூங்கினால், நிம்மதியாய்த் தூக்கம் வரும்.

தொகுப்பு: பாரதி





• ஸ்ரீராம்-சுரேஷ்

# தொலைபேசியே தூரப்போ!

சாதாரணமாக இன்டர்நெட் இணைப்புப் பெற, அரசு நிறுவனமான வி.எஸ்.என்.எல், அல்லது இன்டர்நெட் சர்வீஸ் புரொவைடர் லைசென்ஸ் வைத்திருக்கும் சத்யம் இன்போவே, டிஷ்நெட் போன்ற தனியார் நிறுவனங்களை அணுக வேண்டும். அவர்களும் டெபாசிட்டாக ஒரு தொகையை வாங்கிக்கொண்டு, இணைய இணைப்பைத் தரும் மோடத்தையும், தேவையான போது இணையத்தைப் பயன்படுத்தும் ரகசிய எண்ணையும் தருவார்கள். இணைப்புப் பெற்றவர்கள் தங்களது தொலைபேசி இணைப்பையும், கம்ப்யூட்டரையும் மோடத்துடன் இணைத்தால் இன்டர்நெட்டின் உள்ளே நுழைய வாசல் ரெடி! இதுதான் தொலைபேசி மூலமாக இன்டர்நெட் இணைப்புப் பெறும் முறை. இந்த முறையைத் தூக்கிப் போட்டுவிட்டு, தொலைபேசி இல்லாமலேயே இன்டர்நெட் இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்து, 'இந்திய இன்டர்நெட் வரலாற்றில் முதன்முறையாக' என்ற இமேஜை சம்பாதித்திருக்கிறார்கள் சென்னையில் 'சைபர்வேவ்' என்ற நிறுவனத்தை நடத்திவரும் ஹைடெக் கில்லாடிகள்.

"கேபிள் மோடம் என்ற சிஸ்டம்தான் எங்களுடையது. நீங்கள் ஏற்கெனவே கேபிள் டீ.வி கனெக்ஷன் வெச்சிருந்தாலோ, அல்லது புதுசா வாங்கினாலோ, நாங்க இன்டர்நெட் கனெக்ஷன் தர்றோம். இந்த கேபிள் டீ.வி ஒயர்களை கோ-எக்ஸசல் ஒயர்னு சொல்றோம். இந்த கேபிள் டீ.வி ஒயரோடு, நாங்க கொடுக்கும் மோடத்தை இணைச்சு, மோடத்திலிருந்து மற்றொரு ஒயரை கம்ப்யூட்டரோடு இணைச்

சுக்கணும். பிறகு நீங்க விரும்பிய இணையத் தளத்தோடு தொடர்பு கொள்ளலாம்! இணையத்தை நீங்க பயன்படுத்தும்போதே டீ.வி.யிலும் நீங்க விரும்பிய நிகழ்ச்சியைப் பார்த்து ரசிக்கலாம்'' என்கிறார்கள் இந்த நிறுவனத்தின் இயக்குனர்கள் ஸ்ரீராம், சுரேஷ்.

"சன் டீ.வியும், எம்.டி.எல் என்ற நிறுவனமும் இணைந்து தொலைக்காட்சிப் பெட்டியிலேயே இணையத்தை அணுகவும், பயன்படுத்தவும் திட்டம் போட்டார்களே, அதற்கும் உங்கள் நிறுவனத்தின் முறைக்கும் வித்தியாசம் உண்டா?"

''அவங்க சிஸ்டம் என்ன என்பதை இதுவரைக்கும் சொல்லலே. கேபிள் மோடம் மூலமா, டெலிபோன் உதவியோட டயல்அப் செய்து டீ.வி பெட்டியிலேயே இணையத்தைப் பார்ப்பதற்கு 'செட் ஆஃப் பாக்ஸ்' என்று சொல்கிறோம். கம்ப்யூட்டர் திரைகளுடன் ஒப்பிடும்போது டீ.வி பெட்டி திரைகளின் தரம் (ரெஸல்யூஷன்) ரொம்பவும் குறைவு. இதனால் நெட்டில் உள்ள உருவங்களும் எழுத்துகளும் தெளிவாக, தரமாக இருக்காது. இதில் இருக்கும் மிகப் பெரிய குறை, தேவையான தகவல்களை டவுன்லோட் செய்ய முடியாது. பார்க்கலாம்; அவ்வளவுதான்!'' என்றவரை இணையத்தில் கிடைக்கும் அத்தனை வசதிகளும் உங்கள் கேபிள் மோடம் மூலம் கிடைக்குமா என்று மடக்கினோம்.

"இணையத் தளங்களோடு தொடர்பு கொள்ளுதல், அதனைப் பார்வை இடுதல், ஈமெயிலில் கடிதம் அனுப்பி, பெறுதல், தகவல்களை இறக்கி அவற்றை பிரிண்ட் அவுட் எடுத்தல் என எல்லாமே சாத்தியம்"

''தொலைபேசி மூலம் உள்ள இணைப்புகளில், இணையத் தளங்களோடு தொடர்பு கொள்வதில் வேகம் குறைவாக உள்ளது என்ற குறை இருந்து வருகிறதே, கேபிள் டீ.வி ஒயர் மூலம் மட்டும் என்ன பெரிய வேகம் கிடைத்து விடப் போகிறது?''

"நீங்கள் சொல்லும் டயலப் முறையில் அறுபத்தி நான்கு கே.பி.பி.எஸ் (KPbs) வேகம் தான் கிடைக்கிறது. ஆனால் 'கேபிள் மோடம்' முறையில் பத்தாயிரம் கேபிபிஎஸ் வரை கிடைக்கும். இதை அறுபதாயிரமாக உயர்த்துவது கூடச் சுலபம்."

"தொலைபேசி மூலம் இணைப்பு வழங்குபவர்களுக்கும் உங்களுக்கும் கட்டண விகிதத்தில் என்ன வித்தியாசம்?''

''தொலைபேசி முறையில் தொலைபேசி கட்டணமும் சேர்த்து ஒரு மணிக்குக் குறைந்த பட்சம் முப்பது ரூபாய் வசூலிக்கிறார்கள். எங்களுடைய இணைப்புக்கு மூன்று மாதத்திற்கு 3250 ரூபாயோ வருடத்திற்கு 12000/- ரூபாயோ கட்டிவிட்டால் இருபத்து நான்கு மணிநேரமும் பயன்படுத்தலாம்! எங்கள் கணக்குப்படி ஒரு மணி நேரத்திற்கு ஒரு ரூபாய் முப்பத்தேழு காசு தான் வருகிறது. இப்போதைக்கு சென்னையில் நந்தனம், ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர், மந்தைவெளி, ஆர்.ஏ.புரம், தேனாம்பேட்டை பகுதிகளில் எங்கள் இணைப்பு கிடைக்கிறது. இந்த வருட இறுதிக்குள் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்துவதோடு, இந்தியாவில் உள்ள அறுபது முக்கிய நகரங்களிலும் கேபிள் மோடம் மூலம் இணைப்பு வழங்கப் போகிறோம்!''

**— ஆர்.சி. ஜெயந்தன்**

படம்: **வெங்கடேஷ்**



**ப**ல்வேறு டிசைன்களிலும் புடைவைகள் வந்திருக்கின்றன என்றாலும், மும்பையைச் சேர்ந்த ரீசாகான். டிசைன் செய்துள்ள புடைவைகள் மிக வித்தியாசமாக உள்ளன. இவர் உருவாக்கியுள்ள புடைவைகளில், உலகப் புகழ்பெற்ற ஓவியர் எம்.எஃப். உசைனின் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. ''இதுவரை சுவரில் அசையாதிருந்த உசைனின் ஓவியங்கள், புடைவையில் இடம் பெறுவதால், இனி புதுப்பரிமாணம் பெற்று நகரப் போகின்றன'' என்கிறார் ரீசாகான்! ரீசா, எம்.எஃப். உசைனின் மகள்.

— எம்.

வி.ஐ.பி விருப்பம்

# டீச்சர் சுப்புலட்சுமி!



ஈரோடு மாவட்டம் கொடுமுடிக்கு அருகில் உள்ள வடக்குப் புதுப்பாளையம்தான் எங்கள் கிராமம். உள்ளூர் பள்ளியில் படிக்கும்போதும் சரி; பின்னர் கொடுமுடியில் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதும் சரி, என் கனவு 'டாக்டராக வேண்டும்' என்பதுதான். அப்பா சின்னசாமி கவுண்டர், காமராஜ் அவர்களின் நண்பர்; முற்போக்குவாதி. எங்கள் கிராமத்திலிருந்து முதல்முறையாக கல்லூரி சென்ற பெண் நான்தான். திருச்சி சீதாலட்சுமி கல்லூரியில் பி.யு.ஸியில் விஞ்ஞானப் பிரிவு எடுத்துப் படித்தேன். ஆனால் என் துரதிருஷ்டம், தேவையான மதிப்பெண்கள் எடுக்காததால் மருத்துவக் கல்லூரியில் சேரும் தகுதியை இழந்தேன்.

கல்லூரியில் என்.சி.சி.யில் இருந்தேன். மிகத் தீவிரமாக என்.சி.சி.யில் பங்கு கொண்டு ஸீனியர் அண்டர் ஆபீஸராகப் பொறுப்புக்கு வந்தேன். தில்லியில் குடியரசு நாள் அணிவகுப்பில் கலந்துகொண்டு பரிசும் பெற்றேன். டாக்டர் ஆசை நிறைவேறாத நிலையில், ராணுவத்திலாவது சேர்ந்து விடுவது என்று என் விருப்பத்தை வீட்டில் தெரிவித்தேன். ஆனால் வீட்டில் தயக்கம்.

"பேசாம ஆசிரியர் பயிற்சி பெற்று விடு. நம்ம கிராமத்துப் பள்ளியில் (உறவுக்காரர் நடத்தி வந்தது) டீச்சராகி விடலாம்" என்று சொல்லி விட்டார் அப்பா. அப்பா சொல்லைத் தட்டாமல் டீச்சராகி விட்டேன். இப்படியாக என் இரண்டு ஆசைகளும் நிறைவேறாமல் போய்விட்டன. அதில் ஏதாவது ஒன்று ஓ.கே ஆகியிருந்தால்கூட, அரசியலுக்கு வந்திருப்பேனா என்பது சந்தேகமே!

அரசியலுக்கு வந்தபின் இன்றைய இளைஞர்களைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தேன். பி.எஸ்ஸி (அக்ரி) படித்த இளைஞன்கூட இன்று வேலை தேடுகிறானே தவிர, சொந்தத் தோட்டத்தில் வேலை செய்ய விரும்புவதில்லை. ஆளும் கட்சி அரசியல்வாதியாக இருப்பதால் என்னைச் சந்திக்கும் படித்த இளைஞர்கள் 'பியூன் வேலையாவது வாங்கிக் கொடுங்க' என்கிறார்கள். சுய வேலை வாய்ப்பைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை. எனவே ப்ளஸ் டூ படிக்கும்போது அவரவருக்குப் பிடித்த தொழிற்கல்வியையும் மாலை வேளைகளில் கற்றுக் கொடுத்தால் ப்ளஸ் டூ முடித்தபின் சுய வேலை வாய்ப்புக்கு உதவியாக இருக்கும் என்பது என் ஆசை.

சந்திப்பு: **ரமா**

படம்: **ராஜன்**

# குறையொன்றுமில்லை

68

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

**பா**கவத ஆராதனச் சிறப்பைச் சொல்வேன். சுவாமிதேசிகன் அதைப் பற்றி ரகசிய ரத்னாவளி என்கிற நூலிலே சொல்கிறார். ஏழை எளியவர்கள் கூட உயர்ந்த விஷயங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் எத்தனையோ கிரந்தங்களை ஏற்படுத்தினார். அதிலே ரகசிய ரத்னாவளி ஹ்ருதயம் என்பதிலே பகவத் ஆராதனம் குறித்துச் சொல்கிறார். பகவத் ஆராதனம் - பாகவத ஆராதனம் இரண்டும் சேர்ந்து வரும் பொழுது, பகவத் ஆராதனத்தை விட்டு, பாகவத ஆராதனமே உயர்ந்தது என்கிறார்.

அழகான விஷயம் இது. பகவத் ஆராதனம், பாகவத ஆராதனம் இரண்டுமே ஒரே காலத்தில் பண்ண வேண்டி வந்துவிட்டதானால் பகவத் ஆராதனத்தை நிறுத்திவிடு என்கிறார் அவர்! பாகவதோத்தமர்களுடைய ஆராதனம்தான் முக்கியம்!

வாசலில் ஒரு பாகவதோத்தமர் வந்து நிற்கிறார். உள்ளே ஒருத்தர் விஷ்ணு ஆராதனம்தான் பண்ணிக் கொண்டிருக்கிறார். சாளக்கிராம திருமஞ்சனம் நடந்து கொண்டிருக்கிறது. அவரை - பாகவதோத்தமரை - வாசலிலேயே நிற்க வைத்துவிட்டு இவர் ஆராதனம் பண்ணிக் கொண்டிருந்தால் மகா அபசாரம்! பகவான் அதை ஏற்க மாட்டான். ஆகையினாலே அதை நிறுத்திவிடு! - பகவத் ஆராதனத்தை நிறுத்தி விடு. அப்புறம் பண்ணிக் கொள்ளலாம். பாகவதோத்தமர்களை வாசலில் நிற்க வைக்கலாமா?... மகா பாபமில்லையா? பகவத் பக்தர்களிடம் அபசாரப்படலாமா? பகவானுக்கு அது பிடிக்கவே பிடிக்காது.

பாகவத ஆராதனம்தான் உபாதேயதமம்.

உபாதேயதமம் என்றால் நாம் பண்ண வேண்டிய காரியங்களிலேயே உயர்த்தியானது என்று அர்த்தம்.

இப்படிப் பல விஷயங்களைச் சொல்கிறார் சுவாமி தேசிகன். சாண்டில்ய ஸ்ம்ருதியிலிருந்து ஒரு விஷயம் எடுத்துச் சொல்கிறார்.

பகவான் விஷ்ணுவினுடைய ஆராதனம் இருக்கிறதே! அது மிகவும் உயர்ந்தது. அதைக் காட்டிலும் உயர்ந்தது ஒன்று உண்டோ என்றால், விஷ்ணுவினுடைய ஆராதனம் பரம்; ததீயாராதனம் பரதரம்! பரதரம் என்றால் அதைக் காட்டிலும் உயர்ந்தது - மேம்பட்டது என்று அர்த்தம்.

அதனால்தான் பாஷ்யகாரர் ராமானுஜர் சொல்கிறபோது பகவானிடத்திலே பிரார்த்திக்கிறார் :

" 'க்ஷமஸ்வ!' - மன்னித்தருள். மிகவும் சகிக்க முடியாத அபசாரங்களெல்லாம் பண்ணியிருக்கிறேன்; பண்ணிக் கொண்டிருக்கிறேன்; பண்ணப் போகிறேன். இதிலே பகவத் அபசாரம், பாகவத அபசாரம் எல்லாம் உண்டு. பகவத் அபசாரத்தைக் காட்டிலும் ரொம்பக் கொடியது பாகவதாபசாரம்" என்கிறார்.

பகவானிடத்திலே கூட அபசாரப்படலாம். ஆனால் பாகவதோத்தமர்களிடம்



அபசாரப்பட்டால் பகவானே சகிக்க மாட்டான்.

இரண்டுக்கும் வித்தியாசம் என்னவென்றால் பகவானிடத்திலே அபசாரப்பட்டோமானால் பகவத் பக்தர்களின் திருவடியைப் பற்றிக்கொண்டால் அது போய்விடும். பாகவதோத்தமர்களிடம் அபசாரப்பட்டால் எங்கு சென்றாலும் அது போகாது! எந்த பாகவதோத்தமருடைய திருவடிக்கு நாம் அபசாரம் பண்ணினோமோ அவர் திருவடியைப் பிடித்துக் கொண்டால்தான் அது போகும். வேறு எங்கு போய் வேண்டினாலும் அது போகாது. இதை நாம் நன்றாகப் பார்க்கலாம்.

சுக்ரீவன், ராமனிடத்திலே அபசாரப்பட்டான். குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. சுக்ரீவன், லக்ஷ்மணனுடைய திருவடியிலே தான் அபசாரத்தைப் போக்கிக் கொண்டான். அதன் பிறகு அவன் பகவானுக்கெதிரிலே வருகிறான். பகவானும் உடனே அனுக்கிரஹம் பண்ணி விட்டான். சுக்ரீவனைப் பார்த்து, 'நீ ஏன் இத்தனை நாள் வரவில்லை?' என்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. ஆனால், சுக்ரீவனைக் குளிர கடாக்ஷித்து விட்டான். அவன் பட்ட அபசாரம் லக்ஷ்மணனுடைய திருவடியை ஆச்ரயித்ததனாலே போய்விட்டது!

துர்வாஸ மஹரிஷி பரம ஞானி. என்ன அவரிடம் ஒரு பெருமை என்றால், அவர் சாபம் கொடுக்கக் கொடுக்க தபஸ் விருத்தியாகும்! வேகமாக சாபம் கொடுத்துவிடுவார் அவர்!

அப்படிப்பட்ட துர்வாச மஹரிஷி, அம்பரீஷ சக்ரவர்த்தியைப் படாதபாடு படுத்தி விட்டார். கார்த்திகை மாதம் துவாதசி அன்றைக்கு ஒரு வருட விரதத்தை முடிக்கப் போகிறான் அவன். அந்தச் சமயம் பார்த்து துர்வாசர் வருகிறார். இன்னும் அரைமணி நேரம்தான் இருக்கிறது துவாதசி முடிவதற்கு....

ஏகாதசி விரதத்துக்கும் துவாதசி விரதத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஏகாதசி விரதம் முடிந்து பாரணை பண்ணுகிறபோது துவாதசி திதியிருக்கிறதா என்று கவனிக்க வேண்டியதில்லை. துவாதசி கடந்து போய் விட்டு அடுத்த திதியான திரயோதசி வந்துவிட்டாலும் பரவாயில்லை.

ஆனால் துவாதசி விரதம் இருக்கிறவர்கள் துவாதசி திதி முடிவதற்குள்ளாகவே பாரணை பண்ண வேண்டும் – சாப்பிட வேண்டும். இல்லையானால் துவாதசி விரதம் முடியாது.

இந்த துர்வாச மஹரிஷி என்ன பண்ணினார்... பரீக்ஷை பண்ணுவதற்காகவே ஒரு காரியம்.

எல்லோரும் சாப்பிட்டு முடித்தாயிற்று. அம்பரீஷ சக்ரவர்த்தி மட்டும்தான் சாப்பிட வேண்டும். அவன் பத்னியை அழைத்துக் கொண்டு சாப்பிடுவதற்காக உள்ளே போகிறான். அரை மணி காலம்தான் இருக்கிறது. துவாதசி போய் திரயோதசி வந்துவிடும்.

இந்த துர்வாச மஹரிஷி வெறுமே வரமாட்டார். பகவானுக்கிருக்கிற சில குணங்கள் அவருக்கும் இருப்பதனாலே அவனைச் சோதிக்கிறார். "என்ன அம்பரீஷ சக்ரவர்த்தே! விசேஷமா துவாதசி விரதமெல்லாம் நடக்கிறார்போல் இருக்கிறதே...?" என்கிறார்.

இன்னொருத்தராக இருந்தால் அந்தச் சமயத்தில், 'இன்னும் அரைமணி காலம் தானே இருக்கிறது. இப்போது இவர் ஏன் வந்தார்?' என்று தோன்றியிருக்கும். ஆனால் அம்பரீஷன் அவரைப் பார்த்து விசேஷமாகப் பிரார்த்திக்கிறான்.

"இன்றைய தினம் ஜன்மா சபலமாயிற்று. சீக்கிரம் தாங்கள் வந்து அமுது செய்து என்னை அனுக்கிரஹிக்க வேண்டும். நல்ல நாள், நீங்கள் வந்துள்ள இந்த நாள். நான் கொடுத்து வைத்திருக்கிறேனே. தாங்கள் வந்தீர்களே!" என்று ஏகமாக அவரை ஸ்தோத்திரம் பண்ணுகிறான்.

அவர் என்ன சொல்கிறார்...? "நான் இன்னும் ஸ்நானமே பண்ணவில்லையே! நான் போய் யமுனையிலே ஸ்நானம் பண்ணிவிட்டு வருகிறேன்" என்று போய் விட்டார்.

எப்படிப் போகிறார் துர்வாசர்...?

அரண்மனையிலிருந்து யமுனா நதி

## அருள்வாக்கு

நம்முடைய வீட்டு வேலைக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு ஸ்வல்ப சம்பளம் கொடுத்து வருகிறோம். வேறு புது வேலைக்காரன் வந்தால் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டும். நமது வேலைக்காரன், மேலே பரீக்ஷைகளில் பாஸ் பண்ணி, வேறு வேலைக்குப் போய் விருத்தியாக எண்ணுகிறான். பரீக்ஷைக்குப் போகிறான். நாம் அவன் பரீக்ஷையில் தேறவேண்டுமென்று நினைப்போமோ? மாட்டோம். தேறக் கூடாதென்றுதான் நினைப்போம். தேறிவிட்டால், அவனுக்குக் கௌரவம் வந்துவிடும்; வேறு வேலைக்குப் போய் விடுவான். அவன் போய்விட்டால், அவனைப் போல் ஸ்வல்ப சம்பளத்தில் ஒரு வேலைக்காரனும் நமக்குக் கிடைக்க மாட்டான். இதைப் போலத்தான் இங்கேயும் இருக்கிறது. மநுஷ்யன் ஞானியாக உயர்ந்து தங்கள் உபாஸனையை விட்டு விடுவது தேவர்களுக்குப் பிடித்தமில்லை.



ஞானி தேவர்களுக்குப் பிரியமில்லாதவன் என்றால் ஞானியாக இல்லாதவன்தான் அவர்

ளுக்குப் பிரியன் என்றாகிவிடுகிறது. ஆகையால் தேவர்களுக்குப் பிரியமானவன் அஞ்ஞானி, அறியாதவன் என்றாகிறது. அதனால் தான், மூர்க்கன் என்பதற்கே 'தேவனாம் ப்ரியன்', அதாவது, தேவர்களுக்குப் பிரியமானவன் என்று வியாகரணத்தில் இன்னொரு பெயர் கொடுத்திருக்கிறது. இந்தப் பெயருக்கு உபநிஷத்தில் மூலம் இருக்கிறது.

சங்கர பகவத்பாதாள், பிரம்ம ஸூத்ர பாஷ்யத்தில் ஒரு இடத்தில், பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு என்று நினைக்கிற ஒருவனுக்குப் பதில் சொல்ல ஆரம்பிக்கையில், முதலில், ''நீ என்ன ரொம்ப அசடாயிருக்கிறாயே!'' என்று சொல்லுகிறார். அங்கே ''தேவானாம் ப்ரியனாக இருக்கிறாயே!'' என்று சொல்லுகிறார். (இதம் தாவத்தேவனாம் ப்ரிய ப்ரஷ்டவ்ய)

தேவர்களுக்குப் பிரியமானவன்- ''தேவனாம் பிரியன்''- என்ற பெயரைக் கேட்டால், ஏதோ பெரிய டைட்டில் மாதிரித் தோன்றுகிறது. ஆனால், அதற்கு நிஜ அர்த்தத்தைப் பார்த்தால் 'அசடு' என்று இருக்கிறது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

எவ்வளவு தூரம் என்று இவரை யாராவது அளவு எடுக்கச் சொன்னார்களா...? அந்த மாதிரி மெதுவாக, அடி மேல் அடி வைத்து, நிதானமாகப் போகிறார். போய், அகமர்ஷ சூக்தம் என்று பெயர் - நதிகளிலெல்லாம் ஸ்நானம் பண்ணுகிற போது இந்த சூக்தத்தைச் சொல்லிப் பெரியோர்கள் ஸ்நானம் பண்ணப் பார்க்கலாம். அகம் என்றால் பாபம். பாபத்தைப் போக்கக்கூடிய சூக்தம். ரொம்ப அழகான மந்திரம் அது. அதைச் சொல்லிக் கொண்டு நிதானமாக ஸ்நானம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

இந்த மாதிரி பண்ணக்கூடியவர் அல்ல துர்வாச மஹரிஷி. ஆனால் அம்பரீஷன் என்னதான் பண்ணுகிறான் என்று பார்ப்பதற்காகவே பண்ணுகிறார்.

தர்மசங்கடமாகப் போய்விட்டது அம்பரீஷனுக்கு. என்ன பண்ணுவதென்றே தெரியவில்லை. குலகுரு வசிஷ்டரைப் பார்த்துக் கேட்கிறான் :

"நான் என்ன பண்ணுவேன்...? பாரணை பண்ண வேண்டும்! நாழியாகி விட்டதே!''

உடனே வசிஷ்டர் ஒரு தர்மத்தைச் சொல்கிறார் :

''வேதத்தில் ஒரு வாக்யம் வருகிறது. சாளக்கிராம ஆராதனம் ரொம்ப விசேஷம் என்பதாக. விக்ரஹ ஆராதனத்துக்கெல்லாம் பல நியமங்கள். ரொம்ப ஜாக்கிரதையாகப் பண்ண வேண்டும். தப்பு நேர்ந்து விட்டால் பல கெடுதல்கள் ஏற்படும். ஆனால் சாளக்கிராமம் சௌலப்ய மூர்த்தி. சாளக்கிராம அபிஷேகம் - திருமஞ்சனம் - பண்ணிய தீர்த்தம் இருக்கிறது பாருங்கள், திருத்துழாய்த் தீர்த்தம் - அதைப் பிராசனம் பண்ணினால் பாரணை பண்ணிய பலன் கிடைக்கும் நமக்கு. துவாதசி போய்விடப் போகிறது; பகவத் ஆராதனமே முடியவில்லை; இன்னும் நிவேதனம் ஆகவேண்டும்; திரயோதசி வந்துவிடும் போலிருக்கிறது என்றால், சாளக்கிராம அபிஷேக தீர்த்தம் பருகலாம் என்று சாஸ்திரமே சொல்கிறது.

''வெறும் தீர்த்தம் என்பதாலே பாரணை பண்ணாத பலனையும் கொடுக்கும்; பாரணை பண்ணியதாகவும் ஆகும். ஆகையினால் அதற்கு தோஷமில்லை...'' என்று வசிஷ்டரே சொல்லி விட்டார். "நீ துளஸி தீர்த்தம் பாரணை பண்ணிவிடு. அதிதி உபசரணையும் கெடாது; விரதமும் கெடாது.''

அவன், அவர் வார்த்தையைக் கேட்டுக் கொண்டு மூன்று உத்திரிணி ஜலம் சேர்த்துக் கொண்டு பிராசனம் பண்ணி னானோ இல்லையோ... போகிறபோது மெள்ளப் போன துர்வாசர், வருகிறபோது அப்படித் திடீரென்று தோன்றினார்!

வந்தவர், ''அதிதியாய் என்னை வரித்து, நான் வருவதற்குள்ளாகவே சாப்பிட்டு விட்டாயா, நீ! பெரிய சக்ரவர்த்தி என்ற நினைப்பு உனக்கு! அதனால்தான் இந்தக் காரியத்தைப் பண்ணினாய். இப்போதே உனக்குப் பலனைக் காட்டுகிறேன் பார்...'' என்று தலையிலிருந்து ஜடையை எடுத்து தரையிலே ஓர் அடி அடித்தார். உடனே அதிலிருந்து பிரும்மாண்டமான ஒரு பூதம்! கையிலே கத்தியோடு எதிரில் வருகிறது அந்த பூதம்! அம்பரீஷனை நோக்கி வருகிறது.

ஆனால் ஓர் அடியாவது அவன் பின்னால் எடுத்து வைக்க வேண்டுமே!

தான் தப்பு பண்ணியிருந்தால் பூதம் தன்னை அழிக்கட்டும் என்று இருந்தான். இப்படிப்பட்ட மகானிடத்திலே அபசாரப் படும்படியாக ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்டான்...

பூதம் கிட்டே வந்தது....

(தொடரும்)



அவன் - அவள் - அவர்கள்.

அவன் என்றால் மூன்று அவன்கள். அஜய்ரத்னம், கௌதம், சேத்தன்.

அவள் என்றாலும் மூன்று அவள்கள் - பிரியா ராமன், அனு ஹாசன், ரேகா.

இந்த ஆறு பேரும், மற்ற கேரக்டர்கள் எல்லாருமாய்ச் சேர்த்தால் அவர்கள்.

இது ராடன் டீவி. தயாரித்துக் கொண்டிருக்கும் 52 வார டெலிவிஷன் தொடர்.

சிவப்பு ரோஜாக்கள் படத்தில் வந்த அழகான வீடு. பெயர் ரெட்ரோஸ் ஹவுஸ். அங்கேதான் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

"கதையில், வில்லன் என்று யாருமே கிடையாது. ஆனால் இன்றைய படப்பிடிப்புக்கு வில்லன் உண்டு! சுட்டெரிக்கும் சூரியன்தான் அது" என்று ஜோக் அடித்தார் டைரக்டர் ஜெரால்ட்.

எட்டு அடிக்கு எட்டு அடி, வெள்ளை நிற சில்க் துணியை ரிப்ளெக்டர் போலப் பயன்படுத்தினார்கள்.

பிரியா ராமனின் தலைமுடியைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள ஒருவர், விசிறியால் விசிறி விட ஒருவர், வெயில் படாமல் குடை பிடிக்க ஒருவர்!

சினிமாவில் அதிகம் வராத பிரியா ராமனுக்கு இந்தத் தொடரில், சினிமா நடிகை கேரக்டர். நெம்பர் ஒன் இடத்தில் இருக்கிறார். அப்போது ஒரு தொழிலதிபர் இவரைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிக்கிறார். இந்தத் தருணத்தில் கல்யாணம் செய்து கொண்டால், திரை வாய்ப்புகள் பாதிக்கப்படுமோ என்று கவலை. இந்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டால், வேறு ஒரு நல்ல மனிதர் தமக்கு வாழ்க்கைத் துணையாகக் கிடைப்பாரா என்ற குழப்பம்.

அண்ணன் சந்தான பாரதியைச் சந்தித்து ஆலோசனை கேட்கிறார். "எங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, வீட்டை விட்டு ஓடி சினிமா நடிகையானவள்தானே நீ? இப்போது மட்டும் ஏன் என்னிடம் வருகிறாய்?" என்று சீறி விழும் அண்ணன்.

அண்ணி, "நல்ல வாய்ப்பு! நழுவ விடாதே! கல்யாணம் பண்ணிக் கொள்! அண்ணனின் கோபம் தானாகத் தணிந்து



# நிர்ணயம் தீசுகுன்னாவா?

விடும்" என்று ஆலோசனை சொல்லும் காட்சி.

அவன் - அவள் - அவர்கள் தொடர் ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று மூன்று மொழிகளிலும் எடுக்கப்படுகிறது. இதுபோல எடுக்கிறபோது, ஒரே தடவையில் காட்சியை எடுத்துவிட்டு, மூன்று மொழிகளிலும் டப்பிங் பேசி விடுவதுதான் வழக்கம். ஆனால் இந்தத் தொடரின் ஒவ்வொரு காட்சியையும் மூன்று தடவை படம்பிடிக்கிறார்கள்!

தமிழ் வசனக் காட்சி முடிந்ததும், தெலுங்கு வசனகர்த்தா வந்து, "நீனு வெல்லி குறிஞ்சி நிர்ணயம் திசுகுன்னாவா?" என்று தெலுங்கில் வசனம் சொல்லிக் கொடுக்கிறார். அதன்பின் மலையாளம். இதில் தமாஷ் என்னவென்றால், பிரியாராமனுக்கு, மூன்று மொழிகளிலுமே ஒரிஜினல் வாய்ஸ் கிடையாது. டப்பிங்தான்!

மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் டைரக்டர் ஜெரால்டு, மதுரைக்காரர். அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் முடித்தபின், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் ஜர்னலிசம் படித்து விட்டு, சினிமாவுக்கு வந்தவர். டைரக்டர் மகேந்திரனுடன், சில டி.வி. சீரியல்களிலும் பணிபுரிந்த அனுபவம் உண்டு. இவரைப் பிரபலமாக்கியது மந்திர வாசல் தொடர்தான். ஆனால், இடையில் அடிதடி என்று பரபரப்பாகி, அதிலிருந்து விலகும்படி ஆகிவிட்டது.

அடுத்தது இந்தத் தொடர் இயக்க வாய்ப்பு. ராதிகா, கண்மணி சுப்பு கதை. விரைவில் மாயவேட்டை என்ற தினசரி ஒளிபரப்பாகும் மெகா தொடர் ஒன்றை இயக்கப் போகிறார். இந்திரா சௌந்தர் ராஜனின் கதை. கிரைம் திரில்லர். அது விஜய் டி.வி.யில் ஒளிபரப்பாக உள்ளது.

"இந்தத் தொடரின் டைட்டில் பாடலை மிக வித்தியாசமாகப் படமாக்கப் போகிறேன். மகாபலிபுரத்தில் படம் பிடிக்க, மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையிலிருந்து பர்மிஷன் கூட வாங்கியாகி விட்டது. பரதம், கதக் நடனக் காட்சிகளுடன், மியூஸிக் ஆல்பம் ஸ்டைலில் எடுத்து அசத்தப் போகிறேன்'' என்கிறார் இருபத்தெட்டு வயது இளைஞரான ஜெரால்டு.

வெளியில் எல்லோரையும் வெயில் சுட்டெரித்துக் கொண்டிருக்க, உள்ளே ஏ.சி. அறையில் "என்சைக்ளோபீடியா ஆஃப் ஹியூமர்'' என்ற புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார் சந்தானபாரதி.



• சந்தானபாரதி

''கமல் கூடப் பணியாற்றுவதும், டி.வி. சீரியல்களுமே போதும் என்று முடிவு கட்டி விட்டீர்களா?'' என்றால், ''சும்மா வீட்டில் உட்கார்ந்திருக்கக் கூடாது என்பது என் பாலிசி!'' என்கிறார்.

இரட்டை இயக்குனர்கள் பாரதி -

## ரிமோட்

● சன் டீவி. ஆரம்பித்தபோது, "தனியார் சானல்கள் சினிமா, சீரியல்கள் என்று பார்வையாளர்களை இழுக்கலாம். ஆனால் நியூஸ் என்றால், அது தூர்தர்ஷன்தான்! தனியார் சானல்கள் கிட்டே வர முடியாது" என்று விமர்சித்தாராம் தூர்தர்ஷன் செய்திப் பிரிவில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவர். 24 மணி நேர சன் நியூஸ் வரப் போகிறதே! இதற்கு என்ன சொல்லுவார் அவர்? என்று கேட்கிறது 'சன்' வட்டாரம்.

● கணேஷ் – வசந்த் தொடர் 'மேலும் ஒரு குற்றம்' கதையுடன் நின்று விடப் போகிறது. 'நில்லுங்கள் ராஜாவே' கதையின் படப்பிடிப்பு கூடப் பாதியில் நிற்கிறதாம். விரைவில் மெட்ராஸ் டாக்கீஸ் தயாரிக்க, மனோபாலா இயக்கத்தில், 'புன்னகை' என்ற தொடர் ஆரம்பிக்கப்படப் போகிறது.

வாகவில், வாக தமிழின் முக்கிய டைரக்டர்களுள் ஒருவராகிவிட்டார். (சந்தான) பாரதி எங்கே தடம் தவறினார்?"

"இரண்டு பேரும் ஒன்றாகப் படம் பண்ணினோம். பிரச்னை ஏதும் இல்லாமல், தனித்தனியாக ஒர்க் பண்ணலாமே என்று பிரிந்தோம். இரண்டு பேரும் இப்போது பிஸி!"

"மீண்டும் படம் இயக்கும் எண்ணம் இருக்கிறதா?"

"நல்ல சப்ஜெக்ட் எடுத்துப் பண்ண வேண்டும் என்ற ஐடியா இருக்கிறது."

"இன்றைய டீவி. நிகழ்ச்சிகள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"சினிமா போல, பி.சி. சென்டர் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டியது இல்லை என்கிற நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, இன்னும் பல புதிய முயற்சிகளில் இறங்கலாம். ஆனால் சினிமா, தொடர்கள் என்கிற வட்டத்தைத் தாண்டி வர மாட்டேன் என்கிறார்கள். பாலுமகேந்திரா, சிறுகதைகளைப் படமாக்குவது மிக நல்ல முயற்சி. இதுபோல நிறையப் புதுமுயற்சிகள் செய்து பார்க்க வேண்டும்."

சரி! தொடரின் கதை என்ன?

மூன்று பெண்கள். சினிமா நடிகை, குடும்பத் தலைவி, சேல்ஸ் பெண்மணி. மூன்று ஆண்கள். தொழிலதிபர், பிசினஸ் மேன், எலெக்டிரிஷியன். மூன்று பெண்களையும், மூன்று ஆண்கள் வஞ்சித்து விடுகிறார்கள். வஞ்சிக்கப்பட்டவர்கள், விஸ்வரூபமெடுத்துப் பழிவாங்குகிறார்கள்.

ஆறு கேரக்டர்கள்! அறுபது கிளைக் கதைகள்! போடு சக்கை!

ஸ்கிரிப்ட் : **கௌதம்ராம்**
கேமரா : **ஸ்ரீஹரி**

## நன்கொடையாக ஷேர்கள்!



ஜெயலக்ஷ்மி மேன்ஷன்– திருவல்லிக்கேணியிலோ டி.நகரிலோ இருக்கும் பேச்சலர் குடியிருப்பு அல்ல இது. மைசூரின் பழங்கால கட்டடங்களுள் ஒன்று. அதைப் பழுது பார்த்துப் பராமரிக்க அதன் உரிமையாளர்கள் திணறிக் கொண்டிருந்தனர்.

உரிமையாளர்கள்...? மைசூர் பல்கலைக்கழகம்!

'ஜெயலக்ஷ்மி'க்கு வாழ்வு கொடுக்க முடிவு செய்தார் சுதா. தம் கணவர் நடத்தும் கம்பெனியின் ஆயிரம் பங்குகளை ஜெயலக்ஷ்மி மேன்ஷன் பராமரிப்புக்கென பல்கலைக்கழகத்திடம் வழங்கினார். ப.கவும் ஷேர்களை விற்றது. பெற்ற தொகையில் 1.17 கோடி ரூபாய் பழுது பார்ப்பதற்குச் செலவாகும். மீதிப் பணம் பராமரிப்புக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

"இது போன்ற கட்டடங்களைக் காப்பாற்றுவது உயர்ந்த சாதனை" என்று கூறும் சுதாவின் கணவருக்குச் சொந்த ஊர் மைசூர். கணவர்...? இன்போஸிஸ் நாராயணமூர்த்தி!

நன்றி: **பிஸினஸ் லைன்**

# 250 ஆம் ஆண்டு விழா கண்ட கொல்லிமலை பச்சிலை மூலிகை சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் முகாம்கள்



பலவகை ஊசி மருந்துகள் சாப்பிட்டும் குணமாகாத நாள்பட்ட வியாதிகள் எனப்படும் ஆஸ்துமா, பக்கவாதம், சர்க்கரை நோய், இருதயம், ஈரல், கிட்னி சம்மந்தமான நோய்களுக்கும், குஷ்டம் சம்மந்தமான வியாதிகள், குழந்தைகள் வியாதிகளுக்கும், கொல்லி மலை பச்சிலை மூலிகை மருந்துகள் கொடுத்துக் குணப்படுத்தப்படும்.

குறிப்பு – குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கும், ஆண் – பெண் மலடுகள் நீக்கி சந்தான பாக்கியம் பெறவும் கொல்லிமலை பச்சிலை மூலிகை மருந்துகள் தரப்படும்.

சென்னை : 13.5.2000, 14.5.2000 சனி, ஞாயிறு இரண்டு நாட்கள், சாமராவ் ஆரம்பப்பள்ளி, சிங்காரச்சாரி தெரு, ஸ்ரீ பார்த்தசாரதி கோயில் அருகில், திருவல்லிக்கேணி, சென்னை – 5. போன் : 044–8411097

காஞ்சிபுரம் : 15.5.2000, திங்கள் ஒரு நாள் மட்டும் பாக்கியம் எல்லப்பனார் திருமணக்கூடம், பேனாமுனை அச்சகம் (தேரடி) 212, காந்திஜி ரோடு, சின்ன காஞ்சிபுரம்.

வேலூர் : 16.5.2000, செவ்வாய் ஒரு நாள் மட்டும் ஆசிரியர் இல்லம், பில்டர்பெட் ரோடு, (தெற்கு போலீஸ் ஸ்டேசன் ரோடு), வேலூர் – 1. போன் : 27162

நாமக்கல் : 17.5.2000, புதன் ஒரு நாள் மட்டும் வீனஸ் பேலஸ் காம்ப்ளக்ஸ் முதல் மாடியில் (டவுன் பஸ் நிலையம் எதிரில்) 34C, நந்தவனத்தெரு, நாமக்கல், போன் : 21880

கோயம்புத்தூர் : 20.5.2000, 21.5.2000 சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் மோஸஸ் ஞானாபரணம் கண் மருத்துமவனை, பெரிய கடை வீதி (ராயல் தியேட்டர் அருகில்) கோயமுத்தூர், போன் : 397274

ஈரோடு : 24.5.2000, 25.5.2000 புதன், வியாழன் இரண்டு நாட்கள் ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, வ.உ.சி. பூங்கா ரோடு, பஸ் நிலையம் அருகில், ஈரோடு. போன் : 226611

திண்டுக்கல் : 26.5.2000 வெள்ளி ஒரு நாள் மட்டும் ஸ்ரீ ராஜலக்ஷ்மி திருமண மண்டபம், திருவள்ளுவர் சாலை, கணேஷ் தியேட்டர் அருகில், ஆர்.எஸ். ரோடு, திண்டுக்கல் – 3.

மதுரை : 27.5.2000 சனி, ஒருநாள் மட்டும் நியூ காலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு, பெரியார் பஸ் நிலையம் அருகில், மதுரை – 1.

திருநெல்வேலி : 28.5.2000 ஞாயிறு ஒரு நாள் மட்டும், தெற்கு தெரு, இந்து ஆரம்பப் பள்ளி, வாகையாடியம்மன் கோவில் அருகில், (திருவள்ளுவர் சிலைக்கு அருகில்) திருநெல்வேலி டவுன்.

பாண்டிச்சேரி : 1.6.2000 வியாழன் ஒரு நாள் மட்டும், புதுவை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், 217(129), அம்பலத்தாடையார் மடத்து வீதி (கொசக்கடை வீதி), ராஜா தியேட்டர் அருகில், பாண்டிச்சேரி – 1.

நெய்வேலி : 2.6.2000, புதன் ஒரு நாள் மட்டும், தெலுங்கு சமிதி, ஜனதா தள அலுவலகம் எதிரில் தேவி ரத்னா தியேட்டர் அருகில், மெயின் பஜார், நெய்வேலி.

திருச்சி : 3.6.2000, 4.6.2000 சனி, ஞாயிறு இரண்டு நாட்கள் ஸ்ரீ ராமகிருஷ்ணா ஆரம்ப பாடசாலை, அருணா தியேட்டர் அருகில், உறையூர், திருச்சி – 3.

தஞ்சாவூர் : 5.6.2000 திங்கள் ஒரு நாள் மட்டும், யூனியன் கிளப் ஹவுஸ் (மேல்மாடி), பழைய பஸ் நிலையம் எதிரில், தஞ்சாவூர். போன் : 30411

கும்பகோணம் : 6.6.2000 – செவ்வாய் ஒரு நாள் மட்டும், அரண்மனைச் சத்திரம் மாமாங்க குளம், மேலக்கரை, கும்பகோணம்.

**Rtn. Dr. P.M. செல்வராசு, அரசு பதிவுபெற்ற மருத்துவர்**
**கொல்லிமலை அன்னை வைத்தியசாலை சேவை நிலையம்**
**தபால் பெட்டி எண். 5, புஞ்சை புளியம்பட்டி – 638 459. ஈரோடு மாவட்டம்.**
**பேக்ஸ் – போன் : (04295) 67277**



டாக்டர் இவர அவர்களை சந்திக்க முடியாதவர்கள் ரூ. 3.00 அஞ்சல் தலை ஒட்டி, சுயவிலாசமிட்ட கவர் வைத்து, தங்கள் வியாதிகள் பற்றி மேற்கண்ட முகவரிக்கு எழுதுங்கள். இலவச ஆலோசனை சொல்லப்படும்.



"இட்லில என்னப்பா வண்டு...?"
"பூ மாதிரி இருக்கா.... அதான் தேன் குடிக்கலாம்னு நினைச்சு வந்திருக்கும், சார்!"
— சீர்காழி வி. ரேவதி
"வாஸ்தவம்தான் மாயாண்டி! எங்களுக்கு நிறைய உதவியிருக்கே! அதுக்காக போலீஸ் ஸ்டேஷனுக்கு 'மாயாண்டி மாளிகை'ன்னு உன் பேரை வைக்கச் சொல்றது நியாயமில்லே..."
— தஞ்சை தாமு
"நா எழுதினது பொய்க் கணக்குன்னு ஹைவேஸ் ஆடிட்ல எப்படிக் கண்டுபிடிச்சாங்க?"
"ஆமா! ரோடு ரோலர்க்கு பஞ்சர் ஒட்டியதுன்னு கணக்கு எழுதினா தெரியாம போயிருமா!"
— பி. நிர்மலாதேவி
"சமைக்கும் போது நீயும் எங்க அம்மாவும் சண்டை போட்டுக்கிட்டீங்களா...?"
"ஆமா... ஏன் கேக்கறீங்க?"
"சாப்பாட்டுல கருப்பு முடியும் வெள்ளை முடியும் சகட்டுமேனிக்கு கிடக்கேன்னு கேட்டேன்!"
— சீர்காழி வி. ரேவதி



"டாக்டர் ஏன் கோபமா இருக்கார்?"

"ஆபரேஷன் தியேட்டருக்குப் போற வழில யாரோ 'ஒரு வழிப் பாதை'னு எழுதிப் போட்டுருக்காங்களாம்!"

— அம்பை தேவா



"அந்தக் கால்நடை டாக்டருக்கு இருந்தாலும் ரொம்ப தற்பெருமை!"

"எப்படி?"

"அவரோட முன்னோர்கள் டினோசருக்கே வைத்தியம் பார்த்ததா அளப்பாரு!"

— பா. ஜெயக்குமார்

# ... ஜோக்கிரதை!




"ஜோக்ஸுக்குக் கூட இவ்வளவு சக்தி இருக்கும்னு சத்தியமா நான் எதிர்பார்க்கலை சார்."

"என்னங்க விஷயம்?"

"மும்பை தாதா ஒருத்தன், 'ஜோக்ஸ் எழுதறதை நிறுத்தாட்டி உன்னைக் கடத்திடுவேன்'னு மிரட்றானே சார்!"

— சீர்காழி வி. ரேவதி



"இந்தியாவில ஏகப்பட்ட மொழிகள் இருக்கறது ரொம்ப நல்லதாப் போச்சு!"

"ஏன்?"

"தமிழ்ல படம் இல்லேன்னா, தெலுங்குல பிஸின்னு சொல்லிக்கலாமே!"

— எஸ். முகம்மது யூசுப்



**ம**வுண்ட்ரோடு. கொளுத்தும் வெயில். வடி யும் வியர்வையை கர்சீப்பால் துடைத்து விட்டு திரும்பிப் பார்த்தால் ஸ்பென்சர் பிளாசா! ஏ.சி. ஞாபகத்துக்கு வர, 'ஜில்'லுக்காக உள்ளே நுழைந்தோம். உள்ளே போனால் ஏகப்பட்ட இளசுகள். "இந்த உச்சிவெயில்ல பர்சேஸ் பண்ண இவ்ளோ பேரா?" – சந்தேகம் அப்பிக் கொள்ள யாரையாவது இருவரை 'நோட்' பண்ணுவது என்று முடிவெடுத்தோம். கூடவே நமது 'லென்ஸ்'காரரும்.

**வி**யர்வையால் குளித்திருந்த இரண்டு பேர் நம்மைப் போலவே உள்ளே நுழைந்து, சென்ட்ரலைஸ்டு ஏசியில் மூச்சு விட்டபடி நின்றிருந்தனர். கடைக்காரப் பெண்மணி, "மே, ஐ ஹெல்ப் யூ சார்?" என்றார். ஒருவர் முகத்தை ஒருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டபின்.. "இங்கே ஜீன்ஸ் ஷாப் எங்கேயிருக்கு?" என்றனர்.

"அதோ பாண்டலூரன்" என்றதும் இருவரும் வேறு வழியின்றி கடைக்குள் நுழைந்தனர்.

"வெல்கம் சார்.. " என்று கடைக் காரர் வரவேற்றதும் நமக்கும் வயிற்றுக்குள் புளி கரைந்தது. காரணம் பாக்கெட்டில் பத்து ரூபாயும் பஸ் பாசும்!

"என்ன பாக்குறீங்க சார்" என்றதும் இருவரும் ஜீன்ஸ் என்றனர்.

"சார் இது புது பிராண்ட் 'ஹார்ட் தீவ்ஸ்; ரொம்ப ரொமான் டிக்கா இருக்கும்."

"என்ன விலை?"

"தவ்சன் எய்ட் பிப்டி" என்றதும் இருவரில் ஒருவர் நெஞ்சைப் பிடித்துக்கொள்ள..

"டேய் என்னாச்சு?" – மற்றவர் பதறினார்.

"வயித்த வலிக்கற மாதிரி இருக்குது."

"இரு இரு நானும் வந்துடுறேன்" என்றபடி இருவரும் நழுவ, நாமும் ஜூட்!

**ரி**சப்ஷனை ஒட்டியிருந்த லாபிக்கு திரும்பவும் வந்தோம். அங்கே கொட்டிக்கொண்டிருந்த செயற்கை நீரூற்றைச் சுற்றி, காதல் ஜோடிகள், இளைஞர்கள், இளைஞிகள் என கையில் குளிர்பானம், ஐஸ்கிரீம் சாப்பிட்டபடி குழுமியிருந்தனர்.

"இங்க வர்ற கஸ்டமர்ஸ்ல வேடிக்கை பார்க்க வர்றவங்க பாதி பேர். சன்னிங்ஸ்ல இளைஞர்கள் நிறைய வர்றதுனால, பொழுதுபோக்குறதுக்கு இப்போ பில்லியர்ட்ஸ் ஆரம்பிச்சுருக் காங்க. வீடியோ கேம்ஸ், ஸ்னோபௌலிங் இதெல்லாம் சீக் கிரம் ஆரம்பிக்கப் போறாங்க" என்றார் சீஃப் செக்யூரிட்டி ஆபீசர் கண்ணன். அவரிடம் 'பை' சொல்லி விட்டு நகரும் படிக்கட்டை நோக்கி ஒரே ஓட்டம். காரணம், அதில் நாம் மிஸ் செய்த இரு வர் கூட்டணி முதல் தளத்தை நோக்கிப் போய்க் கொண் டிருந்தது.

முதல் தளத்தில் 'மியூசிக் வேல்டு' கேசட் கடைக்குள் நின்று கொண்டிருந்த இருவரையும் நெருங்கி நோட்டம் விட்டோம்.

"டைட்டானிக் படத்தோட ரீரெக்கார்டிங்(?) இருக்கா?"

"சிடி இருக்கு.."

"சாரி எங்களுக்கு கேஸட்தான் வேணும்."

அதற்குள் நமது தோள் பட் டையை ஒரு கரம் பற்றித் திருப்பி, "என்ன கேஸட்?" என்றது.

நண்பர் அறையில் பார்த்த ஒரு ஆங்கிலக் கேஸட்டின் ஞாபகம் வந்தது.

"ஹாலிடே ஹிட்ஸ்" என்றதும் ஊழியர் "எத்தனையாவது வால் யூம்" என்றார்.

எச்சில் விழுங்கியபடி 'வால் யூம் நம்பர்' சொல்ல வாயெடுக்கும் நேரத்தில் உள்ளிருந்து ஊழியருக்கு அழைப்பு வர, அவர் உள்ளே ஓட நாம் கடைக்கு வெளியே ஓடி னோம். வெளியே நின்றபடி 'இரு வரையும்' ரகசியமாக கவனிக்க, காதில் இயர்போன் மாட்டிக் கொண்டு 'சாம்பிள்' கேட்டபடி உடலை மெல்ல அசைத்து டான்ஸ் செய்து கொண்டிருந்தனர். நமக்கு வயித்தெரிச்சல்! கொஞ்ச நேரத் தில் கேஸட் எதுவும் வாங்காமல் வெளியே வந்த அவர்கள், அடுத்து நுழைந்தது ஒரு ஷூ கடைக்குள்! செருப்புக் காலுடன் ஷூ கடைக் குள் நுழைவதற்கு ஒரு தைரியம் வேண்டும். நாமும் நுழைந்தோம். லேட்டஸ்ட் ஷூ வகையறாக்களை அணிந்து கடைக்குள்ளேயே நடை



பழகிப் பார்த்துவிட்டு நாளைக்கு வர்றோம் என்றனர். அடுத்து அவர்கள் நுழைந்தது பில்லியர்ட்ஸ் கிளப்.

"இவ்ளோ பெரிய ஷாப்பிங் காம்ப் ளெக்ஸ்ல நம்ம ரேஞ்சுக்கு எதுவுமே இல் லப்பா.. வெரி பேட்."

"ரொம்ப கரெக்ட்! பாக்கெட்ல ஐம்பது ரூபாயை வெச்சுக்கிட்டு பல பேருக்கு அல்வா குடுத் துட்டோம்."

"இப்போ பில்லியர்ட்ஸ் காரனுக்கு என்னத்தைக் குடுக்குறது?"

"அதுக்கும் வழி கிடைக் கும் வா.. என்றபடி கிளப் உள்ளே நுழைந்து, அங்கே ஒரு டேபிளில் ஆடிக் கொண்டிருந்த இரண்டு பேரையும் 'இந்த' இருவரும் கவனிக்கத் தொடங் கினர். இடையிடையே பந்து விழும்போதெல்லாம் கைதட்டி அவர்களைப் பாராட்டவும் செய்தனர். ஆடிக் கொண்

# ...தி வந்தீங்க!

டிருந்தவருக்குத் திடீ ரென செல்போன் வர, "ஹலோ ஜென் டில்மேன். அவசரமாப் போகணும். நாங்க த்ரி அவர்ஸுக்கு டோக்கன் வாங் கிட்டோம். இன்னும் ஒரு மணி நேரம் மீதம் இருக்கு. நீங்க ஆடுங்க' என்று அவர்கள் கிளம்பிப் போக 'இருவருக்கும்' பயங்கர சந்தோ ஷம். கையில் குச்சியை வைத்துக் கொண்டு, எப்படியெல்லாம் விளையாடக் கூடாதோ அப்படி யெல்லாம் விளையாடிக் களைத் தனர். பின்னர் அங்கிருந்து புறப் பட்ட 'இருவரும்' திரும்பவும் லாபிக் குள் பிரவேசித்து ஆளுக்கொரு கோக் பானத்தை அருந்திக் கொண்டிருந் தனர். நாம் அருகில் சென்றதும் அவர்களுக்கு ஒரு வழியாக உரைத்தது.



"ஆமா நீங்க ரொம்ப நேரமா எங்களை ஃபாலோ பண்றீங் களே?" என்றதும் அதெல்லாம் இல்லை என்பது மாதிரி ஒரு அசட்டுச் சிரிப்பை உதிர்த்து விட்டு ஒரு கேள்வியைக் கேட் டோம்..

"எங்களுக்குத் தெரிஞ்சு கோக்கைத் தவிர நீங்க எதுவுமே வாங்கலியே?" என்றோம்.

'வெயில்'. ஜில்லுனு ஏசி. அதான் 'குளிர'ாடிட்டுப் போகலாம்னு வந்தோம்" என்ற வர்கள் கலைக்குமார், முருகன். மௌண்ட் ரோடில் கட்டப்பட்டு வரும் ஒரு கட்டிடத்தில் சைட் சூப்பரவைசர்கள்... தினசரி இங்கே காத்து வாங்கி விட்டு மாலை ஆபீசில் கையெழுத்துப் போட்டு விட்டு எஸ்கேப் ஆகி விடுவார்களாம்..

வாழ்க ஸ்பென்சர்!

— **வால்பையன்**

படங்கள்: **வெங்கடேஷ்**



# பத்திக்கிட்டு வருது!

அரசாங்க மருத்துவமனைகளைப் பற்றி அவதூறு பேசுபவர்களைப் பார்த்தால் எனக்கு பற்றிக் கொண்டு வரும். அதை மட்டமாகப் பேசுவது ஒரு ஃபாஷனாகவே ஆகிவிட்டது.

## காச்மூச்

நான் இராயப்பேட்டை மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைகளில் ஹவுஸ்சர்ஜனாக இருந்தவள். பல தனியார் மருத்துவமனைகளையும் பார்த்தவள். அரசு மருத்துவமனைகளில் இருக்கும் வசதிகள் போல வேறு எங்கேயும் இல்லை என்பது என் தீர்மானமான அபிப்பிராயம்.

ஆனால் நம்மவர்கள் அங்கே நடந்து கொள்ளும் முறை?

வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டு வேலை மெனக்கெட்டு தரையில் துப்புவது, பாத்ரூமைப் பயன்படுத்தினால் தண்ணீர் ஊற்றாமல் வந்து விடுவது, இப்படி சுற்றுச்சூழலை இவர்களே சீர் குலைத்து விடுகிறார்கள்.

இந்த மருத்துவமனைகளில் சுவர்கள் கறை படிந்திருப்பதற்கும், கழிவறைகள் காவி படிந்திருப்பதற்கும் அரசாங்கமா பொறுப்பு?

நான் ஹவுஸ் சர்ஜனாக இருந்தபோது பதினைந்து நாளாக எங்கோ தெருவில் கேட்பாரற்றுக் கிடந்த ஒருவரைக் கொண்டு வந்தார்கள். நெருங்கவே முடியாதபடி முடை நாற்றம் அடித்தது! தனியார் மருத்துவமனைகளின் வெளிப்புற கேட் அருகே கூட அவரை அனுமதித்திருக்க மாட்டார்கள். ஆனால் நானும் மற்றவர்களும் அந்த நாற்றத்தைச் சகித்துக் கொண்டு அவருக்குச் சிகிச்சை அளித்தோம்.

ஆனால் நோயாளிகளின் உடன் வருகிறவர்களும் தங்கியிருப்பவர்களும் வார்டையும், சுற்றுப்புறத்தையும் அசிங்கப்படுத்துவதை என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. கண்ணில் பட்டால் காச்மூச் என்று கத்தி விடுவேன்.

கட்டணம் இல்லை அல்லது குறைவு என்பதாலேயே அரசாங்க மருத்துவமனைகள் மட்டமானவை; நிறையப் பணம் வாங்குகிறார்கள், அதனால் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சையும் சிறப்பாக இருக்கும் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்பவர்களை எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் கோபித்துக் கொள்ளலாம்; தகும்!

சந்திப்பு: **ராணிமைந்தன்**

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

# ANNAMALAI UNIVERSITY

## DIRECTORATE OF DISTANCE EDUCATION

## AND

# APTECH

## Join hands to bring you

# B.DIT.

## A Bachelor's Degree in Development and Information Technology

Applications are invited for admission to **B.DIT. Degree Course** for Calendar Year 2000 through Distance Education mode.

Duration: **Three years**, Eligibility: **A pass in 10 + 2 or equivalent examination**

Cost of Application Form: **Rs.100/-**

**Application form and prospectus can be had from the Director, Directorate of Distance Education, Annamalai University, Annamalainagar - 608 002** on requisition along with a crossed Demand Draft drawn in favour of the Director, D.D.E., Annamalai University on any bank at Annamalainagar/Chidambaram, mentioning clearly the name of the course and a self-addressed cover of size 27 cm x 21 cm. **Cheques, Postal Orders and Money Orders are not accepted.** Demand Draft should have been purchased on or after **01.03.2000.**

Applications can also be had in person on cash payment from the Directorate of Distance Education and the following Study Centres and Information Centres of the Directorate and from Aptech Computer Education Centres in Tamil Nadu.

Those who want to get **applications by post** should apply to the **Directorate only** and not to the Study Centres.

All the Study Centres and Information Centres except that at Annamalainagar will remain open on all days except Tuesdays, Second Mondays and all other public holidays.

| | |
|---|---|
| Last date for issue of application form | **24.05.2000** |
| Last date for receipt of filled in applications | **31.05.2000** |

**APTECH**
**COMPUTER EDUCATION**
www.aptech-education.com
**We *change* lives**

**B.DIT. – a graduate degree with focus on the latest in IT designed to ensure a successful career.**

**– a three-year distance education program with modules and latest software technologies to help the graduate meet industry's demands at his/her doorstep.**

**THE Graduate with IT Skills**
**PROGRAM**

PLACE: Annamalainagar
DATE: 05.04.2000

**Dr. L.B. VENKATRANGAN**
Director

**STUDY CENTRES:** (1) **CHENNAI:** (✆ 8555010); (2) **TIRUCHI:** (✆ 760650); (3) **SALEM:**(✆ 419660); (4) **NAGERCOIL:**(✆ 30561); (5) **TIRUNELVELI:** (✆ 572923); (6) **VELLORE:** (✆ 227647); (7) **MADURAI:**(✆ 628327); (8) **COIMBATORE:** (✆ 234406); (9) **KARAIKUDI:** (✆ 26417) (10) **NEW DELHI:** (✆ 6087638); (11) **CALCUTTA:** (✆ 4667215); (12) 138, G.S.T. Road, (Opp. to Vetri Theatre), Chrompet, Chennai - 600 044; (13) 27, North Park Street, Venkatapuram, Ambattur, Chennai - 600 053. All APTECH Computer Education Centres in Tamil Nadu.


BROWN & POLSON
FreshDelite
ஃப்ரூட் விட்டமின்களின் மற்றும் குளுகோஸின் நற்குணங்களை சுவைத்து மகிழுங்கள்.
ஒவ்வொரு தினமும், ஒவ்வொரு முறை பருகும்போதும்.
BROWN & POLSON
FreshDelite
Instant Orange Drink Powder
அறிமுகம் பிரவுன் & போல்ஸன்
வழங்கும் ஃப்ரெஷ்டிலைட்.
இயற்கை ஆரஞ்சு துகள்களைக் கொண்ட ஒரு புதிய இன்ஸ்டன்ட் ஆரஞ்சு ட்ரிங்க். பறித்தெடுத்து பிழிந்த ஆரஞ்சு சாறைப் போன்ற சுவை தரும் பானம். மேலும் என்ன, ஒவ்வொரு முழுமையான கிளாஸ் பானம் உங்கள் குழந்தையின் அன்றாட தேவையில் 50 சதவீதத்தை பராமரிப்பதோடல்லாமல், மற்ற 11 அத்தியாவசிய விட்டமின்கள் மற்றும் மினரல்களையும் வழங்குகிறது. உங்கள் குடும்பம் முழுவதற்கும் 100 சதவீத புத்துணர்வை வழங்க.
புத்துணர்வு. புதுமலர்ச்சி.
புளகாங்கிதம் !
200 கிராம் விலை ரூ 29.50
(9-10 கிளாஸ் பானம்
தயாரிக்கலாம்)